விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 23 ஞாயிற்றுக்கிழமை (06.05.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138

# இலஞ்சம், ஊழல், மோசடிகளை இல்லாதொழிக்க

# கடுமையான தீர்மானங்களை அரசாங்கம் மேற்கொள்ளும்

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு



(கொழும்பு) அரச சேவையிலும் ஏனைய சகல துறைகளிலும் காணப்படும் இலஞ்சம், ஊழல், மோசடி என்பவற்றை தடுப்பதற்கும் அவற்றை முற்றாக இல்லாதொழிப்பதற்குமான சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார். (16-ம் பக்கம் பார்க்க...)

## வாள்வெட்டுடன் தொடர்புடைய ஐந்து இளைஞர்கள் கைது

### வாள்வெட்டுக்கு தயாரான நிலையில் சுன்னாகம் பொலிஸார் அதிரடி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பரவலாக இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 5 இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து வாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், கைதடி, நுணாவில் மற்றும் வவுனியா ஆகிய இட 16

## ஊர்காவற்றுறை பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டு

### திருட்டு சந்தேக நபரை கைது செய்ய சென்றவேளை சம்பவம்

(யாழ்ப்பாணம்)

திருட்டு சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்பட்ட நபர் ஒருவரை கைது செய்ய சென்ற பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் ஒன்று ஊர்காவற்றுறை பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரை வாளால் வெட்டிய சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் படுகாயமடைந்த பொலிஸார் யாழ் போதனா வைத்திய 15

## பெற்றோல், டீசல் விலைகளை அதிகரிக்க அமைச்சரவை ஒப்புதல்!

(கொழும்பு)

பெற்றோலின் விலையை 20 ரூபாயாலும் டீசலின் விலையை 12 ரூபாயாலும் அதிகரிப்பதற்கு ஏதுவாக விலை சூத்திரம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. 16

## வடக்கில் இன்று வெப்பமாம்!

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் 15

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக சத்தியசீலன் நியமனம்



வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக சத்தியசீலன் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். 03

## தமிழ் நாட்டிலிருந்து சட்டவிரோதமாக தாயகம் திரும்பிய 12 ஈழ அகதிகள் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் தமிழ்நாட்டில் இருந்து சட்டவிரோதமான முறையில் தாயகம் திரும்பிய ஈழ அகதிகள் 12 பேர் உட்பட 14 பேர் நேற்று அதிகாலை இலங்கை கடற்படையினரால் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். 15



## "மே-7" தனியாருக்கு விடுமுறையில்லை!

### அரச அறிவிப்பால் குழப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் மே 7-ம் திகதி தனியாருக்கு விடுமுறை என்பது தொடர்பில் வர்த்தமானி அறிவிப்பு வெளியாகவில்லை என 15

## 17.6 கிலோ கிராம் கஞ்சா பொதி பருத்தித்துறை கடலில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கடற்பரப்பில் 17.6 கிலோ கஞ்சா பொதி நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் தேடுதல் மேற்கொண்டிருந்த கடற்படையினர் பருத்தித்துறை கடற்பரப்புக்கு அண்மையில் மிதந்து 15

## வடக்கு, கிழக்கு முழுவதையும் சிங்களவர்கள் கைப்பற்றுவார்கள்

### மனித உரிமைகள் சட்டத்தரணி அனுராதா மிட்டால் எச்சரிக்கை



(ஒட்டாவா)

வடக்கு - கிழக்கு முழுவதையும் சிங்களவர்கள் கைப்பற்றுவார்கள் என்ற தகவலை இலங்கை அரசின் போர் வெற்றிச்சின்னங்கள் அமைக்கும் செயற்பாடுகள் வெளிப்படுத்துகின்றன. 16

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடிக்க கொழும்பிலிருந்து ஏற்பாடு

### பல தரப்பிடமிருந்து பாரிய எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கட்டப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியை இடிப்பதற்கு கொழும்பிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதற்கு பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புத் தெரி 15



# பேஸ்புக் மூலம் பண மோசடி அவதானமாக இருக்குமாறு அறிவிப்பு

(கொழும்பு)

பேஸ்புக் மூலம் 20 இலட்சத்துக்கும் அதிகமான பணமோசடி இடம்பெற்றுள்ளதாக இலங்கை கணினி தகவல் அவசர பதிவுத்தளம் தெரிவித்துள்ளது.

இதனை கருத்திற்கொண்டு, முகநூல் பாவனை செய்பவர்கள் நிதி மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு தகவல் தொழில்நுட்ப பொறியியலாளர் ரோசான் சந்திரகுப்த அறிவித்துள்ளார்.

குறிப்பாக, பேஸ்புக்கில் நண்பர்களாகி ஒரு சில மாதங்களில் பிரத்தியேக குறுந்தகவல் பரிமாற்றத்தில் ஈடுபடும் சிலர் இவ்வாறான நூதனக் கொள்ளையில் ஈடுபடுவதாக தெரிவித்தார்.

வெளிநாட்டில் தாம் வசிப்பதாகக் கூறி இலங்கையிலுள்ளவர்களுக்கு பரிசுப்பொதிகளை அனுப்புவதாகவும் அதற்கான பற்றுச் சீட்டுக்களுக்கான மாதிரிகளும் அனுப்பி வைக்கப்படுவதாக தெரிவித்த அவர், அந்த பரிசுகளை பின்னர் சுங்கப் பிரிவினூடாகப் பெற்றுக்கொள்வதற்கு பணம் செலுத்த வேண்டும் என கூறி மோசடியில் ஈடுபடுவதாகவும் கூறினார். இவ்வாறு கடந்த காலங்களில் பல முறைப் பாடுகள் தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இது தொடர்பில் பாவனையாளர்கள் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## விளையாட்டுத்துறை பணிப்பாளரை பணி நீக்க அதிரடி உத்தரவு

(கொழும்பு)

விளையாட்டுப் பணிப்பாளர் நாயகம் எச். எம். பி. பி. ஹேரத்தை பணி நீக்கம் செய்யுமாறு விளையாட்டுத்துறை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் பைசர் முஸ்தபா இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடைபெற்று வரும் தெற்காசிய கனிஷ்ட தடகளப் போட்டிகளுக்காக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கும் வீர, வீராங்கனைகள் மற்றும் விளையாட்டு ஆலோசகர்களுக்குத் தேவையான தங்குமிட வசதிகளை சரியான முறையில் செய்து கொடுக்கத் தவறியதன் காரணமாகவே அவரைப் பதவி நீக்கம் செய்யத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விளையாட்டுப் பணிப்பாளர் நாயகத்தின் பணியை இடைநிறுத்தத் தீர்மானித்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)


6 மாதத்தில் 50,000 - 1 இல. சம்பளம் & வெளிநாட்டு விசா ஏற்பாட்டுடன்
புதிய அணி TOURISM & Hotel Management ஹோட்டேல் முகாமைத்துவக் கற்கை
4 MONTHS DURATION
Entry Level with FREE ENGLISH COURSE
பதிவுகளுக்கு 0777 324 004
9வது ஆண்டில் 9th Year
SIKARAM ACADEMY
Business - Hospitality - English
FAST TRACK to CAREERS
Sri Lankan Entrepreneur of the Year 2017
இல.221-1/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9 221 www.sikaram.lk
(சி-2513)



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974 ஆம் ஆண்டு, அனுசம் 2ம் பாதம், மூன்று சுற்று கிரகபாவம் 37 1/2 செவ்வாய் தோசமற்ற அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் சைவ போசனம். மணமகள் எதுவாயினும் பரவாயில்லை.

தொடர்பு:0765543724 (3863)



ICT, SCIENCE CLASSES
Gr 6 to O/L Classes (Practical)
by-Gov.School Graduated Techer
Contact-0763301231 (3868)




## விற்பனைக்கு

யாழ்.பிறவுண் வீதிக்கருகாமையில் வீடு விற்பனைக்குண்டு. காலை 10 மணிக்கு பின் பார்வையிடலாம்.

தொடர்புகளுக்கு: 0774858961, 0716274916 (3849)


## மரண அறிவித்தல்



### வைரமுத்து வைத்தீஸ்வரமூர்த்தி

(ஓய்வுநிலை கிராம அலுவலர்)

பிறப்பு:-27.12.1950

இறப்பு:04.05.2018

யாழ்.புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரம் வடக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து வைத்தீஸ்வரமூர்த்தி அவர்கள் 04.05.2018 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து-நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கௌசலா அவர்களின் அன்புக் கணவரும், காயத்திரி (வைத்திய அதிகாரி-கொழும்பு), வசீகரன் (லண்டன்), ஜனார்த்தனன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலீபன் அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி, கனகலட்சுமி (லண்டன்), நாகலட்சுமி (சுவிஸ்), பத்மாவதி (லண்டன்), காலஞ்சென்ற கணேசமூர்த்தி, திலகவதி (டென்மாக்), புண்ணியமூர்த்தி (சுவிஸ்), நடேசமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற தம்பிஜயா, இராஜேஸ்வரி, சண்முகநாதன், கோபாலபிள்ளை, காலஞ்சென்ற விஜயலட்சுமி, தர்மலிங்கம், சர்வேஸ்வரி, கௌரி (இளைப்பாறிய அதிபர், அனலைதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காவியா, அபிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2018) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் உருத்திரபுரம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.83, சக்திபுரம்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்

(சி-2511)

## மரண அறிவித்தல்



### குணசிங்கம் தவச்செல்வன்

இல.161, சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குணசிங்கம் தவச்செல்வன் அவர்கள் கடந்த 01.05.2018 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் குணசிங்கம் (வண்டன்-ஏழாலை வடக்கு)-அன்னலட்சுமி தம்பதியினரின் ஆசை மகனும், குமாரதாசன்-சத்தியபாமா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயமீரா (லண்டன்) அவர்களின் பாசமிகு துணைவரும், லவன் (லண்டன்), வாசன் (லண்டன்), சஜன் (லண்டன்) ஆகியோரின் அன்பிற்குரிய அப்பாவும், காலஞ்சென்ற சிவஞானம்-பரமேஸ்வரி, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை-பார்வதி அவர்களின் அன்பு பேரனும், தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பிரியா ஆகியோரின் உடன்பிறந்த சகோதரனும், புவிகரன், துசிகரன், இராஜேந்திரகுமார், ரவிசங்கர் ஆகியோரின் மைத்துனரும், பவதாரணி, மதுஷாலினி ஆகியோரின் பாசமுள்ள மாமாவும், துரைரத்தினம் (கனடா), காலஞ்சென்ற பத்மநாதன், தேவநாயகம், சிறிகந்தராசா (கனடா), விக்கினராசா (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரி, பத்மாவதி, இராசலட்சுமி ஆகியோரின் பெறாமகனும், மனோகரி (கனடா), இராஜசுசிலா, காலஞ்சென்ற நாகேஸ்வரன், அன்னலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம், சிவனேஸ்வரன் (லண்டன்), கோமலேஸ்வரி (லண்டன்), தயாநிதி (பிரான்ஸ்), ஜெயராணி (பிரான்ஸ்), சரவணபவன் (கனடா), கலா (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், விதுசா (லண்டன்), சௌமியா (லண்டன்) ஆகியோரின் அத்தானும், றஜிதா (கனடா), மகிபன் (கனடா), துயோன் (கனடா), துசிபன் (கனடா), துசி (கனடா), தாரகா (லண்டன்), சேந்தன், பார்த்தீபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுயந்தன் மற்றும் மயூரன், காலஞ்சென்ற சிந்துஜா மற்றும் நிறோஜா, வினோத் (கனடா), வித்தியா (கனடா), புவிதினி (கனடா), ஜனனி (பிரான்ஸ்), கீர்த்தி (பிரான்ஸ்), தயேன் (கனடா), அனந்திகா (கனடா), செல்வகுமார், றஞ்சிதமலர், அருந்தவராணி, ஜெயராணி, ஜெயலட்சுமி, ஜெயவதனி, கோகிலா, அசோக், தர்சினி, டினேஸ் ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், நிசாந்தன் (கனடா), சசி (கனடா), சுபா (கனடா), கரன், துஷானி, துஜீபன், நகுலேஸ்வரன், அனுஷன், இந்துஷாலினி, கஜேந்திரன், நிறோஜன், தர்சன், மிதுர்சன், யதுர்சன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.05.2018 அன்று அன்னார் பிறந்த இடமான இல.161, சில்வா வீதி, வட்டக்கச்சியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டக்கச்சி மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.161, சில்வா வீதி,
வட்டக்கச்சி

தகவல்:-குடும்பத்தினர்
0770068394

(சி-2512)

# வடக்கு கல்வியமைச்சின் செயலராக சத்தியசீலன் மீண்டும் நியமனம்





(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு ஆகியவற்றின் புதிய செயலாளர்கள் நேற்று ஆளுநரால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளராக விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய சிவலிங்கம் சத்தியசீலன் நியமிக்கப்பட்டார். விவசாய அமைச்சின் செயலாளராக கந்தையா தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் ரெஜினோல்ட் கூரே நேற்று அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், உதவிச் செயலர் செல்வநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# ஹிருணிகாவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## சிறிகொத்தாவை முற்றுகையிட முடிவு



(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவிற்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் சிறிகொத்தாவை முற்றுகையிட போவதாக, ஐ.தே.க. பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஹிருணிகா பிரேமசந்திரவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்த கட்சி தீர்மானித்துள்ளதாக சுட்டிக் காட்டி, குறித்த அமைப்பின் செயலாளர் எஸ்.ஆர். எம். விக்கிரமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை கட்சி தலைமைப் பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் என ஹிருணிகா அறிவித்திருந்த நிலையிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசத்தினால், இந்த ஒழுக்காற்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு அமைப்பின் செயலாளர் தெரிவித்தார்.

ஆனால், கட்சியின் இத்தீர்மானத்தை கடுமையாக எதிர்ப்பதாகவும், ஹிருணிகாவிற்கு எதிராக விசாரணை நடத்தும் தினத்தில் கட்சி தலைமையகத்தை முற்று கையிடப் போவதாகவும் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் சுமார் 25 நாடாளுமன்ற உறுப்பினர் கள் பிரதமர் ரணில், கட்சி தலைமைப் பொறுப்பிலிருந்து நீங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்தியத் தொழிலதிபரிடமிருந்து இலட்சக்கணக்கில் இலஞ்சம்

## ஜனாதிபதி செயலக பிரதானி குறித்து தமிழக ஊடகங்கள் திடுக்கிடும் தகவல்

(சென்னை)

இந்தியத் தொழிலதிபரிடமிருந்து 20 மில்லியன் இலங்கை ரூபாய்கள், அதாவது 1,26,823 அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்ற ஜனாதிபதி செயலக பிரதானி ஐ.எச்.கே.மஹாநாமவை இலங்கையின் ஊழல் தடுப்பு அமைப்பு கைது செய்தது.

கொழும்பில் ஒரு கார் பார்க்கிங்கில் இந்த இலஞ்சப் பணத்தை அவர் பெற்றதாக தகவல் கிடைத்ததையடுத்து இலஞ்ச ஒழிப்புத்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

"இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை ஆணையம்" மஹாநாம கைதானதை உறுதி செய்தது. ஆனால் அந்த இந்தியத் தொழிலதிபர் யார் என்பது பற்றிய விபரங்களை அளிக்க மறுத்து விட்டது.

ஆனால் அந்தத் தொழிலதிபர் திருகோணமலையிலுள்ள கந்தேல் சர்க்கரை ஆலையில் முதலீடு செய்துள்ளார் என்ற தகவல் தெரியவந்துள்ளது.

இது குறித்து, இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை ஆணையர் குருகே தி இந்துவிடம் (ஆங்கிலம்) கூறும்போது, "இந்திய முதலீட்டாளர் எங்களை அழைத்து இலஞ்சம் பற்றி தெரிவித்தார். முன்பு மஹாநாம காணி அமைச்சகத்தில் செயலராக இருந்தவர்" என்றார்.

முதலீட்டாளரிடமிருந்து முதலில் 540 மில்லியன் இலங்கை ரூபாய்களை இலஞ்சமாகக் கேட்டுள்ளார் மஹாநாம. பிறகு பேச்சுவார்த்தை மூலம் 100 மில்லியனாக குறைக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் தவணை 20 மில்லியன் ரூபாய்கள் கொழும்பிலுள்ள கடற்கரை விடுதியான தாஜ் சமுத்ராவின் கார் பார்க்கில் வைத்து கைமாறியுள்ளது என்று ஊழல் எதிர்ப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் இந்த புகார் தொடர்பாக அரச மரக் கூட்டுத்தாபனத் தலைவர் பியதாச திஸாநாயக்கவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் புகார் ஜனாதிபதி மைத்திரியின் கவனத்துக்கு வந்தவுடன் இருவரையும் பதவியில் இருந்து உடனடியாக நீக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலையிலுள்ள கந்தேல் சர்க்கரை ஆலை 25 ஆண்டுகளாக செயலில் இல்லை. ஆனால் இதனை மீண்டும் செயற்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பு பெருகும் என்பதை உணர்ந்த இலங்கை அரசு முதலீடுகளை வரவேற்றது. ஆனால் 2015 முதலே இந்த முயற்சி சர்ச்சைகளில் சிக்கிவருகிறது போன்ற பல தகவல்களை த இந்து உட்பட தமிழக ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றன. (இ)

# மகிந்த மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நான் வெலிக்கடை சிறை செல்வது உறுதி

## அமைச்சர் பொன்சேகா புலம்பல்



(கொழும்பு)

தப்பித் தவறியாவது அடுத்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஒன்று அமைந்தால் தான் வெலிக் கடைசிறைச்சாலைக்கு செல்வது உறுதியாகும் என அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மயிந்த ராஜபக்ஷ உட்பட அவரது குடும்பத்தவர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக் கள் உள்ளதாகவும், அவற்றுக்கு சாட்சிகளும் உள்ளதாகவும் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் சட்டம், நீதி சகலருக்கும் சமமாக இருந்தால், இவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்காமல் இருக்கின்றனர் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். ராஜபக்ஷக்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமைக்கு ஜனாதிபதி பொறுப்புச் சொல்ல வேண்டும் எனவும் அமைச்சர் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சை தனக்கு வழங்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், இராணுவத்திலிருந்து எனக்கு பொலிஸாரை வழிநடத்த முடியாது என அமைச்சை வழங்காமல் இருப்பதற்கு காரணம் முன்வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் நேற்று முன் தினம் தனது அமைச்சில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போது இவ்வாறு கூறியுள்ளார். (இ-7)

# முழுமையான அரசியலமைப்பு சீர்திருத்தத்தையே ஆதரிப்போம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியல் யாப்பு சீர்திருத்தம் பூரணமாக நடைபெற வேண்டும். சில தேவைகளுக்காக கட்டம் கட்டமாக நடைபெறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் ஏனைய விடயங்களும் உள்ளடங்கலான முழுமையான சீர்திருத்தம் கொண்டுவரப்படுவதையே ஆதரிப்போம் எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கண்டி நீர் வழங்கல் திட்டங்களை விரைவுபடுத்தும் நோக்கில் நேற்று முன்தினம் கெட்டம்பே நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் அதிகாரப் பகிர்வு முறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அழுத்தமான வேண்டுகோளை சிறுபான்மைக் கட்சிகள் முன்வைத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அதனை வலியுறுத்தி வருகின்றனர்.

அரசியலமைப்பின் வழிநடத்தல் குழு பிரதமர் தலைமையில் பாராளுமன்றத்தில் நீண்ட கலந்துரையாடல்களை நடத்தி, புதிய யாப்பை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை மாற்றுகின்ற 20 ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் முழுமையாக நடைபெறவேண்டும். அத்துடன் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்வதற்கான முயற்சியை ஏற்றுக்கொள்ள முடியாது போன்ற விடயங்களை உள்ளடக்கிய சிறுபான்மை கட்சிகள் எல்லோரும் கூட்டாக ஒரு அறிக்கையை விடுத்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக 23 பேருக்கு நேற்று நியமனக் கடிதங்கள்



(கொழும்பு)

வடக்கிலுள்ள பட்டதாரிகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரத்துக்கு தேர்வாகிய 23 பேருக்கான நியமனக் கடிதங்கள் வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயால் நேற்று அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

வடமாகாணத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தேர்வுகள் ஏற்கனவே நடைபெற்று 197 பேர் தேர்வாகியிருந்தனர். அவர்களில் 166 பேர் மட்டுமே பயிற்சிக்கான தகுதிகளை பெற்றிருந்தனர். இந்த நிலையில் மேலும் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் வகையில், ஆளுநரின் விசேட அனுமதியுடன் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலர் இ.இளங்கோவன், உதவிச் செயலர் ஏ.எக்ஸ். செல்வநாயகம், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) திருமதி எஸ்.யோகநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ-9)







### ஜடேஜா அசத்தல் பந்துவீச்சு

# பெங்களூரை வீழ்த்தியது சென்னை



பெங்களூருக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில் சென்னை அணி 6 விக்கெடடுக்களால் வெற்றி பெற்றது.

இந்தியாவின் முக்கிய நகரங்களில் 11ஆவது ஐ.பி.எல்., “ரி20” தொடர் நடக்கிறது.

புனேயில் நேற்று மாலை நடந்த லீக் போட்டியில் சென்னை-பெங்களூர் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை அணியின் தலைவர் தோனி பந்து வீச்சை தேர்வு செய்தார்.

சென்னை அணியில் டு பிளசி, ஆசிப், கரண் சர்மாவுக்குப் பதில் வில்லே, துருவ், ஷர்துல் தாகூர் இடம்பெற்றனர். பெங்களூர் அணியில் குயின்ரன், வோரா, வாஷிங்டன் சுந்தர் நீக்கப்பட்டு டி வில்லியர்ஸ், பார்த்திவ், முருகன் அஷ்வின் இடம் பிடித்தனர்.

**ஜடேஜா அசத்தல்**

பெங்களூர் அணிக்கு பிரண்டன் மக்கலம் - பார்த்திவ் படேல் ஆரம்பம் கொடுத்தனர். நிகிடி பந்தில் மெக்கலம் (5) ஆட்டமிழந்தார். இதன்பின், “சுழல்” ஆதிக்கம் தொடங்கியது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஹோலி (8) ஜடேஜா “சுழலில்” திரும்பினார். ஹர்பஜன் பந்தில் விளாசல் மன்னன் டி வில்லியர்ஸ் (1) ஆட்டமிழந்தார். மீண்டும் வந்த ஜடேஜா, இம்முறை மன்தீப் சிங்கை (7) திருப்பி அனுப்பினார். பார்த்திவ் (53) அரைச்சதம் அடித்து ஆறுதல் கொடுத்தார். ஹர்பஜன் பந்தில் முருகன் அஷ்வின் (1) சிக்கினார். ஷர்துல் பந்துவீச்சில் சௌதி ஒரு சிக்சர், பவுண்டரி விளாசினார்.

20 ஓவர்கள் நிறைவில் பெங்களூர் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்கள் எடுத்தது.

சௌதி (36) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் சென்னை சார்பில் அதிகபட்சமாக ஜடேஜா 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெடடுக்களை கைப்பற்றினார்.

**எளிய இலக்கு**

எளிய இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு வோட்சன் (11) ஏமாற்றினார். பின், இணைந்த ராயுடு - ரெய்னா ஜோடி எதிரணி பந்துவீச்சை எளிதாக சமாளித்தது. உமேஷ் “வேகத்தில்” ரெய்னா (25) சிக்கினார். சிறப்பாக விளையாடிய ராயுடு 32 ஓட்டங்கள் எடுத்தார். கிராண்ட்ஹோம் பந்தில் துருவ் ஷோரே (8) ஆட்டமிழந்தார். அணித் தலைவர் தோனி, பிராவோ இணைந்து அணியை வெறறிக்கு அழைத்துச் சென்றனர். அஷ்வின்பந்தை பிராவோ சிக்சருக்கு பறக்கவிட்டார். தன் பங்கிற்கு சகால் பந்தை தோனி சிக்சருக்கு அனுப்பினார்.

18 ஓவர்களில் சென்னை 4 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

தோனி (31), பிராவோ (14) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# மும்பை வெற்றி தொடருமா?

## அஷ்வினை சமாளிப்பாரா ரஹானே?

ஐ.பி.எல்., லீக் போட்டியில இன்று மும்பை, கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

இந்தியாவில் 11ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. இதில், இன்று மும்பை வான்கடே மைதானத்தில் நடக்கும் முக்கிய லீக் போட்டியில் மும்பை - கொல்கத்தா மோதுகின்றன.

‘நடப்பு சம்பியனாக’ களமிறங்கிய மும்பை, 9 போட்டிகளில் 3ல் தான் (6 தோல்வி) வென்றது. மீதமுள்ள 5 போட்டிகளிலும் வென்றால் மட்டுமே ‘பிளே ஓப்’ உறுதி என்ற இக்கட்டான நிலையில் உள்ளது. இதனால், இதுவரை 340 ஓட்டங்கள் எடுத்த சூர்யகுமார் மீதுதான், மீண்டும் நெருக்கடி அதிகரித்துள்ளது. ஏனெனில் இவரது ‘சகா’ லீவிஸ் (204), இன்னும் சுதாகரிக்கவில்லை. அணித் தலைவர் ரோகித் சர்மா (220), இஷான் கிஷான (176), குர்னால் (167), பாண்ட்யா (134) சீரற்ற ஆட்டத்தை தருவது அணிக்கு தொல்லையே.

பந்துவீச்சில் பாண்ட்யா (12), ‘சுழல்’ வீரர் மார்க்கண்டே (12), பும்ரா (10), மெக்லீனகன் (10) என பலரும் ஆறுதல் கொடுக்கின்றனர்.

**கார்த்திக் பலம்**

கொல்கத்தா 9 போட்டிகளில் 5ல் வென்றுள்ளது. 10 புள்ளிகளுடன் உள்ள இந்த அணி, கடைசியாக சென்னையை வீழ்த்திய உற்சாகத்தில் உள்ளது. சுனில் நரைனின் ‘மின்னல்’ தொடககம், அணித்தலைவர் தினேஷ் கார்த்திக்கின் நிதான ஆட்டம், இளம் ‘புயல்’ சுப்மன் கில் விளாசல், கிறிஸ் லின், ரசலின் அனுபவம் கைகொடுக்கும் பட்சத்தில், இன்றும் கொலகத்தா சாதிக்கலாம். தவிர, ‘சுழல்’ மும்மூர்த்திகள் சுனில நரைன், குல்தீப் யாதவ், பியுஸ சாவ்லா கூட்டணி இருப்பதும் கூடுதல் பலம்தான்.

**அஷ்வினை சமாளிப்பாரா ரகானே?**

இந்தூரில் இன்று இரவு நடக்கும் மற்றொரு லீக் போட்டியில் அஷ்வினின் பஞ்சாப் அணி, ரகானேயின் ராஜஸ்தானை எதிர்கொள்கிறது. சிறிய ஓய்வுக்குப் பின் வந்த பஞ்சாப் அணிக்கு (8ல் 5 வெற்றி, 3 தோல்வி) ஹெய்ல் (302), லோகேஷ் ராகுல் (292) பெரும் பலம். பந்துவீச்சில் ஆன்ட்ரூ டை (10), முஜீப் (9), அனுபவ அஷ்வின் (5) வெற்றிக்கு உதவலாம்.


ராஜஸ்தான் அணி ஆரம்பத்தில் இருந்தே தள்ளாடுகிறது. இருப்பினும், கடந்த முறை டில்லிக்கு எதிராக, பட்லர் 26 பந்துகளில் 67 ஓட்டங்கள் விளாசியது, ஷோர்ட், கௌதம் உள்ளிட்டோர் போராடியது சற்று நம்பிக்கை கொடுத்திருக்கும். பந்துவீச்சில் குல்கர்னி, உனத்கட், ஜோப்ரா ஆர்ச்சர் என, எல்லோரும் ஓட்டங்களை வாரி வழங்குவது பலவீனம்.

## இந்தியன் பிறிமியர் லீக் - 2018 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | சன்ரைசர்ஸ் ஹைதராபாத் | 9 | 7 | 2 | 14 |
| 2 | சென்னை சுப்பர் கிங்ஸ் | 10 | 7 | 3 | 14 |
| 3 | கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 9 | 5 | 4 | 10 |
| 4 | கிங்ஸ் XI பஞ்சாப் | 8 | 5 | 3 | 10 |
| 5 | மும்பை இந்தியன்ஸ் | 9 | 3 | 6 | 6 |
| 6 | பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 9 | 3 | 6 | 6 |
| 7 | டில்லி டேர்டெவில்ஸ் | 10 | 3 | 7 | 6 |
| 8 | ராஜஸ்தான் றோயல்ஸ் | 8 | 3 | 6 | 6 |

# வீழ்ந்தது ஸ்ரேயாஸின் டில்லி

# வீணானது பிரித்வி போராட்டம்



ஹைதராபாத் அணிக்கு எதிரான ஐ.பி.எல்., லீக் போட்டியில், டில்லி அணி 7 விக்கெட்டுக்களால் வீழ்ந்தது. பிரித்வி அரைசதம் வீணானது.

இந்தியாவில் 11வது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. நேற்று ஐதராபாத்தில் நடந்த லீக் போட்டியில் டில்லி, ஹைதராபாத் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற டில்லி களத்தடுப்பை தேர்வு செய்தது.

**பிரித்வி ஆறுதல்**

டில்லி அணிக்கு பிரித்வி ஷாவுடன் இணைந்து, தொடக்கம் தந்த மக்ஸ்வெல் (2), ரன் அவுட்டானார். மறுபுறம், சந்தீப், சாகிப் பந்துகளை சிக்சருக்கு பறக்க விட்டு, பரிதவிக்க வைத்தார் பிரித்வி. இவர், 36 பந்தில் 65 ஓட்டங்கள் எடுத்தார்.

அடுத்த சிறிது நேரத்தில் ஸ்ரேயாஸ் (44 ஓட்.,) ஆட்டமிழந் தார். நமன் ஓஜா (1).ரிஷாப் பன்ட் (18) கைவிட்டனர். 20 ஓவர்களில் டில்லி 5 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்கள் எடுத்தது. ஷங்கர் (23), கிறிஸ்டியன் (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**பதான் அபாரம்**

அடுத்து களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு தவான், ஹேல்ஸ் ஜோடி “சுப்பர்” ஆரம்பம் கொடுத் தது. 9 ஓட்டங்களில் மக்ஸ் வெல் தயவில் தப்பிய ஹேல்ஸ், அவேஷ் கான் ஓவரில் 4 சிக்சர் அடித்து மிரட்டினார். இவர், 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தவான் (33), அமித் மிஸ்ரா “சுழலில்” போல்டானார். மணிஷ் பாண்டே (21) நீடிக்கவில்லை.

போல்ட் ஓவரில், யூசுப் பதான் தலா ஒரு சிக்சர், பவுண்டரி அடிக்க, கடைசி ஓவரில், ஹைதராபாத் வெறறிக்கு 14 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

கிறிஸ்டியன் வீசிய இந்த ஓவரின் முதல் பந்தில் 2 ஓட்டம் எடுத்த யூசுப் பதான், 2ஆவது பந்தில் சிக்சரும் 3ஆவது பந்தில் பவுண்டரியும் அடித்தார். அடுத்த இரு பந்துகளில் 2 ஓட்டங்கள் எடுக்கப்பட, ஹைதராபாத் அணி 19.5 ஓவர்களில், 3 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்கள் எடுத்து, 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. வில்லியம்சன் (32), யூசுப் பதான் (27) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த தோல்வியை அடுத்து, டில்லி அணியின் (10ல் 3 வெற்றி, 7 தோல்வி), “பிளே ஓப்” வாய்ப்பு ஏறக்குறைய முடிவுக்கு வந்தது.

### பிராஹா ஓபன் டென்னிஸ்

# பெட்ரா கிவிட்டோவா சம்பியன்



செக்குடியரசு பிராஹா ஓபன் டென்னிஸில் ரொமானியா வீராங்கனையை வீழ்த்தி பெட்ரா கிவிட்டோவா சம்பியன் பட்டம் வென்றார்.


செக்குடியரசின் தலைநகர் பிராஹாவில், பிராஹா ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் உள்ளூர் வீராங்கனையான பெட்ரா கிவிட்டோவா ரொமானியா வீராங்கனை மிகாயேலா புஜர்னெஸ்குவை எதிர் கொண்டார்.

2ஆவது தரவரிசையில் இருக்கும் கிவிட்டோவிற்கு எதிரான முதல் செட்டை 7-வது இடத்தில் இருக்கும் மிகாயேலா புஜர்னெஸ்கு 6-4 எனக் கைப்பற்றினார். பின்னர் சுதாகரித்துக் கொண்ட கிவிட்டோவா 2ஆவது செட்டை 6-2 எனவும், 3ஆவது செட்டை 6-3 எனவும் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

# யாழ். மாம்பழ உற்பத்தி நிலையம் உடுவிலில் திறப்பு





(யாழ்ப்பாணம்)

விவசாய அமைச்சின் கீழ் உள்ள அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்பாடுகளில் ஒன்றான இலங்கை மாம்பழங்களின் வளங்கள் மற்றும் பெறுமதி வலையமைப்பு முகாமைத்துவத்தினை மேம்படுத்தல் என்ற திட்டத்தின் கீழ் அறுவடைக்கு பின்னரான இழப்பை குறைப்பதை நோக்கமாகக் கொண்டு தரமான மாம்பழ உற்பத்தித் திட்டம் யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் முதன் முறையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாண மாம்பழம் சேகரிப்போர் மற்றும் வழங்குநர் அபிவிருத்திச் சங்கம் உடுவிலில் முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தில் 50 பேர் தற்போது உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு அதில் 40 பேருக்கு இத்திட்டத்தை மேற்கொள்வதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கடந்த புதன்கிழமை உடுவில் பிரதேசத்தில் "யாழ்.மாம்பழ உற்பத்தி நிலையம்" யாழ். அரச அதிபரால் திறந்து வைக்கப்பட் டது.

அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம் நிறுவனத்தின் வடக்கு மாகாண விரிவாக்கல் உத்தியோகத்தர் ந.சோமகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில். குறித்த சங்கத்தினர் மேற்கொள்ளும் மாம்பழ அறுவடை, பழுக்கவைத்தல் முறை மற்றும் சந்தைப்படுத்தல் முறை என்பன தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டிருந்தன.

பொதுவாக மாங்காய் பறித்து நேரடியாக செயற்கை மருந்துகள் தூவி விற்பனைக்கு விடப்படுகிறது.

அதனால் தரமான மாம்பழங்கள் கிடைப்பதில்லை. இவ்வாறான மாம்பழங்கள் குறிப்பாக சந்தைக்கு விடப்பட்டு 3 நாட்களில் பழுதடையும் நிலைக்கு வருகிறது.

எனவே இத்திட்டத்தின் மூலம் தரமான மாம்பழத்தை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கும், சுகாதார ரீதியான பிரச்சினைகளை தடுப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இது செயற்கையாக செய்தாலும் இயற்கையான முறையாகவே மரத்தில் பழுக்கும் பழம் போன்றே இச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தை சரியான முறை யில் செயற்படுத்தினால் மாம் பழங்களை 7 தொடக்கம் 10 நாட்கள் வரை வைத்திருக்க முடியும்.

இந்தத் திட்டத்தின் கீழ் தயார்படுத்தப்படும் மாம்பழங்கள் "யாழ்.மாம்பழம்" என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டு சந்தைக்கு கடந்த வியாழக்கிழமை விடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இத் துறையில் ஆர்வமுள்ளவர்கள் இத் திட்டத்தை மேற்கொள்வதற்கான அறைகளை கட்டினால் மேலதிகமான தொழில்நுட்ப வசதிகளை இந் நிறு வனத்தினர் வழாங்குவதற்கு தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-9)

# தடை இன்னும் நீக்கப்படவில்லை கிளைபோசெட் கப்பல் வந்ததா? துறைமுகத்தில் கேளுங்கள்

## நவீன் திஸாநாயக்க நழுவல்



(கொழும்பு)

"கிளைபோசெட்" இரசாயனப் பொருட்கள் ஏற்றிய எந்தவொரு கப்பலும் கொழும்பு துறைமுகத்துக்கு வரவில்லையெனவும் அவ்வாறு வந்திருப்பதாக யாராவது கூறுவதாயின் தகவல் அறியும் உரிமையின் கீழ் துறைமுகத்திற்கு தொடர்பு கொண்டு உண்மையை கேட்டறியலாம் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கிளைபோசெட்டுக்கு அரசாங்கம் விதித்திருந்த தடை இதுவரையில் நீக்கப்படவில்லை.

இருப்பினும், துறைமுகத்தில் வந்திறங்கியுள்ள கப்பலில் காணப்படும் கிளைபோசெட்டை நாட்டுக்குள் விநியோகிப்பதற்கு சில அரசியல் சக்திகள் மும்முரமாக செயற்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் குற்றம சாட்டியிருந்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் வினவியதற்கே இவ்வாறு தெரிவித்தார்.

கிளைபோசெட் தொடர்பான சட்டத்தை நீக்குவதற்கு என்னால் முடியாது. இது அரசாங்கத்தின் தீர்மானம். அரசாங்கத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் பேசியே இதற்கான தீர்மானம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

யாரும் சொல்வது போல இதனைச் செய்ய முடியாது எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கண்டிக்கலவரம் குறித்து நேற்று மூன்று பேர் கைது!

## ரி.ஐ.டி. அதிரடி

(கண்டி)

கண்டியில் இடம்பெற்ற இனங்களுக்கு இடையிலான மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மூவரும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூஜாபிட்டிய, அம்பதென்ன மற்றும் கஹவத்தை ஆகிய பிரதேசங்களில்வைத்தே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி மற்றும் திகன பகுதிகளில் கடந்த மார்ச் மாதம் இனங்களுக்கு இடையிலான மோதல் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த நிலையில், குறித்த சம்பவம் தொடர்பாக மஹாசோன் அமைப்பின் தலைவர் உட்பட பலர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நீரில் மூழ்கி மாணவன் பலி!

(கொழும்பு)

அகுரெஸ்ஸ - அதுரலிய - கதனாவல கங்கையில் நீரில் மூழ்கி பாடசாலை மாணவரொருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

அதுரலிய கல்லூரியில் கல்வி கற்ற 16 வயதுடைய மாணவனே நண்பர்களுடன் கங்கைக்கு நீராடச் சென்றிருந்த போது நீரில் மூழ்கி காணாமல் போயுள்ள நிலையில், குறித்த பிரதேச மக்கள் முன்னெடுத்த தேடுதல் நடவடிக்கையின் பின்னர் மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மனைவியை கத்தரிக்கோலால் குத்தி கொலை செய்த கணவன்

(திருகோணமலை)

திருகோணமலை, பாலையூற்று பிரதேசத்தில் கணவர் ஒருவர் தனது மனைவியை கத்தரிக்கோலால் குத்தி கொலை செய்துள்ளார்.

இருவருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையால் நேற்று அதிகாலை 01.05 மணியளவில் இந்தக்கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கணவரின் தாக்குதலுக்கு உள்ளாகி படுகாயமடைந்த மனைவி திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

26 வயது பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கொலைச் சந்தேகநபரான கணவன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் திருகோணமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# இராசி பலன்

**மீனம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், நட்பு வட்டம் விரிவடையும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், தொழில் ரீதியான புதிய ஒப்பந்தங்கள் கைகூடலாம், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**இடபம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக அமையும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், இனத்தார் பகை மாறும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சிறிய வேலையென்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், இறை வழிபாட்டில் நாட்டம் செல்லும்.

| | | | |
|---|---|---|---|
| | புத. சூரி | சுக் | |
| | கிரகநிலை | | ராகு |
| செவ். கேது | | | |
| சனி. சந் | | குரு | |

கிரகநிலை
சந்திராஷ்டமம்
திருவாதிரை
காலை 7:17 மணிக்கு
மகர-சந்

**06.05.2018**

சித்திரை 23, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சஷ்டி பிற்பகல் 2.55 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.30மணிவரை
சுபநேரம் 8.56-10.26 மணிவரை
இராகுகாலம் 4.26-5.56 மணிவரை

வளவன்

**கடகம்:** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** உடல் நலன் சீராகும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், உள்ளத்திலும் இல்லத்திலும் அமைதி கூடும்.

**தனுசு:** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொலைபேசி வழியில் சுப செய்தி வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடன்பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்:** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம்.

# மாசேரி-இடைக்குறிச்சியில் வீதி விளக்குகள் பொருத்தல்



(வரணி)

ஐக்கிய இராச்சிய வரணி வாழ்மக்கள் ஒன்றியத்தின் நிதிப்பங்களிப்புடன் இருள் சூழ்ந்து காணப்பட்ட இடைக் குறிச்சி வீதி மற்றும் வரணி மாசேரி ஊடாக குடத்தனை செல்லும் வீதி போன்றவற்றுக்கு 40 வீதி விளக்குகள் பொருத்தும் பணி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் தவிசாளர் கந்தையா வாமதேவன் மற்றும் சமூக நலன் புரிச் சங்கத்தின் வேண்டு கோளை ஏற்று வைத்திய சாலைக்கு முன்பாகவும் 5 வீதி விளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐக்கிய இராச்சிய வரணி வாழ்மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் தம்பு செல்வக் குமார் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாட்டினை மேற்கொள்ள உதவிய பிரதேச சபை தவிசாளர், இலங்கை மின்சார சபையினர், ஐக்கிய இராச்சிய மக்கள் ஒன்றியத்தினர் மற்றும் சமூக நலன் விரும்பிகள் போன்றோருக்கு மக்கள் நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (இ-103)




# 13 ஆவது திருத்தம் சிறந்த ஆரம்பமே

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் நிரந்தரத் தீர்வல்ல என்பது புதிய கண்டுபிடிப்பல்ல. 13ஆவது திருத்தச் சட்டமானது தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நோக்கிச்செல்வதற்கு சிறந்த ஆரம்பமாகவே அமையும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த மூன்று தசாப்த காலமாக நான் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்களிடமும், சர்வதேச சமூகத்தினரிடமும் இதையே வலியுறுத்தி வருகின்றேன்.

போதிய அரசியல் பலம் எமக்கு கிடைத்திருந்தால் நாம் அதை நடைமுறைப் படுத்திக் காட்டியிருப்போம். 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதிலிருந்து ஆரம்பித்து கட்டம் கட்டமாக தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வு நோக்கி முன்னேறுவதே நடைமுறைச் சாத்தியமானதாகும்.

அதேகாலப் பகுதியில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்கள் கேட்கும் உரிமையின் நியாயத்தை நடைமுறையில் உணர்த்தி அவர்களின் நம்பிக்கையையும் வென்றெடுக்க வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டமும், அதைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமையும் இலங்கை அரசின்விருப்பத்தினாலோ, மேடைக்கு மேடை உசுப்பேற்றும் அரசியல் பேசி, தமிழ் இளைஞர், யுவதிகளை பலிக்களத்திற்கு அனுப்பத் துணிந்த தமிழ்அரசியல் தலைமைகளின் தனித்துவமான முயற்சியினாலோ கிடைக்கப்பெற்றதல்ல.

அது தமிழ் மக்கள் நடத்திய சாத்வீகப் போராட்டத்தினாலும், தமிழ் இளைஞர், யுவதிகள் தமது உயிர்களை பணயம்வைத்து நடத்திய ஆயுதப் போராட்டத்தினாலும் கிடைத்ததாகும்.

13ஆவது திருத்தச் சட்டத்தையும், மாகாணசபை முறைமையையும் ஆரம்பத்தில் சிங்கள மக்கள் எதிர்த்திருந்தாலும், இந்த சட்ட ஏற்பாட்டின் நன்மைகளை அனுபவித்தவர்கள் சிங்கள மக்கள் தான்.

துரதிர்ஷ்டவசமாக தமிழ் மக்களுக்கு அந்த வாய்ப்பை தமிழ்த் தலைமைகள் பெற்றுக் கொடுக்கவில்லை.

ஆகையால்இன்று மாகாண சபை முறைமையை பாதுகாத்து வலுப்படுத்த வேண்டும் என்று முன்னின்று குரல் கொடுக்கும்நிலையில் சிங்கள மக்கள் இருக்கின்றார்கள்.

ஆகவே 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கமாட்டார்கள்.

தவிரவும் ஏற்கனவே சட்ட திருத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் மீண்டும் நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும் என்ற தேவை இல்லை. இந்தியாவின் பக்கபலமும் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# யோகா சான்றிதழ் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாசன-தியான கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு நேற்று சான்றிதழ் வழங்கப்பட்டது. நல்லூர்க் கந்தன் ஆலய முன்றலில் அமைந்துள்ள நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இப்பயிற்சி இடம்பெற்று வந்தது.

சுமார் மூன்று மாதகாலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எனவே முற்றிலும் இலவசமாக நடைபெறும் இக்கற்கை நெறியில் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்துகொள்ள முடியும் எனவும் இணைந்து பயன்பெறவிரும்பும் ஆர்வமுடையோர் தமது பதிவுகளை நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் மேற்கொண்டு இணைந்து கொள்ள முடியும் எனவும் மேலதிக விபரங்களை மேற்படி மண்டபத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற யோகாசன-தியான கற்கை நெறியில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியால் ஞாபகார்த்த தபால் உறை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தனது 150 ஆவது அகவையை இவ்வாண்டில் கொண்டாடுகின்றது.

இதனை முன்னிட்டு ஞாபகார்த்த தபால் உறை நாளை 7ஆம் திகதி திங்கட்கிழமை தபால் திணைக்களத்தினால் உத்தியோகபூர்வமாக வெளியிட்டுவைக்கப்படவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் இராஜேந்திர சிங்கம் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் உத்தியோகபூர்வமாக தபால் உறை வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாக பழைய மாணவிகள் மற்றும் பாடசாலை சமூகமென்பவை அழைப்பு விடுத்துள்ளன.

அன்றைய தினம் 150 ஆவது ஆண்டு நினைவு விசேட மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (இ-9)

# 'போதை ஒழிப்போம்' விழிப்புணர்வு யாழில்

வன்முறையை தவிர்ப்போம் போதை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் சமூக விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் தொடக்க நிகழ்வு இன்று 6 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்நகர்ப்பகுதியில் அமைந்துள்ள வைரவர் கோவில் முன்றலில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வடக்கு,கிழக்கு சமூக நல்லிணக்க அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (இ-9)

# மரநடுகை மாதம் தொடர்பாக ஆளுநர் தலைமையில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

தேசிய மர நடுகை மாதத்தினை முன்னிட்டு யாழ் நகரைப் பசுமைப்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி தேசிய மரம் நடுகை மாதமாகும். அன்றைய தினத்தில் பொருத்தமான இடங்களில் பொருத்தமான மரங்களை நாட்டுவதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்காக இந்த கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் வடமாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனோல்ட், மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் சிவக்கொழுந்து உட்பட விவசாய திணைக்கள அதிகாரிகள், வனவளத் திணைக்கள அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் முப்படைகளையும் சேர்ந்த அதிகாரிகள் சாரணர், லயன்ஸ் கழக பிரதிநிதிகள், கலந்து கொண்டனர்.

யாழ்.மாநகர முதல்வர் ஆனோல்ட், விவசாய அமைச்சர் சிவநேசன் ஆகியோருடன் இணைந்து ஆளுநர் செயலகம் உட்பட அனைத்து திணைக்களங்களின் பங்களிப்புடன் யாழ்.நகரை பசுமைப்படுத்தும் பணி ஆரம்பிக்கப்படும் என ஆளுநர் தெரிவித்தார். (இ-9-60)



இறுதி யுத்தத்தில் தமது உயிர்களை நாட்டிற்கென தியாகம் செய்த முப்படையினரையும் கௌரவிக்கும் முகமாக ஒன்பதாவது ஆண்டு நிறைவின் போர் வீரர்கள் நினைவுதினம் நேற்று முன்தினம் யாழ். பலாலி பாதுகாப்பு படைத்தலைமையகத்தில் அமைந்துள்ள இராணுவ நினைவுத்தூபி முன்றலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இராணுவ நினைவுத்தூபிக்கு முப்படையினரினால் மரியாதை அணிவகுப்பு செய்யப்பட்டதுடன் நினைவுத்தூபியில் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் ரணவிரு சேவா சங்க தலைவி அனோமா பொன்சேகா மற்றும் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டதுடன் பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி, வடமாகாண பிரதம செயலாளர் ஆ.பத்திநாதன், யாழ் இந்திய உயர்ஸ்தானிகர் பாலச்சந்திரன், சர்வமத தலைவர்கள், யாழ். மன்னார் வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரச அதிபர்கள், பொலிஸ் மற்றும் முப்படை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மூன்று ஆண்டுகளில் பல்வேறு வெற்றி

## பிரதியமைச்சர் கூறுகிறார்



(கொழும்பு)

நாட்டுக்காக பல்வேறு வெற்றிகளை கடந்த மூன்று ஆண்டுகளில் வென்றெடுக்க அரசாங்கத்தால் முடிந்ததாக உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் ஜே.சி.அலவத்துவல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பிரதியமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் தற்சமயம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துள்ளது. இதன் போது உள்நாட்டு கட்டுமானத்துறையினருக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும். ஊடக சுதந்திரம் உயர்ந்த பட்ச அளவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களுக்கு கடந்த ஆட்சிக் காலத்தில் உயிர் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடந்த அரசாங்கத்தின் மீது ஏற்பட்டிருந்த அதிருப்தி காரணமாக நாட்டுமக்கள் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தினார்கள். மக்களின் பெரும்பாலான எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற அரசாங்கம் எதிர்பார்த்திருந்தாலும், அதுபற்றி மக்களுக்கு சரியான தகவல்கள் சென்றடையவில்லை என்று பிரதி அமைச்சர் ஜே.சி அலவத்துவல மேலும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ்-முஸ்லிம்களுக்கு சம உரிமை கிடைக்கும்வரை போராடுவோம்

## அமைச்சர் ராஜித திட்டவட்டம்



(அக்கரைப்பற்று)

நல்லாட்சி அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டுவருவதற்கு பாடுபட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை கிடைக்கும்வரை தொடர்ந்து போராடவுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

37ஆவது அரச ஒசுசல மருந்தகத்தை திறந்து வைப்பதற்காக நேற்று அக்கரைப்பற்றுக்கு சென்ற அமைச்சர், அங்கு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டு வருவதற்கு பாடுபட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை மறந்துவிட்டு, அரசாங்கத்தின் பயணத்தை தொடர முடியாது. நாட்டிலுள்ள மொத்த முஸ்லிம் மக்கள் தொகையில் 45 வீதமானோர் நல்லாட்சி அரசாங்கத்தை ஆதரித்துள்ளனர். சிங்கள பிரதேசங்களையும்விட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தே அரசாங்கத்திற்கான ஆதரவு பெருகியிருந்தது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)


## வாடகைக்கு

பலாலி வீதி உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் கடைகள் வாடகைக்கு விடப்படும். (3851)

தொடர்புகளுக்கு: 077 415 7062

## VSP FARM

பிறீமாவின் முதற்தரமான இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் மற்றும் முட்டைக் கோழிக் குஞ்சுகளிற்கான அங்கீகாரம் பெற்ற வடபிராந்திய ஏக விநியோகஸ்தர். (சி/2509)

தொ.இல: 077 704 8972



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### எலற்நாயகன் வர்ஜின் வருணிக்கா

மேற்கத்தேய இசை மற்றும் பேச்சு நிறுவனத்தால் கடந்த வருடம் நடத்தப்பட்ட பேச்சுத் தேர்வுகளில் 100 புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கிண்ணம் பெற்றுக்கொண்ட எலற்நாயகன் வர்ஜின் வருணிக்காவை பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல கலைகளில் சிறந்து விளங்க மனதார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
அம்மா, அப்பா,
அம்மப்பா, மாமாமார், சித்திமார்



## ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம்-2018

காலம்: 19.05.2018 சனிக்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: சங்கமண்டபம்

திருநெல்வேலி இந்துவாலிபர் சங்கத்தின் 2018 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டமானது எதிர்வரும் 2018.05.19 ஆம் திகதி மாலை 5 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் திரு.சி. ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. இக் கூட்டத்தில் அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். (3868)

தொ.இல: 077 239 5315

பொதுச் செயலாளர்
பா.ஜெயதாசன்


# மரக் கூட்டுத்தாபனத்திற்கு புதிய தலைவர் நியமனம்

தேசியமரக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக அனுருத்த பொல்கம்பொல நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த சில நாட்களுக்கு முன்னர் 2 கோடி ரூபாவினை இலஞ்சமாக பெற்றதாக தெரிவித்து தலைவராக செயற்பட்ட பி.திஸாநாயக்க அவரது பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இந்நிலையில் நேற்று புதிய தலைவராக அனுருத்த பொல்கம்பொல நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வசிக்கும் 31, 35 வயதுடைய மணமகள்களுக்கு தகுந்த மணமகன்களைத் தேடுகிறோம். கனடாவில் வசிக்கும் 31 வயதுடைய NRC (BORN Again) பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. 30, 36 வயதுடைய செவ்வாய் குற்றம் உள்ள மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களைத் தேடுகிறோம். (சி-2505)

தொடர்புகளுக்கு:
00141 6666 1855 & 00164 7504 3336


# ஸ்ரீ சபாரத்தினத்தின் நினைவு தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) தலைவர் அமரர் ஸ்ரீ சபாரத்தினத்தின் 32 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

காலை 9 மணிக்கு கோண்டாவில் அன்னுங்கை பகுதியில் அகவணக்க நிகழ்வு ரெலோ இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கட்சி முக்கியஸ்தர்கள், கட்சி அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள், நலன் விரும்பிகளை கலந்து சிறப்பிக்குமாறு வடமாகாண சபை உறுப்பினரும் ஏற்பாட்டாளருமான சபா.குகதாஸ் அறிவித்துள்ளார். (இ)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532



## நம்பிக்கை இழக்க வேண்டாம்.

உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.
எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

மதசார்பற்ற, இலவச சேவை, ரகசியமானது.

கை கொடுக்கும் நண்பர்கள்

யாழ்ப்பாணம்: 077 900 8776
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)

வவுனியா: 024 324 4444
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)



யாழ்ப்பாணக் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் [விஞ்ஞானம்]

உயர்திரு
இராசா அரசகுலசூரியன்
அவர்களின்



## சேவைநலன் பாராட்டு விழா

இடம்: யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை
காலம்: 06.05.2018 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி

தலைவர்: திரு.சோ.முகுந்தன்
(ஆசிரியர், யா/சென்சாள்ஸ் மகா வித்தியாலயம்
தலைவர், யாழ்.நாயன்மார்க்கட்டு சனசமூக நிலையம்)

நிகழ்ச்சி நிரல்

- விழா நாயகரை வரவேற்றல்.
- மங்கல இசை (ஈழநல்லூர் மணியம் குழுவினர்)
- மங்கல விளக்கேற்றல்
- தேவாரம்
- வரவேற்பு நடனம் (நாயன்மார்க்கட்டு சிவநர்த்தனாலயம்)
- வரவேற்புரை
- ஆசியுரைகள்
- தலைமையுரை
- வாழ்த்துரைகள்
- விழா நாயகரைக் கௌரவித்தல்
- ஏற்புரை: விழா நாயகர்
- நன்றியுரை: திரு.சோ.கணேசநாதன்
  உத்தியோகத்தர், திட்டமிடல் பிரிவு மாநகரசபை,யாழ்ப்பாணம்)
- அனுசரணை: வைத்தியகலாநிதி திரு.திருமதி. திலகவதி கோபாலரட்ணம்

Congratulations!

அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம்

அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு — விழாக்குழுவினர்




## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 1ம் பாதம்<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:O/L<br>சொந்தத்தொழில்<br>தொ.இ: B/8520 | பிறப்பு: 1986 கிறிஸ்தவம் (RC)<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 2ம்பாதம்<br>தகைமை/தொழில்: BSC அரசதொழில்<br>தொ.இ: G/8533 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1ம் பாதம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBM IBSL<br>வங்கியாளர்<br>தொ.இ: B/8521 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3ம் பாதம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தொ.இ: G/8537 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3ம்பாதம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: காசாளர்<br>தொ.இ: B/8522 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4ம் பாதம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>தொ.இ: G/8541 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை1ஆம் பாதம்<br>கி.பா: 70 செவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L வியாபாரம்<br>தொ.இ: B/8526 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1ம் பாதம்<br>கி.பா: 20 செவ் 12 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:A/L ஆசிரியர்<br>தனியார் பாடசாலை<br>எதிர்பார்ப்பு: எழுத்துடன் குழம்பியது<br>தொ.இ: G/8546 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஜப்பான் நிபுணர்குழு ஜனாதிபதியுடன் பேச்சு





(கொழும்பு)

ஜப்பானியப்பிரதமர்ஷின்சோ அபேயின் சிறப்பு ஆலோசகர் கலாநிதி ஹிரோரோ இசுமி தலைமையிலான ஜப்பானிய அதிகாரிகளின் சிறப்புக் குழுவொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளது.


ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜப்பானுக்குச் சென்றிருந்த போது, பிரதமர் ஷின்சோ அபேயுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய இந்த சிறப்புக் குழு இலங்கை வந்துள்ளது. இலங்கையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்கே இந்தக் குழு இலங்கை வந்துள்ளது.

இந்தக் குழுவினருடனான சந்திப்பின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மின்சக்தி திட்டங்களைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தெளிவுபடுத்தியுள்ளார். எதிர்காலத்தில் மின்சார நெருக்கடி ஒன்று ஏற்படும் சாத்தியங்கள் உள்ளதால் அவசர கதியில் மின்சக்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜப்பானிய உதவியுடன் திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம், கிழக்கில் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமானநிலைய அபிவிருத்தி மற்றும் கடல்சார் கண்காணிப்பு தொடர்பாகவும் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. (இ-7)

# விருது கண்டுபிடிப்பு





(கொழும்பு)

காலஞ்சென்ற பிரபல சிங்கள திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் வீட்டில் காணாமல் போன "ரணமயுர பதக்கம்" கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவெல - கொள்ளுப்பிட்டி தனியார் பேருந்து ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் இப்பதக்கம் காணப்பட்டதாக பொ்லிஸார் தெரிவித்தனர்.

கம்பெரலிய சிங்கள திரைப்படத்துக்காக கடந்த 1965 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற திரைப்பட விருது வழங்கும் விழாவின் போது இந்தப் பதக்கம் அவருக்கு வழங்கப்பட்டிருந்தது.

லெஸ்டர் ஜெம்ஸ் பீரிஸின் இறுதிக் கிரியை நிகழ்வின் போது இந்தப் பதக்கம் அவரது வீட்டிலிருந்து காணாமல் போயிருந்தது.

இதனைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 20ஆவது திருத்தச் சட்டம் நாட்டைப் பிளவுபடுத்தும் மகா சங்கம் எச்சரிக்கை



(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் 20 ஆவது திருத்தச்சட்டம், நிறைவேற்றப்பட்டால் நாடு பிளவுபடும் என்று பௌத்த பிக்குகளைக் கொண்ட தேசிய விஸ்வத் சங்க சபா எச்சரித்துள்ளது.

கொழும்பில் நடந்த மகா சங்கத்தின் தேசிய மாநாட்டில், உரையாற்றிய மகா சங்கத்தைச் சேர்ந்த பேராசிரியர் இந்துரகரேதம்மரத்ன, வண. மெடகமதம் மானந்ததேரர்வண. மெடகொட அபே திஸ்ஸ தேரர், வண. கோன் கஸ்தெனியெ ஆனந்த தேரர், அகுரதியே நந்த தேரர் உள்ளிட்ட பலரும், நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டனர்.

இங்கு உரையாற்றிய பேராசிரியர் இந்துரகரே தம்மரத்ன தேரர், இலங்கையில் உள்ள, சில பிரிவினைவாதிகள் நாட்டைப் பிளவுபடுத்தலாம் என்று நம்புகிறார்கள்.

அவர்கள் தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள 20 ஆவது திருத்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கூறினார்.

13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருக்கும் போது, நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது ஆபத்தானது என்றும், பௌத்த பிக்குகள் சுட்டிக்காட்டினர்.

நாட்டைப் பிளவுபடுத்தக் கூடிய இந்த திருத்தச்சட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு, ஜனாதிபதியோ பிரதமரோ ஆதரவு அளிக்கக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர். (இ-7)

## 05.2018 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖1527-ஸ்பானிய மற்றும் ஜெர்மனியப் படைகள் ரோம் நகரைச் சூறையாடினர். 147 சுவீடன் படைகள் புனித ரோமப் பேரரசின் மன்னன் ஐந்தாம் சார்ள்சிற்கு எதிராகப் போரிட்டு இறந்தனர்.

❖1853-"த லிட்டரறி மிரர்" (The Literary Mirror) என்னும் ஆங்கில மாதிகையை யாழ்ப்பாணத்தில் வைமன் கதிரவேற்பிள்ளை ஆரம்பித்தார்.

❖1860-கரிபால்டி தனது தொண்டர் படைகளுடன் இரண்டு சிசிலிகளின் பேரரசைக் கைப்பற்றுவதற்காக ஜெனோவாவில் இருந்து புறப்பட்டான்.

❖1889-ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

❖1967-சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முஸ்லிம் குடியரசுத் தலைவரானார்.

❖ 1976 - இத்தாலியின் ஃபிறியூல் நகரில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 989 பேர் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖1856-சிக்மண்ட் பிராய்ட், ஆத்திரிய உளவியலாளர் (இ. 1939)

❖1861-மோதிலால் நேரு, இந்திய தேசிய காங்கிரசு தலைவர் (இ. 1931)

❖1896-ரோல்ப் மாக்சிமில்லன் சீவெர்ட், சுவீடன் இயற்பியலாளர் (இ. 1966)

❖1953-டோனி பிளேர், ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர்

**இறப்புகள்**

❖1859-அலெக்சாண்டர் ஃபொன் /ஹம்போல்ட், செருமானிய புவியியலாளர், நாடுகாண் பயணி (பி. 1769)

❖1862-கென்றி டேவிட் தூரோ, அமெரிக்கக் கவிஞர், மெய்யியலாளர் (பி. 1817)

❖ 1915-வாசிலி பாவ்லோவிச் எங்கல்கார்த், உருசிய வானியலாளர் (பி. 1828)

❖1922-சாகு மகாராசர், மகாராட்டிரா கோல்காப்பூர் சமத்தான மன்னர் (பி. 1874)

❖1952-மரியா மாண்ட்டிசோரி, இத்தாலிய-டச்சு மருத்துவர், கல்வியாளர் (பி. 1870)

❖1959-ராக்னர் நர்க்சு, எசுத்தோனிய-அமெரிக்கப் பொருளியலாளர் (பி. 1907)

❖1963-தியோடர் வான் கார்மன், அங்கேரிய-அமெரிக்கக் கணிதவியலாளர், இயற்பியலாளர் (பி. 1881)

❖1979-கார்ல் வில்லெம் ரெய்ன்முத், செருமானிய வானியலாளர் (பி. 1892)

❖1992-மார்லீன் டீட்ரிக், செருமானிய-அமெரிக்க நடிகை, பாடகி (பி. 1901)

**சிறப்பு நாள்**

❖மாவீரர் நாள் (காபோன்)

❖மாவீரர் நாள் (லெபனான், சிரியா)

❖ஆசிரியர் நாள் (ஜமேக்கா)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 50 | 80 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 80 | 90 | 78 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 60 | 60 | 50 | 45 | 80 | 50 |
| தக்காளி | 60 | 80 | 80 | 60 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 50 | 30 | 80 | 50 |
| கரட் | 100 | 100 | 100 | 80 | 160 | 100 |
| பூசணி | 40 | 20 | 30 | 20 | 40 | 40 |
| புடோல் | 100 | 60 | 60 | 30 | 80 | 60 |
| வாழைக்காய் | 50 | 40 | 40 | 30 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 140 | 160 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 65 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 160 | 120 | 100 | 120 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 40 | 160 | 60 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 60 | 70 | 100 | 100 |
| லீக்ஸ் | 200 | 220 | 170 | 150 | 240 | 200 |
| பீற்றூட் | 40 | 50 | 30 | 30 | 60 | 50 |
| கறிமிளகாய் | 120 | 100 | 50 | 40 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 100 | 100 | 120 | 160 |
| போஞ்சி | 200 | 220 | 150 | — | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | — | — | 50 | 40 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 250 | 200 | 200 | 180 | 240 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 90 | 70 | 30-55 | 60-75 | 90 |
| இராசவள்ளி | 180 | 200 | 180 | — | 120 | 150 |
| வெங்காயப்பூ | 300 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 60 | 120 | 40 | 25 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 10 | 30 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 10 | 20 | 25 |
| ஈரப்பலா | — | — | — | — | — | — |

# இந்திய-இலங்கைக் கடற்படையினர் நடுக்கடலில் நீண்டநேரம் பேச்சு






இலங்கை- இந்திய கடற்படைகளுக்கிடையிலான, 29 ஆவது அனைத்துலக கடல் எல்லைக் கூட்டம் நடைபெற்றது.


காங்கேசன்துறைக்கு அப்பாலுள்ள கடலில் இந்தியக் கடற்படைக் கப்பலான சுமித்ராவில் நடந்த இந்தக் கூட்டத்தில் கடல்சார் பாதுகாப்பு குறித்து நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது.

11 அதிகாரிகளைக் கொண்ட இலங்கைத் தரப்புக்குழுவுக்கு வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் முடித்த கபகே தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு கடற்படை பிராந்தியத்துக்கான கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் அலோக் பட்னாகர் தலைமையிலான இந்திய அதிகாரிகள் குழுவில் 9 அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்தவும் இல்லை கோத்தாவும் இல்லை

# ஜனாதிபதி வேட்பாளராக சமல் கூட்டு எதிரணி ஆராய்வு–வாசு



(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சமல் ராஜபக்ஷவை நிறுத்த ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தற்போது தேசிய அரசாங்கம் 2020 ஆம் ஆண்டுவரை தமது ஆட்சியை நிலைநிறுத்த பயனற்ற அமைச்சரவை மாற்றத்தினை முன்னெடுப்பதால் எவ்வித மாற்றங்களும் ஏற்படப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிர்க்கட்சியின் வேட்பாளர் தொடர்பில் தெளிவுபடுத்தும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது தேசிய அரசாங்கம் பிரயோசனமற்ற விதத்தில் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. அதனால் நாட்டில் எவ்வித மாற்றங்களும் தோற்றம் பெறாது. கடந்த மூன்று வருடகாலமாக ஏற்படுத்த முடியாத மாற்றத்தினையா தேசிய அரசாங்கம் குறுகிய காலத்தினுள் ஏற்படுத்தப் போகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராகக் கூட்டு எதிரணியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆரம்பத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் பெரும்பாலானோர் ஆதரவு வழங்குவதாக குறிப்பிட்டனர்.

இதன்போது பிரதமர் தமக்கு ஆதரவு அளித்தால் அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் புதிய அமைச்சுக்களை வழங்குவதாக வாக்குறுதியளித்துள்ளார். அதன் நன்றிக்கடனையே தற்போது அமைச்சரவை மாற்றத்தின் ஊடாக செலுத்தி வருகின்றார்.

புதிய அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கூட்டு எதிரணியினர் எவ்வித எதிர்ப்புக்களையும் தெரிவிக்கவில்லை.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இந்த அரசாங்கத்தின் ஒவ்வொரு முறையற்ற விடயத்திற்கும் நாட்டு மக்கள் பதிலளிப்பார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணியினர் முன்னாள் சபாநாயக்கர் சமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிலைப்படுத்த ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவை கூட்டு எதிரணியினர் சார்பில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக பலர் பலவிதமாக தமது தனிப்பட்ட கருத்துக்களை குறிப்பிட்டு வருகின்றனர்.

தேர்தலில் வெற்றிபெற கூடியவரை மாத்திரமே வேட்பாளராக போட்டியிட செய்ய முடியும். இதற்கமைய அனைவர் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமை கூட்டு எதிரணியினரின் வெற்றி கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் உறுதியாக்கப்பட்டு விட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராணுவத் தளபதியுடன் சீனத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சூயுவான், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பின் போது, இலங்கை இராணுவத்துக்கும் சீன இராணுவத்துக்கும் இடையிலான ஒத்துழைப்புகள் தொடரும் என்றும், இன்னும் கூடுதலான பயிற்சி வாய்ப்புகள் அளிக்கப்படும் என்றும் சீனத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன், ஒரு பாதை ஒரு அணை திட்டத்தின் முக்கியத்துவம், அதனால் இலங்கைக்கு பொருளாதார ரீதியில் ஏற்படக் கூடிய நன்மைகள் குறித்தும் இலங்கை இராணுவத் தளபதிக்கு, சீனத்தூதுவர் விளக்கமளித்தார். (இ-7)

# மாட்டு இறைச்சிக்கடை நீர்வேலியில் தீக்கிரை!



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி, நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள மாட்டு இறைச்சிக் கடை ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு கீழ் உள்ள இந்த தீக்கிரையாக்கப்பட்ட கடைக்கு அருகில் இருந்த மற்றுமொரு மாட்டு இறைச்சிக் கடைக்கு எந்த சேதமும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் இது தனிப்பட்ட பகை காரணமாக இடம்பெற்றிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-9)

# பல்கலை.மாணவர்கள் பத்துப் பேருக்கும் பிணை

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் அத்துமீறி நுழைய முற்பட்ட குற்றச்சாட்டில் பொலிஸாரால் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் பிக்கு மாணவர் உட்பட பத்து மாணவர்களை நேற்று முன்தினம் பிணையில் செல்ல கோட்டை பிரதான நீதவான் லால் ரணசிங்க அனுமதித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் வரையில் விளக்கமறியலில் வைக்க அளுத்கடை நீதவான் நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் விளக்கமறியல் காலம் நிறைவடைந்து நேற்று முன்தினம் இவ்வழக்கானது கோட்டை பிரதான நீதவான் லால் ரணசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மாணவர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக கடந்த மாதம் 26 ஆம் திகதி பல்கலைக்கழகங்களில் 2016 மற்றும் 2017 ஆம் கல்வியாண்டுக்காக பௌத்த சமய மற்றும் ஆய்வுத்துறைக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுவதை இடைநிறுத்தியுள்ளமையைக் கண்டித்து அனைத்து பல்கலைக்கழக மாணவ பிக்குகள் சம்மேளனத்தினால் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, குறித்த மாணவர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குள் அத்துமீறி உள்நுழைய முற்பட்ட குற்றச்சாட்டின் பேரில் கறுவாத்தோட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கடந்த மாதம் 27 ஆம் திகதி கோட்டை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளையில் அவர்கள் நேற்று முன்தினம் வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தனர். இவ்விளக்கமறியல் காலம் நிறைவடைந்து நேற்று முன்தினம் இவ்வழக்கானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போதே 10 மாணவர்களையும் 10 இலட்சம் ரூபா ரொக்கம் பிணையிலும் 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது. (இ-7)

# கலைப்பிரிவில் கல்வி கற்க மாணவர்கள் இணையலாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கல்வி ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளதற்கு அமைய யாழ். அல்லைப்பிட்டி பராசக்தி பாடசாலையில் 2017 ஆம் ஆண்டில் க.பொ.த (சாதாரணப்) பரீட்சையில் தோற்றி க.பொ.த. (உயர்தரம்) கற்கத் தகுதியுடைய மாணவர்களையும் ஏனைய அயற் பாடசாலைகளில் சித்தி பெற்று உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்கவுள்ள மாணவர்களையும் இணைத்து யாழ்/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் கலைப்பிரிவை 2018ஆம் ஆண்டில் முதன் முதலாக ஆரம்பித்துசெயற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்பதிவு செய்த மாணவர்கள் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்திச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புதிய பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்திச் சான்றிதழ்களுடன் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# கலை நிகழ்வு

(கொழும்பு)

கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் கலை நிகழ்வுகள் அகில உலக கலைஞர் சங்கத் தலைவர் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிப்பார். (இ)

# போரால் இடைவிலகி மீள்திரும்பிய அரச ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமா?

நாட்டில் கடந்த பல வருடங்களாக ஏற்பட்டிருந்த அசாதரண சூழ்நிலையில் குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருந்த யுத்த நிலைகாரணமாக பல துயரங்களையும் துன்பங்களையும் அனுபவித்தமை மட்டுமல்ல தனிப்பட்ட முறையில் பலர் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டமையினால் இலங்கைத் தீவிற்குள் இடம்பெயர்ந்துள்ளதுடன் இங்கு புகலிடம் கிடைக்கப்பெறாத காரணத்தினால் பலர் நாட்டை விட்டு வெளியேறி இந்தியா போன்ற வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்று உயிரைப் பாதுகாத்துள்ளனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுவரும் குறிப்பாக வடக்கில் ஏற்பட்டுள்ள சாதாரண நிலைமை காரணமாக படிப்படியாக தத்தமது வதிவிடங்களை நோக்கி தமிழ் மக்கள் வருகின்றனர். இன்னமும் தமிழ் மக்கள் வந்தவன்னமுள்ளனர், அந்த வகையில் அரசாங்க சேவையிலிருந்த உத்தியோகத்தர்களுக்கு இச்சம்பவங்கள் விதிவிலக்கல்ல.

இவ்வாறு வெளிநாடுகளுக்குச் சென்ற பல அரசாங்க உத்தியோகத்தர்கள் மீள் திரும்பி தமக்குரிய கடமைகளை தொடர்ந்து ஆற்றுவதற்காக அனுமதிக்குமாறு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் கோரிய போது பல்வேறு நிபந்தனைகளுடன் அப்பணியை வழங்கினர்.

இருந்தும் நாங்கள் எவ்வித வருமானமற்ற நிலையில் மீளவும் அரசாங்க சேவையில் இணைந்து சேவையாற்றுவதற்கு இணைந்தவர்களுக்கு ஏற்கனவே மனநோவுடனும் உள்ளக்காயங்கள் ஆறாத நிலையிலும் தொடர்ந்தும் எம் மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்ற அதீத உணர்வுடன் சேவையில் ஈடுபடும் போது அவர்கள் பல்வேறு நிபந்தனைகளுடன் சேவையில் இணைக்கப்பட்டமையால் கீழ்வரும் பாதிப்புக்கள் நாளாந்த சேவையிலும் ஓய்வு பெறும் காலத்துடன் மட்டுமல்ல பின்னுரித்தாளிகள் வரை மாற்றப்படாத வடுவாக அமையவுள்ளது என்பதை தங்களுக்கு மிகவும் தெளிவுடன் கீழ்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டி எடுத்துரைக்கின்றோம்.

1.சேவை மூப்பு, பதவியுயர்வு பாதிக்கப்பட்டுள்ளது.

2.நிபந்தனைக்குட்பட்ட சம்பளக் கொடுப்பனவு நிர்ணயிக்கப்பட்டுதால் தற்போதைய வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாத நிலைமை.

3. இந் நிலைமையினால் ஏற்கனவே ஏற்பட்ட மனப்பாதிப்பு உளக்காயங்கள் ஆற்றப்படாது தொடரும் நிலை காணப்படுதல்.

அவர்கள் வெளிநாட்டுக்கு விரும்பிய நிலையில் செல்லவில்லை. அவர்களுக்கு இந்நாட்டில் ஏற்பட்டிருந்த உயிர் அச்சுறுத்தல் காரணமாகவே வெளியேற வேண்டிய நிலையேற்பட்டதுடன் அவ்வாறு விரும்பியிருப்பின் அங்கு தொழில் பார்த்து குடியிருக்க சந்தர்ப்பங்களை உருவாக்கியிருக்க முடியும். ஆனால் அவர்கள் எமது மண்ணையும் மக்களையும் அரசாங்க சேவையையும் அரசாங்க வேண்டுகோளையும் மதித்து இங்கு தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்ற துடிப்புடன் மீளத்திரும்பி அரசாங்க சேவையில் இணைந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார்கள். அவர்கள் தமது நிபந்தனையினை நீக்குதல் தொடர்பான நியாயங்களை உரியவர்களிடம் கேட்கின்ற போது உங்களுக்கு வேலை தந்தமையே பெரிய விடயமென அலட்சியப் போக்கில் பதிலளிக்கின்றனர். இக்கருத்துக்கள் மேலும் மனவேதனைக்கு உட்படுத்தியுள்ளது.

இவ்விடயம் இலங்கை நாட்டுக்கே பொதுவான விடயமாகக் கருதப்பட்டு மத்தியரசினால் பொருத்தமான சுற்றிக்கைகள் மூலம் பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நிவாரணமும் சலுகைகளும் கடந்த காலங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இச்சுற்றறிக்கை இலக்கங்கள் வருமாறு, 14/1988-1988.04.25, 33/1990-1990.08.01,4/1991-1991.02.17,11/1993-1993.06.04,04/2006-2006.02.16 மற்றும் 04/2006I-2003.10.31,04/2006-II 27/03/2017.

01.கடமைக்கு சமுகமளிக்காத காலப்பகுதி சம்பளம் வழங்காது விட்டாலும் மீள பதவியேற்ற திகதியில் உரிய சம்பளப் படிநிலையில் வைக்கப்படுதல்.

02.சேவைக்கால அடிப்படையிலான பதவியுயர்வின் போது அறிக்கையிடாத காலப்பகுதியை பதவியுயர்விற்கு தேவைப்படும் மொத்த காலப்பகுதிக்கு உட்சேர்ப்பதுடன் மீள் பதவியேற்பு காலத்தில் இருந்து உடன் முந்தைய காலத்தை உயிர்ப்பான சேவைக்காலமாகக் கருதி கணக்கில் எடுத்தல்.

இச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக தாபனவிதிக்கோவையில் பல்வேறு ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

1.அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுக் கற்கைக்கான மற்றும்/ தொழில் புரிவதற்கான சம்பளமற்ற லீவு மூன்று வருடங்களுக்கு மாத்திரமே வழங்கப்படும். ஆனால் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் வெளிநாட்டில் வசித்தால் சிறிய தண்டனை வழங்கி ஐந்து வருடங்களுக்குமான வருடாந்த சம்பள ஏற்றங்கள் வழங்கப்படும் தா.வி.கோ எண் XXII அத்தியாயம் 16.

02.வெளிநாடு ஒன்றில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஒருவரின் வாழ்க்கை துணைக்கு வழங்கப்படும் சம்பளமற்ற லீவுக்கு வருடங்கள் கருத்தில் கொள்ளாது வருடாந்த சம்பள ஏற்றங்களும் வழங்கப்பட முடியும். தா.வி.கோ 'எண் XXII அத்தியாயம் 36.

03.அரச அலுவலர் ஒருவரின் பிள்ளை அல்லது வாழ்க்கை துணையின் சுகயீனம் காரணமாக மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு ஒரு வருடம் சம்பளமற்ற லீவு வழங்க முடியும். அதேவேளை வருடாந்த சம்பள ஏற்றங்களும் வழங்கப்பட முடியும். தா.வி.கோ எண் XXII அத்தியாயம் 22 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை எண் 11/2013.

04.மாகாண சபைகளுக்கான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க ஊழியர் ஐந்து வருடங்களின் பின் மீளவும் சேவைக்கு வரும் போது அவர்களுக்குரிய வழங்கப்படும் சம்பளமற்ற லீவுக்கான வருடங்கள் கருத்தில் கொள்ளாது வருடாந்த சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட முடியும். அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை எண் 19/2013.

எனவே தீவுக்கு உள்ளேயோ அல்லது தீவுக்கு வெளியேயோ உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நாங்கள் சென்றது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட செயற்பாடேயாகும். ஆதலால் எமக்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நீக்கி நாங்கள் தொடர்ந்திருந்தோம் என்ற அடிப்படையில் பொருத்தமான சம்பளப் படிநிலையில் வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். உழைக்காமலே மேற்குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக பொருத்தமான சம்பளப்படிநிலையில் வைக்கும் போது எம்மை உரிய படிநிலையில் வைப்பதற்கு எந்தவொரு தடையும் இருக்காது என கருதுகின்றோம்.

கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 11/1993 இலும் மற்றும் 04/2006 இலும் பணிக்கு சமுகமளிக்காத காலப் பகுதியிலும் அவர்கள் தொடர்ந்திருந்தார்கள் என்றடிப்படையில் பொருத்தமான சம்பள அடிப்படையில் வைக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளதுடன் ஓய்வூதியத்திற்கும் அக்காலப்பகுதி உரித்துடையதாகும். எந்தவொரு இடத்திலும் பொருத்தமான சம்பள அடிப்படையில் வைக்க வேண்டாம் எனக் கூறப்படவில்லை.

இவ்வாறு பல்வேறு பட்ட சலுகைகளினை மத்திய அரசு வழங்கியுள்ளபோதும் தீர்மானம் எடுக்கும் நிலையிலுள்ள எமது உயர் அதிகாரிகள் மற்றும் சுதந்திரமாக இயங்கும் உறுப்பினர்களும் எமக்கு இதுவரை சரியான தீர்வு வழங்காமையினால் ஏற்கனவே ஏற்பட்ட மனப்பாதிப்பு, உளக்காயங்கள் ஆற்றப்படாது தொடரும் நிலை காணப்படுகின்றது.

தங்களது மாகாண சபை நிர்வாகத்தில் பாதிப்புக்களை எதிர்கொண்ட அரச உத்தியோகத்தர்களாகிய நாங்கள் கௌரவமாகவும் சிறப்புடன் நடத்தப்படுவதற்கும் அதன்மூலம் அர்ப்பணிப்புடன் நிர்வாக பணியாற்றுவதற்கு சந்தர்ப்பமளிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தால் அரச உத்தியோகங்களையும் உடைமைகள், உறவுகள் அனைத்தையும் இழந்து பாதிக்கப்பட்ட அரச ஊழியர்கள், வடக்கு மாகாணம்.

# செய்தித்துளிகள்

## ஈஸ்வரம்மா தின விழா இன்று

(யாழ்ப்பாணம்)

தெய்வீக அன்னை ஈஸ்வரம்மா தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 மணி தொடக்கம் திருநெல்வேலி சேர்.பொன். இராமநாதன் வீதியில் உள்ள சத்தியசாயி சோவா நிலையத்தில் இடம்பெறும். (இ

## திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனர் குருபூசை எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் ஆலய மண்டபத்தில் எ.வி.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சிறப்புரையினை யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் சிவநெறிப் பிரியன் க.மு.நித்தியானந்தன் வழங்குவார். (இ

>>>>>>>>>>>>>>>

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் நடத்தப்படும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை எதிர்வரும் புதன்கிழமை காலை சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும். (இ

## சர்வதேச செஞ்சிலுவை தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள் இணைந்து நடத்தும் சர்வதேச செஞ்சிலுவை தின நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி.மேற்கு பிரிவு தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் இடம்பெறும். (இ

## ஈழத்தில் நிரந்தர அமைதி நிலவ நல்லூரிலிருந்து தரிசன யாத்திரை

### அ'புரம் அம்மன் ஆலயம் வரை செல்கிறது

(யாழ்ப்பாணம்)

ஈழத்தில் நிரந்தர அமைதி சாந்தி, சமாதானம், நல்லிணக்கம் இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி நல்லூர்க்கந்தன் ஆலயத்திலிருந்து தேவநம்பிய திஸ்ஸபுரத்தில் அமைந்துள்ள அநுராதபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு தரிசனயாத்திரை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (இ-9)

## இலங்கையிலிருந்து 200கண் விழித்திரைகள் பாகிஸ்தானுக்கு

(கொழும்பு)

இலங்கை கண் தான சங்கம் 200 கண் விழித்திரைகளை பாகிஸ்தானுக்கு வழங்க முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கண் விழித்திரை பொருத்த அவசியமானவர்களுக்கு இலங்கையிலிருந்து வரும் கண் விழித்திரை உதவியாக இருக்கும் என ஹஸ்மனி வைத்தியர் மற்றும் நலன்புரி நிதியத்தின் விசேட வைத்திய நிபுணர் சுப் ஹஸ்மனி தெரிவித்துள்ளார். (இ-7)

## 17 பொலிஸ் அதிகாரிகளுக்கு பொலிஸ்மா அதிபரால் இடமாற்றம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைக்கு ஏற்ப 17 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவின்படி, அத்தியாவசிய தேவை கருதி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் 17 பேருக்கு உடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபரின் பரிந்துரைக்கு ஏற்ப, இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## மன்றில் உறங்கியவர் மறியலில்

(கொழும்பு)

மாவனல்ல மாவட்ட நீதிமன்றில் அண்மையில் வழக்கு விசாரணைகளுக்காக சென்றிருந்த நபர் தன்னை அறியாமல் உறங்கியதனால், தண்டனை அனுபவிக்க நேரிட்டுள்ளது. காணிப் பிணக்கு தொடர்பான வழக்கிற்காக நீதிமன்றம் சென்றிருந்த குறித்த நபர், தன்னை அறியாமல் உறங்கிய போது அவரது தொலைபேசி சத்தமாக ஒலித்துள்ளது. இதனைத் தொடர்ந்து குறித்த நபரை நீதிமன்ற சிறைச் சாலையில் தடுத்து வைக்குமாறு நீதவான் மலிந்த லியனகே பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (இ-7)

# இனவழிப்பு, போர்க்குற்றங்கள் குறித்து

# சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணைக்கான குரல் ஒருமுகப்படுத்தி வலுப்படுத்தப்பட வேண்டும்

## முள்ளிவாய்க்கல் நினைவேந்தல் நிகழ்வுக்கு த.தே.ம.முன்னணி அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்ட இனவழிப்பின் 9 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் நடைபெறவுள்ளது.

இன அழிப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களின் உரிமைக்காக நடத்தப்பட்ட ஆயுதமேந்திய போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாளான மே 18 என்பது தமிழரது சரித்திரத்தில் மறக்க முடியாத கறைபடிந்த நாளாகும். அந்நாள் தமிழினம் இன அழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட இனவழிப்பு தினமாகும்.

இந்நாளை ஓரிடத்தில் நினைவுகூருவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர்கள் அனைத்துத் தரப்புக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எம்மைப் பொறுத்தவரை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாள் நினைவேந்தலின் முக்கியத்துவம் என்பது நினைவுகூரல் என்பதற்கு அப்பால் தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு, போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு கொண்டு செல்லப்படல் வேண்டும். அல்லது விசேட சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் ஒன்றின் மூலம் பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணைக்கான குரல் ஒருமுகப்படுத்தி வலுப்படுத்தப்படல் வேண்டும் என்பதாகும்.

மேற்படி நினைவேந்தலை ஓரிடத்தில் ஒற்றுமையாக நடத்த ஒத்துழைக்குமாறு கோரி பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த 30.04.2018 ஆம் திகதி வெளியிட்டுள்ள தமது அறிக்கையில் "ஒற்றுமை என்ற பெயரில் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நீத்துப்போகச் செய்யும் நோக்கமோ தமிழ் மக்களுக்கான நீதி வேண்டிய பயணத்தில் முட்டுக்கட்டைகளாக இருப்போரை அரவணைக்கும் நோக்கமோ" இல்லை என்பதனை உறுதிபடத் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் அவர்களது கோரிக்கைக்கு மதிப்பளித்து முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்வை பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து நடத்துவதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

மேலும் தாயக மண்ணில் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளை கூட்டாக நினைவுகூருவதற்கான உரிமை தமிழ் மக்களுக்குள்ளது.

எனவே முள்ளிவாய்க்காலில் நடைபெறும் நினைவேந்தல் நிகழ்வில் ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு அன்புரிமையுடன் வேண்டிக் கொள்வதுடன், நேரில் செல்ல முடியாதவர்கள் இனவழிப்பு யுத்தத்தில் இறந்த எம் உறவுகளின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்குமாறும் வேண்டுகின்றோம் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-4)

# மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் இல்லையேல் நித்திரை தூங்கும் அமைச்சுக்களுக்கு செல்லுங்கள்

## அதிகாரிகளுக்கு அமைச்சர் சஜித் அறிவுரை



(கொழும்பு)

தன்னுடைய அமைச்சில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் சிரமம் பாராமல் மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

அப்படி இல்லையாயின் நித்திரை தூங்குகின்ற அமைச்சுகளுக்கு இடமாற்றம் பெற்று செல்ல முடியுமெனவும் அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

திருகோணமலை - கோமரங்கடவெல, கல்யாணபுர பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பொகுனுகம மற்றும் ரன்கிரிகம ஆகிய மாதிரி கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எனது அமைச்சு மக்கள் மயமான அமைச்சாகும். நான் அரசியலுக்கு வந்தது தனிப்பட்ட வியாபாரம் செய்வதற்கு அல்ல. மக்களுக்கு சேவை செய்வதற்காகத் தான் அரசியலுக்கு வந்தேன்.

2019 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் மொத்தமாக 2500 மாதிரிக் கிராமங்களுடைய வேலைகளை ஆரம்பித்து வைப்பது எனது நோக்கமாகும். தற்போது 750 மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர்களின் நலன்கருதி பயணிகள் நிழற்குடை நிர்மாணிக்கப்பட்டு நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.இந் நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(படங்கள்:-இளவாலை செய்தியாளர்)

## சித்திரைப் புத்தாண்டு கலைவிழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைபிரதேசகலாசார மத்திய நிலையம் நடத்தும் சித்திரைப் புத்தாண்டு கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் பருத்தித்துறை புற்றளை கலாசார மத்திய நிலையத்தில் கலாசார மத்திய நிலையபொறுப்பதிகாரி ஜெகிரிதரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி, சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை உதவிக் கல்விப்பணிப்பாளர்கலாபூஷணம் செல்வி சரோஜா தம்பு ஆகியோர் கலந்து கொள்வர். (இ

# கோப்பாயில் மருத்துவ முகாம்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி கிராம அலுவலக பிரிவினரும், யாழ். பல்கலைகழக மருத்துவ பீடத்தினரும் இணைந்து நடத்திய மருத்துவ முகாம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கோப்பாய் மத்தி கிராம பொதுமக்களுக்கான விசேட வேலைத்திட்டத்தில் தூய்மையான கோப்பாய் மத்தி 22ஆம் கட்ட நிகழ்விலேயே இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 60 இற்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (இ-9)

# நுண்மதிப் பரீட்சைகள் 12ம் திகதி

(யாழ்ப்பாணம்)

கடந்த வருட உயர்தரப் பெறுபெறுகளின் அடிப்படையில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நுண்மதிப் பரீட்சைகள் எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அறியத் தந்துள்ளார்.

யாழ்ப்பாணம், அநுராதபுரம், கண்டி, கொழும்பு, மாத்தறை, பதுளை ஆகிய ஆறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 21 பரீட்சை நிலையங்களில் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத மாணவர்கள் 055 356 1752 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பரீட்சைகள் பிரிவை தொடர்பு கொள்ள முடியும் எனவும் பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இரு வாகனங்கள் தீக்கிரை



(ஏறாவூர்)

மட்டக்களப்பு, பரீனாஸ் வீதியிலுள்ள வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியன தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றிருக்கலாமென பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

காத்தான்குடி பிரதேச செயலகத்தில் கடமை புரியும் ஊழியர் ஒருவரின் இரு வாகனங்களே இவ்வாறு இனந்தெரியாதவர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# 180 இலட்சம் பெறுமதியான மாணிக்க கற்கள் கொள்ளை

## மூவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

180 இலட்சம் ரூபா பெறுமதியான மாணிக்கக்கற்களை கொள்ளையிட்ட மூவர் பேருவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் பேருவளை-சுங்கொட-விகாரை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை தடுத்து நிறுத்தி, துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தி குறித்த மாணிக்க கற்களை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் 24, 31 மற்றும் 35 வயதான எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அனுமதிப்பத்திரத்துடன் ஆற்று மணல் வைத்திருப்பின் அச்சம் கொள்ளத்தேவையில்லை

## தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கிராமங்களில் சட்டவிரோதமான முறையில் ஆற்று மணலை சேகரித்து வீடுகளில் வைத்திருந்து வெளி மாவட்டங்களுக்கு விற்பனை செய்து வருபவர்களின் வீடுகளில் உள்ள ஆற்று மணல் குவியல்களை பொலிஸார் கைப்பற்றி வருவதாகவும், அனுமதிப் பத்திரத்திற்கு அமைவாக தமது வீட்டுப் பயன்பாட்டு க்காக மணலை சேகரித்து வைத்துள்ள மக்கள் இது தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இந்த அதிரடி நடவடிக்கை நேற்று சனிக்கிழமை காலை தொடக்கம் ஆரம்பிக் கப்பட்டு தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அண்மைய காலமாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட பொலிஸ் சோதனை நடவடிக்கைகளையும், சுற்றி வளைப்புக்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொலிஸாரும் மற்றும் கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸாரும் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இதனடிப்படையில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையங்களை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் ஆற்று மணலை அகழ்வு செய்தும், காட்டு மரங்களை வெட்டிக் கடத்திப் பயணித்த உழவு இயந்திரங்களையும் மற்றும் டிப்பர் வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றி கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றையதினம் உழவனூர், கல்லாறு, தருமபுரம் போன்ற கிராமங்களில் உள்ள வீடுகளில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை சேகரித்து வைத்திருந்த 6, இடங்கள் இனம் காணப்பட்டு, டிப்பர் வாகனங்களிலும் மற்றும் உழவியந்திரங்களிலும் மண் அகழ்வு இயந்திரத்தின் உதவியுடன் பொலிஸார் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு ஆற்று மணலை எடுத்து வந்துள்ளனர்.

இந் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதால் அனுமதிப்பத்திரத்திற்கு அமைவாக ஆற்று மணலை ஏற்றி தமது வீட்டு கட்டட வேலைகளுக்காக வைத்திருக்கும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)




## 10 மணித்தியால சோதனையில்

# கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலம்

## மணல் ஏற்றிய உழவு இயந்திரங்கள் கைப்பற்று

(மல்லாவி)

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் 10 மணி நேரம் நடைபெற்ற விசேட பொலிஸ் சோதனை நடவடிக்கையின் போது கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று கைப்பற்றியுள்ளதுடன், சட்ட விரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த இரண்டு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதன் சாரதிகள் இரண்டு பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமலகுணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது,

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குமாரசாமிபுரம் ஆற்று பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு 5 ஆயிரத்து 670 லீற்றர் கசிப்புக் கோடாவுடன், கசிப்பு 20 லீற்றரையும் கைப்பற்றியதுடன் சம்பவ இடத்தில்வைத்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றிய பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை பொலிஸார் நிர்மூலமாக்கி உள்ளனர்.

இச் சம்பவத்தின் போது தப்பிச் சென்ற சந்தேக நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, போதைப் பொருள் மற்றும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப்பிரிவின் பொலிஸார் தருமபுரம் புளியம்பொக்கணைக் காட்டுப் பகுதியில் இருந்து சட்ட விரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றிப் பயணித்த இரண்டு உழவு இயந்திரங்களைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதன் சாரதிகள் இரண்டு பேரையும் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (2-15)

## மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடமாகாண அலுவலக திறப்புவிழா

(கிளிநொச்சி)

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடக்கு மாகாண அலுவலகம் அறிவியல் நகர் கிளிநொச்சியில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு திறப்பு விழா நிகழ்வு நடைபெறவுள்ளது என வடக்கு மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2)

# பாடசாலைகளில் பலா மரக்கன்றுகள் நடுகை





(குருமன்காடு)

வவுனியாவில் பாடசாலைகளில் பலா மரக்கன்றுகள் நடுவதற்கு வன்னி பிரதி பொலிஸ் காரியாலயம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் பாடசாலைகளில் பலா மரக்கன்றுகள் நடும் நிகழ்வு வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

வன்னி பிராந்திய சமுதாய பொலிஸ் பிரிவின் திட்டத்திற்கமைய வவுனியா மற்றும் மன்னார் பிரதேசங்களிலுள்ள 22 பொலிஸ் பிரிவுகளில், ஒரு பொலிஸ் பிரிவிற்கு 500 பலா மரக்கன்றுகள் வீதம் மொத்தம் 11 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படுகிறது.

வன்னி பிரதி பொலிஸ்மா அதிபர் மரக்கன்றை நாட்டி 15 ஆவது பொலிஸ் பிரிவின் நிகழ்வை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் 50 மரக்கன்றுகளை பாடசாலை மைதானத்தை சூழவும் நாட்டினர்.

இந்நிகழ்வின் மூலம் பாடசாலை மாணவர்களிடம் மரங்களை வளர்ப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் பொலிஸாரினால் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக மக்கள் கவனயீர்ப்பு

## பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளிப்பு


(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உயிலங்குளம் கிராம அலுவலர் பிரிவில் இந்திய அரசின் நிதியுதவியில் அமைக் கப்பட்ட வீடுகளில் மக்கள் வாழ முடியாத நிலையில் இருப்பதாகவும் அதனை திருத்த அதிகாரிகள் முன்வராத பட்சத்தில் சுழற்சி முறை யிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்து நேற்று முன்தினம் துணுக்காய் பிரதேச செயலகம் முன் கவனயீர்ப்பு போராட்டம்ஒன்றை முன்னெடுத்து பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட வீடுகள் மக்கள் வாழ முடியாத நிலையில் வீடுகளின் சுவர்கள் வெடித்து ஜன்னல் நிலைகள் அனைத்தும் சேதமடைந்து காணப்படுவதாகவும் எந்தவொரு மழை காற்று வந்தாலும் இடிந்து விழும் அபாயம் காணப்படுவதாகவும் இதனால் வாழ அச்சப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிபாக 2012 ஆம்ஆண்டு குறித்த பகுதியில் அமைத்து கொடுக்கப்பட்ட 50 வீடுகளில் யுத்தத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்கள், முன்னாள் போராளி குடும்பங்கள் என குடியமர்த்தப்பட்டனர்.





இவர்கள் குடியமர்த்தப்படும் போது 5 ஆண்டுகளில் காணிக்கான ஆவணங்கள் வழங்குவதாகவும் வீதிகள் புனரமைத்து குடிநீர் விநியோகம் உள்ளிட்ட சகல வசதிகளையும் ஏற்படுத்தி தருவதாக கூறியபோதும் இதுவரை காணிக்கான ஆவணங்கள் வழங்கப்படவில்லை, வீதிகள் திருத்தப்படவில்லை.

இந் நிலையில் இதுவரை எவரும் இவ் விடயத்தில் அக்கறை காட்டவில்லை என தெரிவித்து நேற்று முன்தினம் துணுக்காய் பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றினையும் கையளியத்தனர்.

முன்னதாக துணுக்காய் பேருந்து நிலையத்துக்கு அருகில் ஒன்றுகூடிய மக்கள் அங்கிருந்து பிரதேச செயலகம் வரை பேரணியாக நகர்ந்து பிரதேச செயலாளருக்கான மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந்த மகஜரை பிரதேச செயலாளர் இல்லாத காரணத்தால் நிர்வாக உத்தியோகத்தரிடம் கையளித்தனர். மகஜரைக் பெற்றுக்கொண்ட நிர்வாக உத்தியோகத்தர் பிரதேச செயலாளரிடம் கையளித்து உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்வதாக தெரிவித்தார்.

இதன்போது மக்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் தமக்கான தீர்வு கிடைக்கவில்லையெனில் பிரதேச செயலகம் முன்பாக சுழற்சி முறையிலான உணவுதவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்தனர். (2-281-15)

ஆட்டை வெட்ட வேண்டாம்.
என் தலையை வெட்டுங்கள்

*– கௌதம புத்தர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நினைவேந்தலுக்கான குழுவொன்றை அமையுங்கள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது உலகத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக அனுஷ்டிக்கப்பட வேண்டிய நாள்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் கொடும் போர் நடத்தி எங்கள் உறவுகளைச் சிங்களப் பேரினவாதம் கொன்றொழித்த கொடுமையை யார் மறந்தாலும் நாம் மறக்க மாட்டோம் என்பதை நினைவுபடுத்தும் நாள்.

இதற்கு மேலாக எங்கள் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துகின்ற புனிதமான நாள்.

ஆம், உரிமையோடு வாழவேண்டும் என்று நினைத்ததற்காக குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று எந்தப் பேதமும் பார்க்காமல் கொத்துக் கொத்தாக எங்கள் உறவுகளைக் கொன்றொழித்த கொடுமை நடந்ததை உலகத்துக்கு எடுத்துக் கூறுகின்ற நாளாகவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான மே 18 அமைந்துள்ளது.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்பதை நிரூபிப்பதற்காக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றொழித்து தமிழர் மனங்களை ரணமாக்கிய கொடுமை ஒன்றுபோதும் உலகத் தமிழினத்தை ஒற்றுமைப்படுத்த.

எனினும் எங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை அடிக்கடி மறந்து போகின்றவர்களும் இழப்பின் வலியை உணர முடியாதவர்களும் நம் அரசியலில் இருக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இருந்தும் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது சகல பேதங்களையும் கடந்து அனுஷ்டிக்கப்பட வேண்டிய நாள் என்பதில் எந்த மறுப்புக்கும் இடமில்லை.

அதேநேரம் ஒரே நாள், ஒரே நேரம் அனைவரும் ஒன்றுகூடி நினைவிடத்தில் நினைவேந்தல் செய்வதென்பது எங்கள் உறவுகளின் ஆத்ம சாந்திக்கு நிச்சயம் வழிவகுக்கும்.

எனவே ஒற்றுமையாக; ஒன்றுபட்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிப்பது கட்டாயமானதாகும்.

அதேசமயம் எங்கள் உறவுகளை நினைவுகூருகின்ற முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நினைவு மண்டபம் அமைப்பதும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அவ்விடத்தில் ஒன்றுகூடி நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்குமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதனை உடனடியாக செய்ய முடியவில்லை என்றாலும் அதற்கான திட்டமிடல்கள் விரிவான வகையில் தயாரிக்கப்படுவது அவசியமாகும்.

இவற்றையெல்லாம் எங்கள் தாயகத்தைச் சேர்ந்த நிபுணர்கள் மூலமாக திட்டமிடுவதற்கான குழுக்களை உருவாக்க வேண்டும்.

இத்தகைய பணிகளையும் நினைவேந்தலை ஒருமுகமாகவும் செய்வதற்கான ஒரு நிலையான அமைப்பை உருவாக்குவது எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும்.

அமைக்கப்படுகின்ற குழுவில், தமிழர் அரசு என்ற வகையில் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரும் அவர் சார்ந்த அவையும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தாயகத்தின் நிபுணத்துவ தரப்பினர், புலம்பெயர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என அதன் விரிபரப்பு அமைவது நல்லது. இதுபற்றி அனைவரும் ஆராய வேண்டும்.

ஏனெனில் எந்த இட்டல் இடைஞ்சல் வந்தாலும் நினைவேந்தல் அனுஷ்டிப்பில் நிலையாலயம் அமைப்பதில் எந்த இடையூறும் ஏற்படக் கூடாது.

# அரச உத்தியோகத்தர்களின் சேவை யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் – கூரே

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக செயற்படும் வகையில் அரச உத்தியோகத்தர்களின் சேவை அமைய வேண்டும் என வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் கீழுள்ள பொது நிர்வாக சேவைகள் திணைக்களத்திற்கு உட்பட்ட ஐந்து மாவட்டங்களுக்கான 23 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

வடமாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நியமனக் கடிதங்களை வழங்கிய பின்னர், புதிதாக நியமனம் பெற்றவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், "யாழ்ப்பாணத்தில் சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிகமான பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்றி காணப்படுகின்ற நிலையில், உங்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையை எண்ணி மகிழ்ச்சியடைய வேண்டும்.

முல்லைத்தீவு, மன்னார் போன்ற தூரப் பிரதேசங்களில் பணியாற்றும் வகையிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்கு அப்பிரதேசங்களிலேயே பணியாற்ற வேண்டும்.

எனவே, அதற்கு முன்னர் காரணங்களை கூறிக் கொண்டு இடமாற்றம் கோரி வருவதை தவிர்த்துக் கொள்ளவும்" என்றும் குறிப்பிட்டார். (ம)

## அரசியலமைப்பின் 20ஆவது சீர்திருத்தம் தொடர்பில் சுதந்திரக் கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை

அரசியலமைப்பின் 20 ஆவது சீர்திருத்தத்திற்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் இதுவரை தீர்மானிக்கவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியால் தனிப்பட்ட பிரேரணையாக 20ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த யோசனை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும் 20ஆவது அரசியலமைப்பு சீர்திருத்த யோசனை சம்பந்தமாக இதுவரை எதுவித தீர்மானமும் எடுக்கவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் செயலாளர் மகிந்த அமரவீரவிடம் தெரிவித்ததாக அந்த யோசனை இதுவரை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறினார்.

ஆகவே இந்த யோசனை பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தீர்மானிப்பதாக அவர் கூறினார். (ம)

## சொந்த செலவில் வீதியை திருத்தியமைத்த பிரதேசவாசிகளுக்கு நீதிமன்றம் அபராதம்

(கொழும்பு)

பதிய பெலல்ல - வியன்வல மடுமான சந்தியில் இருந்து கலபெலியாவ வரையான திவன வரல்காட்டிய வீதியின் இரண்டு பக்கங்களிலும் கடந்த 45 ஆண்டுகளாக வசிக்கின்ற 36 குடும்பங்களுக்கு நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி கட்டாயமாக தேவைப்படுகின்ற 36 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 250,000 ரூபாய் பணத்தை செலவிட்டும் தமது சொந்த நிலங்களில் ஒரு பகுதியை தியாகம் செய்தும் இந்தப் பாதையை புனரமைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கை தொடர்பாக கிராமசேவகருக்கும் அபிவிருத்தி அதிகாரிக்கும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியை விரிவாக்கம் செய்வதற்காக பிரதேசத்தின் சிலர் சுயவிருப்பத்தில் வழங்கிய நிலத்தில் இருந்த பலா மரங்களை வெட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கிராம சேவகரும் அபிவிருத்தி உத்தியோகத்தரும் கூட இந்த பலா மரங்களை முழுமையாக வெட்டி அகற்றிவிடுமாறு கூறியதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வீதி விரிவாக்கம் நிறைவடைந்ததன் பின்னர் எழுத்துமூல அனுமதி பெறவில்லை என்று கிராம சேவகரால் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின்படி, வலப்பனே மாவட்ட நீதிமன்றத்தில் இந்த 36 குடும்பங்களுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 5000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

45 வருடங்களாக சீரமைக்கப்படாமல் இருந்த வீதியை தமது சொந்த செலவில் திருத்தியமைத்ததில் என்ன குற்றம் என்று பிரதேசவாசிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம)

## சிறுபான்மைக் கட்சிகளுடன் ஜே.வி.பி.கலந்துரையாடத் தயார்

(கொழும்பு)

20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் சிறுபான்மைக் கட்சிகளுடன் கலந்துரையாட தயாராகவுள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்காக அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை ஜே.வி.பி கொண்டு வரவுள்ளது.

எனினும், அரசியலமைப்பு மறுசீரமைப்பு பகுதியளவில் அல்லாமல், முழுமையாக இடம்பெற வேண்டும் என சிறுபான்மைக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், சிறுபான்மைக்கட்சிகளின்நிலைபாடு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார். (இ-7)

## சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக மேர்வின் சில்வா அறிவிப்பு

(கொழும்பு)

அநுராதபுரத்தில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க விஜிதபுர கோட்டையை அழிப்பதற்கு எதிராக சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்போவதாக முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். விஜிதபுர கோட்டையை அழிப்பதானது புத்தகாயவை தரை மட்டமாக்குவதற்கு இணையானது.

இது நாட்டின் முகப்பு. இதனை அழிப்பவர்கள் அரசாங்கத்தில் இருப்பார்கள் என்றால், அவர்கள் எல்லாளனின் பரம்பரைக்கு பிறந்தவர்களாக இருப்பார்கள்.

இது குறித்து தேடி அறிய அநுராதபுரத்திற்கு செல்ல உள்ளேன். விஜிதபுர கோட்டையை அழிப்பதற்கு எதிராக சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கவும் தயாராக இருக்கின்றேன் என மேர்வின் சில்வா மேலும் தெரிவித்தார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**தானம் எத்தனை வகைப்படும்?**

தானம் பல வகைப்படும் என்றாலும் பஞ்சதானங்கள்தான் (ஐந்து வகை) முக்கியமானவை. அறிவு தானம், அன்னதானம், வஸ்திர தானம், பொருள்தானம், பூமி தானம் இவை ஐந்தும் முக்கியமானவைகளாகும், மகத்தானவைகளாகும். வலது கை கொடுப்பதை இடது கை அறியக்கூடாது என்பது பண்டைய சொல்லாகும். அதாவது தானத்தைக் கொடுத்துவிட்டு அதைப்பற்றி பெருமை பேசுதல் கூடாது என்பதாகும். பிரதிபலனை எதிர்பார்க்காமல் மகிழ்ச்சியுடன், மனநிறைவுடன் செய்யப்படும் தானமே உண்மையான தானமாகும். இன்றும் புண்ணியம் என்று தெரிந்தோ தெரியாமலோ ஏராளமானவர்கள் தானம் செய்து புண்ணியம் பெறுகிறார்கள். *(தொடரும்)*

### மோட்டார் கார் மீது
## பருத்தித்துறை வீதியில் கல் வீச்சுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வீதியில் பயணித்த கார் மீது இனந்தெரியாத மூன்று இளைஞர்கள் கல் வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11மணியளவில் பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டி சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கார் மீதே மேற்படி கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **மன்னார் பிரதேசத்தில்** முருங்கனிலிருந்து சிலாவத்துறை வரை, முள்ளிக்குளம், அரிப்பு, நானாட்டான் நகரம், அச்சங்குளம், நொச்சிக்குளம், மயிலங்கேணி, முருங்கன்பிட்டி, ஆத்திக்குளி, செட்டிகண்தீவு, தேற்றாக்களஞ்சியம், சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், டொன் பொஸ்கோ, தலைமன்னார் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# துணுக்காய் வலய விளையாட்டுப் போட்டி ஒட்டுசுட்டான் கோட்டம் முதலிடம்



துணுக்காய் வலய மட்ட விளையாட்டுப்போட்டி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுள்ளது. முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட தடகள விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் துணுக்காய்வலய கல்விப் பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் தலைமையில்நடைபெற்றது நிகழ்வின் சிறப்பு விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் கலந்து கொண்டார்.

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களின் தடகள விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை சிறப்பு விருந்தினர் க.சிவனேசன் வழங்கிக் கௌரவித்துள்ளதுடன் தொடர்ந்து மாணவர்களுக்கு சான்றிதழ்களை விருந்தினர்கள் வழங்கி கௌரவித்துள்ளார்கள்.

துணுக்காய் வலய விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் கோட்ட நிலையில் ஒட்டுசுட்டான்கோட்டம்690 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினையும்,மாந்தை கிழக்கு கோட்டம்648.5 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும். துணுக்காய் கோட்டம் 628.5 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளன. இந்த விளையாட்டு நிகழ்வில் ஆசிய மட்டத்தில் பளுதூக்கும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிபெற்ற துணுக்காய் வலயத்தினை சேர்ந்த மாணவியும் அவரின் பயிற்சியாளரும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க-281)

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலக விளையாட்டு விழா -2018

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக விளையாட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. மாலை 2.00 மணிக்கு ஆரம்பமான இவ் விளையாட்டு நிகழ்விற்கு முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்ததுடன் ஏனைய பல அதிதிகளும் வருகை தந்து நிகழ்வை சிறப்பித்திருந்தனர். 100, 4X100, கயிறு இழுத்தல், உதைபந்தாட்ட இறுதிப் பேட்டி உட்பட பல நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மாலை 6.00 மணியளவில் பேட்டிகள் யாவும் நிறைவு பெற்றன. (க)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பிவையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# வடக்கு மாகாண மாணவர்கள் எந்த வகையிலும் சளைத்தவர்கள் அல்ல

## விவசாய அமைச்சர் சிவனேசன் புகழாரம்



ஆசிய மட்ட விளையாட்டிலும் சாதனை படைத்த மாணவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்றார்கள் என வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய்வலய விளையாட்டுப் போட்டி நிகழ்வு கடந்த வியாழக்கிழமை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய விளையாட்டுத் திடலில் சிறப்புற நடைபெற்றுள்ளது.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்தும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் வலய விளையாட்டுப்போட்டி சிறப்புற நடைபெற்றுள்ளது. விளையாட்டில் வடமாகாண மாணவர்கள் சற்று உற்சாகத்தினை அதிகளவில் காட்டுகின்றார்கள். குறிப்பாக துணுக்காய் வலய மாணவர்கள் விளையாட்டில் அதிகளவு ஆர்வம் காட்டுகின்றார்கள்.

வடக்கில் துணுக்காய் வலயத்தினை பொறுத்தவரையில் பல மாணவர்கள் பல சாதனைகள்ள வலயமட்டம், மாவட்ட மட்டத்தையும் தாண்டி மாகாணத்தினையும் தாண்டி தேசிய ரீதியில் பல சாதனைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும்அதே வேளை ஆசிய மட்டத்திலும் இந்த வலய மாணவர்கள் சென்று சாதனை படைத்துள்ளார்கள்.

இது மிகவும் பாராட்டப்பட வேண்டும். இலங்கையில் இருக்கின்ற எந்த மாகாணத்திற்கும் சளைத்தவர்கள் அல்ல வடமாகாண மாணவர்கள் என்பதை காட்டி நிக்கின்றார்கள் என்று வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் தெரிவித்துள்ளார். (க-281)

## அரியாலை ச.ச.நிலையத்தின் அரையிறுதிப் போட்டிகள்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 99வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்திய அமரர் நவரத்தினம் சிவம் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம் (ஓவர்கேம்) தொடரின் அரையிறுதிப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு நிலைய மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது. முதலாவது அரையிறுதிப் போட்டியில் கோண்டாவில் கிங்ஸ்ரார் அணியை எதிர்த்து வரணி இளைஞர் வி.க.அணியும் அரியாலை சனசமூக நிலைய அணியை எதிர்த்து பருத்தித்துறை எதிர் உதய கதிர்காமர் வி.க. அணியும் மோதவுள்ளன. (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு-III விக்டோறி அணி வெற்றி




யாழ். நகரில் இருந்து சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு (III) தொடரில் இரு அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில் விக்டோறி அணி நியூஸ்ரார் அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று தங்களது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளனர். முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் அணி 40 ஓவர்களின் சகல இலக்குகளையும் இழந்த 266 ஓட்டங்களைப் பெற்றனர். கிருஸ்ணதீபன்- 31, கபில்ராஜ்- 25, மோகன்குமார்- 23, ரம்மியராகுலன்- 22, பிரசாத் - 79, கிரிசான்- 24 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் சுஜிதன்- 01, பிரியங்கன்- 03, கதியோன்- 01, கிரி-03, டானியல்- 01 இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்டோறி அணி 38.01 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஐங்கரன்- 26, கணேஸ்- 11, பிரசாந்த்-35, கதியோன் ஆட்டமிழக்காது-57, பிரியன்கன் ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் மோகனதீபன்-01, சயந்தன்- 01, தகீபன்-02, இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 9 ஆவது ஆண்டாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவுநிகழ்வில் (RATING) விக்டோறி அணி 9.27 புள்ளிகளையும் நியூஸ்ரார் அணி 3.06 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (க)





வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கான தடகளப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வுகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே வலயத்தில் சாதித்தவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைப்பதனைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)





## தமிழ் நாட்டிலிருந்து...

பருத்தித்துறையில் இருந்து தமிழகம் சென்ற பட்கிலேயே இவர்கள் தாயகம் திரும்பியதுடன், படகுப் பயணத்துக்குரிய கட்டணமாக சுமார் 5 லட்சம் ரூபாய் அறவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த 1996 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து குடும்பமாக இந்தியா சென்றுள்ளனர். இவர்கள் தமிழகத்தில் உள்ள முகாம்களில் தங்கியுள்ளனர்.

பின்னர் அங்கிருந்து சிலர் மீண்டும் தாயகம் திரும்பியுள்ளனர். அவர்களின் பிள்ளைகளை அங்கே திருமணம் முடித்து முகாமில் இருந்து வெளியேறி தமிழகத்தின் வேறு மாவட்டங்களில் வசித்து வந்துள்ளனர்.

அவர்களில் 3 குடும்பங்கள் மீண்டும் தாயகம் திரும்புவதற்கு விரும்பியுள்ளனர். ஆனால் அவர்களிடம் முகாமில் இருப்பதற்கான பதிவுகள் எவையும் இல்லாத காரணத்தினால்தாயகம் திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே சட்டவிரோதமான முறையில் தாயகம் திரும்புவதற்கு முடிவு செய்த குறித்த நபர்கள், பருத்தித்துறையில் உள்ள நபர் ஒருவருடன் தொடர்பு கொண்டு படகின் மூலம் தாயகம் திரும்ப ஆயத்தமாகியுள்ளனர்.

அதில் 4 சிறுவர்கள் உட்பட 11 பேருக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் குடும்பத்தை சேர்ந்த ஒரு பிள்ளைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் படகு பயண கட்டணமாக செலுத்தியுள்ளனர். பருத்தித்துறையில் இருந்து தமிழகம் சென்ற இருநபர்கள் (கோணேஸ்வரன் (வயது-45) துசிந்தன் (வயது-25)) நேற்றுமுன தினம் மாலை குறித்த நபர்களை வேலூர் வேளாங்கன்னி ஆலய பகுதியில் இருந்து தாயகம் அழைத்து வந்துள்ளனர்.

நேற்று அதிகாலை இலங்கை கடற்படையினரின் தேடுதலின் போது குறித்த படகு சோதனை செய்யப்பட்ட போது சம்பவத்தை தெரிந்துகொண்ட கடற்படை அனைவரையும் கைது செய்து காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 4 குழந்தைகள் உட்பட 12 பேர் தமிழகத்தில் இருந்து வந்த ஈழ அகதிகள் எனவும் 2 நபர்கள் அவர்களை ஏற்றிவந்த பருத்தித்துறையை சேர்ந்த நபர்கள் எனவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் இவர்கள் பயணம் செய்த படகில் 17 கிலோ கஞ்சா பொதி இருந்ததாகவும் அது பொலிஸாரின் விசாரணைகளின் போது சிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்ட நபர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனையின் பின்னர் நேற்று இரவு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சனின் வாசஸ்தலத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ம-9)

## ஊர்காவற்றுறை பகுதியில்...

சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 3 நாட்களுக்கு முன்னர் திருட்டுச்சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அந்த திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர் நாரந்தனை பகுதியில் இருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனை அடுத்து சந்தேக நபரை கைது செய்வதற்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 3 பொலிஸார் நேற்று காலை சீருடையுடன் நாரந்தனை பகுதிக்கு சென்றுள்ளனர்.

குடில் ஒன்றில் வசித்து வந்த குறித்த சந்தேக நபர் பொலிஸாரை கண்டதும் தான் வைத்திருந்த வாளால் பொலிஸார் ஒருவரின் காலில் வெட்டி விட்டு தப்பிச்சென்றுள்ளார்.

காயமடைந்த பொலிஸை அவருடன் சென்ற பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்ததுடன் குறித்த சம்பவம் தொடர்புடைய நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## 'மே-7' தனியாருக்கு...

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

வெசாக் தினத்தினை முன்னிட்டு மே 1 தொழிலாளர் தினத்தை, மே மாதம் 7ஆம் திகதி அன்று கொண்டாட அரசாங்கம் முடிவுசெய்து, அன்றைய தினத்தை பொது விடுமுறை தினமாக அறிவித்திருந்தது.

இந்த நிலையில், 7ஆம் திகதி அன்று தனியார் துறைக்கான விடுமுறையைப் பற்றிய எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை என அமைச்சர் கூறியுள்ளார்.

1971ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க விடுமுறைச் சட்டத்தின் கீழ் உள்நாட்டலுவல்கள் அமைச்சில் உள்ள அதிகாரங்களின் அடிப்படையில். 2018ஆம் ஆண்டிற்கான அனைத்து விடுமுறைகளும், 2017ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் திகதி சனிக்கிழமை வெளியான அறிவித்தலில் இலக்கம் 2024/55 இல் "அரசாங்கம் மற்றும் தனியார் துறை தவிர அனைவருக்கும் விடுமுறை" என அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் தனியார் துறையினருக்கான விடுமுறைகள் தொடர்பிலான சுற்றறிக்கை, தொழிலாளர் அமைச்சகத்தினால் வெளியிடப்படும் என அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். (ம)

## வடக்கில் இன்று...

இன்றைய தினம் உஷ்ணமான காலநிலை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் மாத்தளை, குருநாகல், கம்பஹா மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் இவ்வாறு உஷ்ணமான காலநிலை காணப்படும் என்று அந்த திணைக்களம் கூறியுள்ளது.

இதன் காரணமாக அதிகமாக தண்ணீர் அருந்துமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

## முள்ளிவாய்க்கால் நினைவுத்...

வித்து வருகின்றனர்.

இனவிடுதலை போராட்டத்தில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் நினைவாக யாழ்.பல்கலையில் மாணவர்களின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்ட "முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி" அமைக்கும் பணிகள் தடுத்து நிறுத்தப்பட்டமைக்கு பல்வேறு தரப்பினரிடம் இருந்து பாரிய எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. அதில் யாழ்.பல்கலையில் கல்வி கற்கும் மாணவர்களின் உறவுகளும் கொல்லப்பட்டுள்ளனர். எனவே தமது உறவுகளை நினைவு கூரும் முகமாகவும் எதிர்காலத்தில் இது ஒரு வரலாற்று ஆவணமாகவும் அமைவதை நோக்கமாக கொண்டு பல்கலை வளாகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவு தூபியை கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் அமைக்கும் பணிகளை ஆரம்பித்தனர்.

தூபி அமைக்கும் பணிகள் நிறைவடையும் நிலையில் பல்கலை நிர்வாகத்தினால் குறித்த தூபி அமைக்கும் பணிகளை உடன் நிறுத்துமாறு மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

யாழ்.பல்கலை வளாகத்தின் மத்தியில் அமைக்கப்படும் இந்த நினைவு தூபியானது இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் வலிகளையும் துன்பங்களையும் பிரதிபலிக்கக்கூடியதாக அமையவுள்ள நிலையில் இதற்கு தடை விதிக்கப்பட்டமைக்கு மதகுருக்கள் புத்திஜீவிகள், அரசியல் தலைவர்கள், சமூக அமைப்புக்கள் என பலதரப்பட்ட பிரிவினரும் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

தூபி அமைக்கப்பட்டு நிறைவுபெறும் தறுவாயில் அதை தடுத்து நிறுத்தி மாணவர்களின் மனநிலையை விரக்திக்கு உட்படுத்தும் செயற்பாடாக இது ஏற்பட்டுள்ளதுடன் இன அழிப்பின் ஒரு அடையாளமாக இதை அமைக்கும் பணிகளை முடக்குவதற்கு அரசு திட்டமிட்டே இந்த தடையை விதித்துள்ளது என புத்திஜீவிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் இந்த தூபி அமைக்கும் விட

# உடையார் கட்டு பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்து

## முதியவர் உயிரிழப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடையார் கட்டு பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் சிக்குண்டு முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்

விபத்து குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று மாலை வேளையில் உடையார் கட்டு பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவரை வேகமாக வந்த வாகனமொன்று மோதித்தள்ளியத்தில் படுகாயமடைந்த நபர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட போதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்

குறித்த விபத்தில் சுதந்திரபுரத்தை சேர்ந்த 80 வயதுடைய தோமையான் அந்தோனி என்பவரே உயிரிழந்தவராவார்

விபத்து தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(ம-281)

# அரசியல் கட்சியின் பலத்தை நிரூபிக்க முள்ளிவாய்க்கால் நினைவை பயன்படுத்தாதீர்

## வட பிராந்திய இணைந்த தொழிற்சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் நினைவு நாளான மே 18 அஞ்சலி நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பலங்களை நிரூபிக்க முயற்சிக்காது இறந்தவர்கள் ஆத்ம சாந்திக்காக அனைவரும் ஒன்றிணையுமாறு இலங்கை போக்குவரத்து சபை வடபிராந்திய இணைந்த தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் நினைவு நாளான மே மாதம் 18 ஆம் திகதியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாள் ஆகும். இதை அமைதியுடன் அனுஷ்டிப்பதையே அனைவரும் விரும்புகிறார்கள்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற குழப்பங்கள் பிரிவினைகள் போல் எதிர்வரும் காலங்களில் நடைபெறாமல் இருப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இங்கு கட்சிகளுக்கும் தனிப்பட்ட நபர்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு புனித நிகழ்வாக இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட வேண்டும். பல வருடங்களாக எமது மக்கள் எதிர் கொண்ட துன்பங்கள், அவர்களின் மன வலிகளை தீர்த்து ஆறுதல் அடையும் ஒரே நாளான அன்றை தினம் எந்தவிதமான அரசியல் உள்நோக்கமும் இன்றி பாகுபாடு இன்றி மன நிறைவுடன் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

இதற்கு ஏற்றவகையில் இம்முறை பல்கலைக்கழக மாணவர்கள் இந்த விடயத்தை முன்னின்று செயற்படுத்த முன்வந்துள்ளார்கள். எனவே அவர்களின் கோரிக்கையின் படி அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் வடக்கு மாகாண சபை முள்ளிவாய்க்கால் நினைவாலயத்தை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மிக விரைவில் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் அனைவரும் ஒன்றிணைந்து அந்த நினைவாலயத்தில் தமது அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொளுவார்கள் என மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

# ஜனாதிபதி மைத்திரி தலைமையில் நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர்

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடர எதிர்வரும் 8ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த கூட்டத்தொடரை பார்வையிட பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது.

இதேவேளை, இந்த நிகழ்வில் 500க்கும் மேற்பட்ட சிறப்பு அதிதிகள் சபாநாயகரின் வரவேற்பின் பேரில் பங்குகொள்ளவுள்ளனர்.

அத்துடன் அமைச்சரவையில் இருந்து வெளியேறிய 16 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களது சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சியில் ஆசனங்களை ஒதுக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நீல் இத்தாவல குறிப்பிட்டுள்ளார்.

இந்த கூட்டத் தொடர் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அரசாங்கத்தின் எதிர்கால செயற்பாடுகள் குறித்து விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

இந்த உரை தொடர்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி நாடாளுமன்ற விவாதம் ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (ம)

# பிள்ளைகளுடன் தற்கொலைக்கு முயற்சித்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மீசாலை)

பிள்ளைகளுடன் தற்கொலை செய்ய முயற்சித்தவர் உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்று மீசாலையில் இடம்பெற்றுள்ளது.

சென்ற வாரம் யாழ்ப்பாணம் மீசாலை பகுதியில் சின்னஞ்சிறார்களான பிள்ளைகளையும் கொன்று தானும் தற்கொலை செய்ய முயற்சித்த குடும்பத்தலைவர் உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று இரவு 8:00 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவத் துறையினரின் பெரும் போராட்டத்தின் பின்னர் பிள்ளைகள் காப்பாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

யம் தொடர்பில் முன்னின்று செயற்படும் மாணவர்களுக்கு தொடர்ச்சியான விசாரணைகள் புலனாய்வுத்துறையினரால் விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ம-9)

## பருத்தித்துறை கடலில்...

வந்த பொதி ஒன்றை நேற்று மீட்டுள்ளனர்.

அதில் 17.6 கிலோ கஞ்சா பொதி செய்யப்பட்டு மீட்கப்பட்டுள்ளது. அதை நேற்று இரவு காங்கேசன்துறை பொலிஸில் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்

நேற்று முன்தினம் சட்டவிரோதமாக தாயகம் திரும்பிய அகதிகள் வந்த படகில் இருந்து காணாமல் போன கஞ்சா பொதியாக இது இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-9)

## வாள்வெட்டுடன்...

ங்களை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞர்கள் நேற்று முன்தினம் இரவு சுன்னாகம் பகுதியில் வாள்வெட்டு தாக்குதலை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்துள்ளதாகவும் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸாரருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அதிரடியாக தேடுதல் நடவடிக்கை சுன்னாகம் பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதன்போதே குறித்த 5 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து 4 வாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவர்கள் பல வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-9)

## விலைகளை அதி...

இந்த விலைச்சூத்திரம் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்ட போதும் ஒப்புதல் வழங்கப்படவில்லை. வரும் செவ்வாய்கிழமை ஒப்புதலளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெற்றோலின் விலையை 15 ரூபாயாலும் டீசலின் விலை 10 ரூபாயாலும் அதிகரிப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலளிக்கும் என நிதி அமைச்சின் உயர்மட்டம் தெரிவித்தது. (ம)

## கடுமையான தீர்...

இலஞ்சம் மற்றும் மோசடி என்பனவற்றுக்கு எதிராக எதுவித பேதங்கள் இன்றியும் எந்தவொரு நபருக்கும் சலுகை அளிக்கப்படாமலும் சட்டத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முற்பகல் பொலநறுவை றோயல் கல்லூரியில் இடம்பெற்ற சர்வதேச குடும்ப நல சேவைகள் தின கொண்டாட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, மக்களின் கோபத்திற்கும் வெப்புக்கும் உள்ளாகும் வகையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் செயற்படக் கூடாது என தெரிவித்ததுடன் சிறந்தவொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரச சேவையிலிருந்து இலஞ்சம் முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தாம் அமைச்சராக செயற்பட்ட காலத்திலும் ஜனாதிபதியாக பதவி வகித்துவரும் கடந்த மூன்று வருட காலத்திலும் இலஞ்சம், ஊழல், மோசடி, திருட்டு, வீண்விரயம் மற்றும் அரச சொத்துக்களின் முறையற்ற பாவனை என்பவற்றைத் தடுப்பதற்காக எதுவித வேறுபாடுகளும் இன்றி சகல நடவடிக்கைகளையும் தாம் மேற்கொண்டு வருவதனை ஜனாதிபதி இதன்போது நினைவு கூர்ந்தார்.

மத்திய வங்கி தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளை உரியவாறு முன்னோக்கி கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டதைப் போன்று ஸ்ரீ லங்கன் விமான சேவையில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவும் எதிர்காலத்தில் மிக முக்கியமான தகவல்களை நாட்டிற்கு வெளிப்படுத்தும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எமது சுகாதார சேவையிலிருந்து இலஞ்சம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக இதன்போது மகிழ்ச்சி தெரிவித்த ஜனாதிபதி, எமது நாட்டின் இலவச சுகாதார சேவையை மேலும் பலப்படுத்தி முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சகல நடவடிக்கைகளும் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களுக்கான புதிய சீருடையும் இந்த நிகழ்வில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

நாட்டின் சுகாதார துறையின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளும் விசேட சேவையை பாராட்டி சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் குடும்ப நல சேவைகள் சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு உள்ளிட்டோருக்கு ஜனாதிபதி இதன்போது நினைவுப் பரிசில்கள் வழங்கி வைத்தார்.

சுகாதார சேவை யின் முன்னேற்றத்திற்காக ஜனாதிபதி யால் மேற்கொள்ளப்படும் பணிகளைப் பாராட்டி சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஜனாதிபதிக்கு விசேட பரிசில் வழங்கினார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, வட மத்திய மாகாண ஆளுநர் எம்.பீ. ஜயசிங்க உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## வடக்கு, கிழக்கு...

இவ்வாறு ஒக்லாண்ட் இன்சிரியூட் நிறுவனத்தின் நிறுவுநரும் காணி மற்றும் மனித உரிமைகள் சட்டத்தரணியுமான அநுராதா மிட்டால் தெரிவித்தார.

தமிழ்த் தேசியமும் இலங்கையில் இடம்பெறும் தமிழினஅழிப்பும் என்ற தொனிப் பொருளிலான இரண்டாவது சர்வதேச மாநாடு கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் நேற்று நடைபெற்றது.

இதில் சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசின் மட்டுப்படுத்தப்பட்ட மீள்குடியமர்வு நடவடிக்கை மோசமான தரத்தை வெளிப்படுத்துகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியமும் இலங்கைத் தீவில் இடம்பெறும் தமிழ் இனஅழிப்பும் - நீதிக்கான தேடலும் போருக்குப் பின்னரான தேசத்தை மீளக்கட்டியெழுப்பலும் என்னும் கருப்பொருளில் இரண்டாவது சர்வதேச தமிழர் மாநாடு நேற்று ஆரம்பமாகி மூன்று நாள்கள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)


**வேலையாட்கள் தேவை**

சைவ உணவகம் ஒன்றிற்கு தங்குமிட வசதி, மூன்று நேர உணவு, மாதாந்த சம்பளம் இவை அனைத்துடனும் கீழ்வரும் வேலைவாய்ப்பு உண்டு.

01. தங்கிநின்று வேலை செய்யக்கூடிய மேற்பார்வையாளர்.
02. உணவு பரிமாறுபவர்கள். (சப்பிளையர்ஸ் ஆண்/பெண் இருபாலாரும்)
03. குசினி வேலையாட்கள்.
04. ரீ மேக்கர்.
05. அரையல் வேலை தெரிந்தோர்.
06. ஏனைய வேலைகளுக்கும்.

(3870)

தொடர்புகளுக்கு
077 791 7753, 021 222 2373

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தின் மேற்பகுதி வாடகைக்குண்டு.

(3866)

தொடர்பு :- 076 546 0811

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

**அறைகள் வாடகைக்கு**

வைமன் றோட், நல்லூரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீட்டில் பாதுகாப்பு, மேற்பார்வை ஒழுங்குகளுடன் கூடிய வகையில் அறைகள் வாடகைக்கு உண்டு.

* வைத்தியசாலை தாதியர்கள்
* பல்கலைக்கழக மாணவிகள் விரும்பத்தக்கது.

முன் பதிவு செய்யவும். மூன்று நேர உணவு வசதியும் செய்து கொடுக்கப்படும். (3870)

தொடர்புகளுக்கு
077 791 7753, 021 222 2373

**விற்பனைக்கு**

3 கோஸ்பவர் மோட்டர்கள், குளிர்சாதனப் பெட்டிகள், புத்தகங்கள், வீட்டுத்தளபாடங்கள், பித்தளைப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 1728141

**விற்பனைக்கு**

வட்டக்கச்சியில் வயல் காணி ஒன்று விற்பனைக்குண்டு.

(3871)

071 487 1665

**Spoken / Business English / ICT**

காலம். From May to June 2018
08.30 மு.ப - 12.45 பி.ப (திங்கள்-வெள்ளி)

1. Business / Spoken English, & நுண்திறனும் தொழில் வழிகாட்டியும்
2 நெறிகளுக்கும் கட்டணம் ரூபா:4,000

2. MS Office. ICT equivalent to NVQ level 3
Course 1 & 2 கட்டணம் ரூபா:6,000
100% வரை புலமைப்பரிசில் வழங்கப்படும்.
நேர்முகத்தேர்வுக்கு 8th & 9th May
09.30am to 12.30pm வரை சமூகம் தரவும்

(3835)

விபரங்களுக்கு இயக்குநர். NTI, 077 650 5580
Northern Technical Institute. NTI
YMCA Building, 107,2/1 Kandy Rd, Jaffna.



**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(சி-2492)

CNR World Wide Express
021 5674145
077 2931062



**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**

UK - 550 */=Kg
கனடா - 900 */=Kg
ஜேர்மனி - 700 */=Kg
நெதர்லாந்து - 700 */=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

**காணி குத்தகைக்கு தேவை**

சண்டிலிப்பாய் சந்தியிலிருந்து சித்தன்கேணி சந்திக்கு இடைப்பட்ட பிரதான வீதியை அண்டிய பகுதியில் வாகன சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு காணி தேவையாக உள்ளது. (சுற்றுமதில், கட்டடம் இருப்பது விரும்பத்தக்கது)

(3867)

தொடர்புகளுக்கு:- நதீஸ் 077 604 1412, 077 508 7251

**இறுதிக் கருத்தரங்குகள்**

கிளிநொச்சியில்

"வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் (MA)"
திறந்தது, மட்டுப்படுத்தப்பட்டது.
07/05/2018, 9AM - 2PM தேசிய ரீதியில் முதன்மை வளவாளர்
BY: P. கமல்தாசன் (உளச்சார்பு)
17/05/2018 (9Am-2Pm)
துறைசார் வளவாளர் குழு (மொழித்திறன்)

(3866)

கம்பன் கல்லூரி -கனகபுரம் வீதி, சிவபூமி பாடசாலை அருகில்
077 526 5344, 077 548 3470

**அண்ணா பொதிகள் சேவை**

976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

லண்டன், ஜேர்மனி, கனடா மற்றும் சில நாடுகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது

வெளிநாடு, உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

021 221 5656 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | வவுனியா | கனகராயன்குளம் | முல்லைத்தீவு

**யாழ் மதர் கெயார்**
**Dental Unit**
Reg.No.#PV85754

நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட உயர்தர சேவைகள்

● பல் வெண்மையாக்கல்
● வேரடைப்பு
● மிதப்புப்பல் சீராக்கல்
● பல், வாய் வைத்தியசேவை
● சிறுவர் பற் சிகிச்சை
● மற்றும் பல நவீன சேவைகள்

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 492 7308
Mob : 077 375 4490, 077 220 2769

**Vacancy**

IT, Software, Job / Internship
Project / Operations Manager
Office Equipment Technicians
(Training provided)

Our Contacts have indicated the above vacancies. No fee is levied / Contact Northern Technical Institute 107.2/1 Jaffna YMCA Building, Kandy Road, Jaffna. 0776505580 / 0768525406 <ntijaffna@gmail.com> (Above the Nelson learners, 2nd floor)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Sri Lanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 164

விலை : 30.00

வள்ளுவர் ஆண்டு 2049 06.05.2018 தொலைபேசி : 021 222 3378








# வடக்கில் மே தினம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் சொல்ல, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

விதானையார் விசுவலிங்கத்தார் வழமைபோல அல்லாமல் யோசனையோடு அமர்ந்திருந்தார். விசுவலிங்கத்தாரின் முகத்தைப் பார்த்த பண்டிதர் பரமலிங்கம் என்ன விதானையார்? ஏதேனும் பிரச்சினையோ என்று கேட்டார்.

**விதானையார்:** என்ன பிரச்சினை. முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் வருகுது... சொல்ல முடியாமல் விதானையார் விசுவலிங்கம் விக்கித்துப் போனார். நிலைமையைப் புரிந்து கொண்ட மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாகினர்.

வன்னியில் நடந்த யுத்தத்தில் விதானையார் விசுவலிங்கத்தின்ர குடும்பம் அகப்பட்டு பெரும் கஷ்டங்களை அனுபவித்தது.

அதிலும் விதானையாரின் மூத்த மகன் மாவீரர். எல்லாவற்றையும் நினைத்துத்தான் விதானையார் விசுவலிங்கம் விக்கித்துப் போனார்.


ஆலடி மாநாட்டில் சில நிமிடங்கள் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

விடுதலைப் போராட்டத்தில உயிரிழந்தவர்கள், அங்கத்தைப் பறி கொடுத்தவர்கள், காணாமல் போனவர்கள் என்று எத்தனையோ துன்பம். ஆனால் போராட்டத்தில எந்தத் தொடர்பும் இல்லாதவர்கள் தங்களைப் போராளிகள் போலவும் தியாகிகள் போலவும் மாவீரர் குடும்பம் போலவும் கதைப்பதைப் பார்க்கும் போது தான் அந்தரமாக இருக்குது.

**மூப்பர்:** பின்ன இருக்காதோ. எத்தனையோ மாவீரர் குடும்பங்கள் யாருக்கும் தெரியாமல் கண்ணீரோட வாழுகினம்.

**கங்காணி:** மூப்பர் அதுமட்டுமோ ஒரு வீட்டில இரண்டு மூன்று மாவீரர் என்று... இஞ்ச பூனையில்லாத வீட்டு எலிகள் போல தமிழ் அரசியல் வாதிகள் சிலர் துள்ளிக் குதிக்கினம்.

**சாத்திரியார்:** என்ன செய்யிறது. எங்கட நிலைமை அப்படியாயிற்று. யுத்தத்தில தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகளைத் தமிழரின் பலமாக்கி எங்கட உரிமைகளை நாங்கள் வென்றெடுத்திருக்க வேணும். ஆனால் தமிழ் அரசியல் தலைமை என்று தங்களைக் கூறிக்கொள்பவர்கள் அரசாங்கத்தோட சேர்ந்தனர். எங்களை விற்று அதில இலாபம் உழைத்துப் போட்டினம். இப்ப நாங்கள் நடுத்தெருவில.



**ஔவையார் சொன்னது ஒரு கோடி**
**இலங்கை அரசு சொல்வது இரண்டு கோடி**

**வாத்தியார்:** 13 ஆவது திருத்தச்சட்டமும் எங்கட பிரச்சினைக்கு முழுமையான தீர்வாகாது என்று சம்பந்தர் ஐயா கூறி வருகிறாரல்லோ.

**விதானையார்:** எல்லாம் காலம் கடந்த ஞானம். இவையள தமிழ் அரசியல் தலைமை என்று சொல்லவே நாக்கூசுது.

(விதானையார் கோபத்தோடு கூறினார்)

**மூப்பர்:** ஏன்? விதானையார் அப்படிக் கூறினியள்.

**விதானையார்:** தமிழ் மக்களின் தலைவன் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்த மண் எங்கட மண். புலி வந்திட்டுது என்று கொழும்பில சொல்ல; இரண்டாம் மாடியில இருந்து குதித்தவியள் எத்தனை பேர்.

**கங்காணி:** அதுமட்டுமோ பஸ்ஸில கிடந்த ஒரு பொதியால கொழும்பு மாநகரே வெறிச்சோடிப் போனது. இப்படி வீரத்தோட இருந்த எங்கட இனத்தின்ர மானம் மரியாதை எல்லாம் போய்ச்சுது.

**சாத்திரியார்:** விதானையாரும் கங்காணியாரும் ஏதோ ஒன்றை வைத்துத் தான் கதைக்கினம். எனக்கெண்டால் ஒண்டும் விளங்கல்ல.

**விதானையார்:** சாத்திரியார் புத்தாண்டு நிகழ்வுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்ர வீட்டிற்கு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் ஐயா போனவரல்லோ.

**சாத்திரியார்:** அழைத்தால் போறது வழக்கம் தானே.

**விதானையார்:** அதை நான் சொல்லல்ல சாத்திரியார். அந்த நிகழ்வுக்குப் போனவரை அவர்கள் எப்படி மதிச்சினம் என்று பார்த்தியள் தானே.

அந்த நிகழ்வில சம்பந்தர் ஐயா ஒரு அழையா விருந்தாளி போலவும் வேண்டா வெறுப்பான விருந்தாளி போலவும் காட்டிக் கொள்ளப்பட்டார். கூனிக்குறுகி ஒட்டி ஒடுங்கி புத்தாண்டு விழாவில நிற்க வேணும் எண்டு தலைவிதியோ.

**வாத்தியார்:** என்ன செய்யிறது. சொந்த இனத்தின்ர மானத்தை விற்கின்ற போது கூடவே தன்ர மானமும் விலைப்படுகுது என்ற உண்மையை உணராததால வந்த வினைதான் இது.

தமிழ் அரசியல் தலைமைக்கு காசால அபிஷேகம் செய்தால் அது கையும் தூக்கும், காலையும் பிடிக்கும் என்கிற உண்மை தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு நன்கு தெரியும். இதுக்குப் பிறகு இவையள மதிக்கிற அளவில அவையள் இல்லை. அதால தான் புத்தாண்டு விழாவில எந்த முன்னுரிமையும் சம்பந்தர் ஐயாவுக்குக் கொடுக்கப்படவில்லை.

**பண்டிதர்:** நீங்கள் என்ன நினைக்கிறியளோ தெரியல்ல. ஆனால் சம்பந்தர் ஐயா நிண்ட நிலையைப் பார்த்து நான் கண் கலங்கிப் போயிற்றன். தனிப்பட்ட சம்பந்தர் ஐயாவுக்கு இப்படி நடந்து போயிற்றுது என்பதால அல்ல.

விரும்பியோ விரும்பாமலோ அந்த இடத்தில சம்பந்தர் ஐயாதான் தமிழ் மக்களின்ர பிரதிநிதித்துவம். அப்படியிருந்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின்ர குடும்பத்தினர் சம்பந்தர் ஐயாவுக்கு முன்னுரிமை கொடுக்காத கவலை என் இனம் சார்ந்து எனக்கு ஏற்பட்டது.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா நீங்கள் சொன்னதை நூறு வீதம் நான் ஏற்றுக் கொள்கிறன். ஆனால் இந்தக் கவலை சம்பந்தர் ஐயாவுக்கும் ஏற்பட வேணும். அப்பதான் தமிழினம் என்ற பற்றுறுதி முழுமைபெறும். இதைவிட்டிட்டு நெருக்குண்டு தள்ளுண்டு நிகழ்வில நின்றால் போதுமெண்டு நினைக்கிற தமிழ் அரசியல்வாதிகள் இருக்கும் வரை தமிழர்களை சிங்களத் தரப்பு அடிமைகளாகத்தான் பார்க்கும்.


**கங்காணி:** ஏதோ இப்படியான அவமரியாதை இனிமேலும் நடக்காமல் தமிழ் அரசியல் வாதிகள் பார்த்துக் கொள்ள வேணும். மதியாதார் முற்றம் மதித்து ஒரு கால் செல்லாமை கோடி பெறும் என்று ஔவையார் சொல்லியிருக்கிறார்.

**பண்டிதர்:** ஔவையார் ஒரு கோடியைச் சொல்ல இஞ்ச இரண்டு கோடியல்லோ சொல்லப்படுகுது.

பண்டிதர் இவ்வாறு சொல்ல ஆலடியில் எழுந்த சிரிப்பொலியை அடக்குவதுபோல் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஆரம்பித்தால் சம்பந்தரையும் அதுவே தாங்கிக் கொள்ளும்



## சம்பந்தரை ஓரங்கட்டுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

வடக்கு மாகாண அரசின் ஆயுட்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. இன்னும் ஐந்து மாதங்கள் மெத்த என்ற அளவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டத் தலைப்பட்டுள்ளன.

வடக்கின் தற்போதைய முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்ற அறிவித்தலை கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் அண்மையில் விடுத்திருந்தார். எம்.ஏ. சுமந்திரனின் இந்த அறிவிப்பு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

எனினும் கூட்டமைப்பின் பேச்சாளர் சமந்திரனின் அறிவிப்புக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தரின் ஒப்புதல் பெறப்பட்டதா? என்றால் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

சம்பந்தரின் ஒப்புதல் இல்லாமல் கூட்டமைப்பின் பேச்சாளர் என்ற தகைமைப்பாட்டை மட் டும் வைத்துக்கொண்டு வடக்கு மாகாண சபையின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வ ன் அல்ல என்று எம்.ஏ.சுமந்திர னால் கூறமுடியுமா? என்றால் அதற்கான பதில் இல்லை என்று எடுத்த பாட்டில் கூறிவிட முடியாது.

ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அண்மைக்கால போக்குகளை அவதானிக்கும் போது அந்தக் கட்சியின் தலைவர் என்ற பதவி ஒரு கௌரவத்திற்குரிய அல்லது பெயரளவுப் பதவியாக மட்டுமே இருக்கிறது.

அதாவது இரா. சம்பந்தர் அவர்கள் கூட்டமைப்பில் கொண்டிருக்கக்கூடிய பதவி என்பது எந்தவித அதிகாரமும் அற்றது என்று வெளிப்படையாகக் கூறிக் கொள்ளலாம்.

ஆக, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் விடுத்த அறிவிப்பை கூட்டமைப்பின் அறிவிப்பாக ஏற்றுக் கொள்வதே பொருத்தமானது.

இதை நாம் கூறும் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா மற்றும் கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளுமா? என்று கேட்கலாம். இங்குதான் ஓர் உண்மையை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டியதாகவுள்ளது.

அதாவது கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் அவர்கள் துணிச்சல் மிக்க ஒருவர் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

அந்தநேரம் தான் நிலை நிறுத்தவந்ததை எப்பாடுபட்டாவது நிலை நிறுத்திவிடக்கூடியவர். வார்த்தைகளால் அதட்டி, சுட்டு விரலை தூக்கி நிறுத்தி, பல்லை நறுமி, முகத்தை இறுக்கமாக்கி தனது நிலைப்பாட்டை உறுதிபடக்கூறக்கூடிய ஆளுமையும் சம்பந்தரிடத்தில் உள்ளது.

ஆனால் என்ன செய்வது, முதுமை என்று வந்துவிட்டால் எல்லா ஆளுமையும் இழந்து போவது தவிர்க்க முடியாதது தான்.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகத்தைக் கட்டிக்காத்த கலைஞர் கருணாநிதி இன்று எதுவும் இயலாத தலைவர் என்றாகிவிட்டார்.

தலைவர் கலைஞர் கருணாநிதி அவ்வப்போது தன் கையைத் தூக்கி அசைத்து ஆதரவாளர்களுக்குக் காட்டினால் அது போதும் என்பதுதான் இப்போது அந்தக் கட்சியினரின் நிலைப்பாடு. எனவே, முதுமை என்பது வந்துவிட்டால் இயலாமை கூடவே வந்துவிடும்.

எனினும் தன் இயலாமைக் காலத்தில் தனக்குப் பேருதவி என்று யாரை சம்பந்தர் அவர்கள் நம்பினார்களோ அவரே சம்பந்தரை ஓரங்கட்டத் தலைப்பட்டுவிட்டார் எனும் போது இனி சம்பந்தரால் எதுவும் செய்ய முடியாது என்பதுதான் உண்மை.

தவிர, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் கீறிய கோட்டைத் தாண்டாதவராக மாவை. சேனாதிராசா அவர்கள் உள்ளார்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரை அனுசரித்துப் போகாவிட்டால் எங்கள் ஆதரவு உங்களுக்குக் கிடைக்காமல் போகும் என்று கூறவேண்டிய மாவை. சேனாதிராசா அவர்கள் அதனைச் செய்யாமல், பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் சேர்ந்து போவதுதான் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்துவிட்டார் என்பதையும் கூறித்தானாக வேண்டும்.

இவ்வாறான ஒரு முடிவை மாவை. சேனாதிராசா அவர்கள் எடுத்தது சரியா? என்பதற்கு அப்பால், அவர் அவ்வாறான ஒரு முடிவை எடுப்பதற்குக் காரணம் என்ன? என்றால், வடக்கின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் தான் என்பதுதான்.

கடந்த முறை வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுகின்ற மன நிலையில் இருந்த மாவை. சேனாதிராசாவை மனம் மாற்றி நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என விடாப்பிடியாக நின்றவர் சம்பந்தர்.

இப்போது கூட, வடக்கின் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் யார் என்று இரா. சம்பந்தரிடம் கேட்டால், நீதியரசர் விக்னேஸ்வரன் என்பதுதான் சம்பந்தரின் பதிலாக இருக்கும்.

ஆக, இந்தப் பதிலைத் தரக்கூடிய இரா.சம்பந்தரை இனியும் அனு சரித்துச் செல்வதை விட, தனக்குச் சந்தர்ப்பம் தரக்கூடிய எம்.ஏ.சுமந்திரனை அனுசரித்துச் செல்வதுதான் எல்லாவற்றுக்கும் நல்லது என்ற முடிவை மாவை. சேனாதிராசா அவர்கள் எடுத்திருப்பார்.

எது எவ்வாறாயினும் மாகாண சபைத் தேர்தல் நடந்து முடிந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் ஓரங்கட்டப்படுவார் என்பது சர்வ நிச்சயம்.

இத்துணை கால அரசியல் வரலாற்றில் சம்பந்தர் அவர்கள் ஒதுங்கியிருப்பதென்பது அவருக்கு உளநலப் பாதிப்பைத் தரும்.

எனவே எங்கோ ஓர் இடத்தில் அவரின் அரசியல் வகிபங்குக்குச் சந்தர்ப்பம் கிடைத்தாக வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒதுக்கிவிட்ட பின்னர் இரா.சம்பந்தரை அனுசரிக்கக்கூடிய ஒரே ஒருவர் வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகவே இருப்பார்.

எனவே வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் புதியதொரு அரசியல் கட்சியை ஆரம்பித்து வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக எதிர்வரும் மாகாணசபைத்தேர்தலில் களமிறங்குவாராக இருந்தால் அந்தக் கட்சியில் இரா. சம்பந்தரும் இணைந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படவே செய்யும்.

இந்த இணைவு தேர்தலுக்கு முன்பாக நடக்காவிட்டாலும் தேர்தல் முடிந்த கையோடு நடக்கும் என்ற அனுமானத்திற்கு வருவதில் தவறில்லை. ஆக கூட்டமைப்பால் ஓரங்கட்டப்படும் சம்பந்தரை முதலமைச்சர் விக்னேஸ்வரனின் கட்சி தாங்கிக் கொள்ளும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

விதுரன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில்
உங்கள் ஆக்கங்கள்
இடம்பெற
வேண்டும் என்றால்
உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி
வையுங்கள்.



## இரவு





நட்சத்திரங்கள் மின்னி மின்னி ஒளிர
காற்று வந்து இனிமையாக பாட
கடலலைகள் அழகாக நடனமாட
மேகங்கள் மெதுவாக நகர நிலவு
வந்து சந்தோஷமாக சிரிக்க
எங்கும் கங்குல் பரவி இரவு வானம்
வந்ததே அழகான இரவு வந்ததே


ம.அபிஜோஜினி
யா/இந்து மகளிர் கல்லூரி
எஸ்.ஓ.எஸ்.சிறுவர் கிராமம்.

## பொன் மொழிகள்

- பகைவனின் பலவீனத்தை அறிய, அவனை நண்பனாக பாவிக்க வேண்டும்.
- காலம் சாதகமாக இல்லாதவரை, பகைவரைத் தோளில் சுமக்கத்தான் வேண்டும்!
- விதியை நம்புபவன் எதையும் சாதிக்கமாட்டான்.
- அளவுக்கு அதிகமான பணிவை ஒருபோதும் நம்பக் கூடாது!
- தன் கையே என்றாலும், விஷம் ஏறினால் வெட்டிவிடத்தான் வேண்டும்!
- உயர்பதவி என்பது நிரந்தர சிம்மாசனம் அல்ல. அது நமக்குச் சரிப்படாவிட்டால், மற்றவர்களுக்கு இடம் தந்து விலகிவிட வேண்டும்.
- இந்த உலகத்தில் நஞ்சால் அழிந்தவர்களைவிட, ஆசையால் அழிந்தவர்களின் எண்ணிக்கையே அதிகம்.
- உங்கள் குறைகளை நீங்களே அடையாளம் கண்டுகொள்வதுதான் வளர்ச்சியின் அடையாளம்.




தண்ணியோடு வந்திருக்கான் சின்னத்தம்பி...
செடியும் காத்திருக்கு அதை நம்பி...
வழியைக் காட்டி உதவுங்க செல்லத்தம்பி!







# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3.2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532

**விக்னேஸ்வரன் ஐயாவை தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இருந்து...**

**கூட்டமைப்புப் போட்ட இயக்கப் பாட்டுப் பற்றிச் சொல்லுங்களேன்?**

**தமிழ் நாட்டில் யார் ஆட்சி அமைத்தால் ஈழத் தமிழருக்கு நன்மை கிடைக்கும்?**

நந்தகுமார் — மானிப்பாய்

**தமிழரின் பாரம்பரியம் மாற்றப்படுமா?**

பெண்களுக்கு லெக்கின்ஸ் போட அனுமதி கொடுத்து விட்டு வீட்டில் இருக்கும் சிறுபிள் ளைக்கு சாரி கட்டி அழகு பார்க்கிறோம். இது ஒருபுறமிருக்க சாரி ஆபாச உடை என்கிறது இன்னொரு கூட்டம்.

சிவனை உடைத்து அதில் புத்தரை அமர்த்து கிறது திட்டமிட்டுச் செயற்படும் மற்றொரு கூட்டம். இட்லியையும் தோசையையும் இடியப் பத்தையும் விட்டுவிட்டு பீட்சா பீட்சா என்று படிகள் ஏறி அலைகிறது பாவப்பட்ட இன மொன்று. வீட்டில் கஞ்சிக்கே வழியில்லை கஞ்சா குடித்து அலைகிறது காவாலி கழுதை கள் கொஞ்சம்.

நிறோஜன் — கொக்குவில்

**ஒரு பெண் என்னிடம் ஐ லவ் யூ சொல்லி யிருக்கிறாள். நான் என்ன பதில் சொல்ல?**

முதலில் அது பெண்தானா என்பதை உறுதி செய். அதன்பின் அவளுக்கு வீடு இருக் கிறதா என்பதை அறிந்து கொள்.

நகை ஏதும் இருக்கிறதா என்பதை கவன மாக தெரிந்து தெரிந்து கொள். இல்லையேல் கள்ளன் என்று மாட்டிவிடுவாய். இன்னும் மற்ற மற்ற விடயங்கள் பொருத்தமாக இருந் தால் அந்த அரண்மனைக்கு ராஜா ஆகிவிடு.

சீமா

**தமிழ் நாட்டில் யார் ஆட்சி அமைத்தால் ஈழத் தமிழருக்கு நன்மை கிடைக்கும்?**

யார் ஆட்சிக்கு வந்தாலும் நன்மை ஏதும் நடக்கப் போவதில்லை. மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா இருந்த போது ஈழத்தில் நடந்தது "இனப் படுகொலையே" என்ற தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. அதற்கு ஏதும் பலன் கிடைத்ததா இல்லையே. எமது உறவுகள் எமக்காகப் பேசுகிறார்கள் என்ற மனதிருப்தி ஒன்றை தவிர வேறு நன்மை ஏதும் நடக்கப் போவதில்லை.

சண் — வவுனியா

**நாட்டின் எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு மேதினத்தை மே-1 கொண்டாடி யது சரியா?**

சண் என்ன பேச்சு இது. என்னதான் அரசுடன் ஒட்டிக் கொண்டு தமிழர்களுக்கு நாசகாரம் செய்தாலும் அது தமிழ்த் தேசியக் கூட்டமைப் பல்லவா. தொழிலாளர் தினத்தை தொழிலா ளர் தினத்தில் செய்வது தானே முறை.

மே-1 வடக்கில் தலை மே-7 தெற்கில் வால். முடிந்து விட்டதே அலுவல். இதற்குப் போய் இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே.

கார்த்திகேயன் — யாழ்ப்பாணம்

**கூட்டரசு ஏமாற்றினால் சர்வதேசத்துடன் சேர்ந்து தீர்மானம் எடுப்பாராமே மாவை ஐயா?**

வாழ்நாள் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் மாவை ஐயாவின் பேச்சுக்களை நான் சிறுவயதில் இருந்து கேட்டுத் தெரிந்த வன் என்ற முறையில் சொல்கிறேன். அவர் சும்மா பகிடிக்குச் சொல்லியிருப்பார். விட்டு விடுங்கள்.

இது மாவை. சேனாதிராசாவின் தனிப்பட்ட கருத்தே தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத் தல்ல என்று அறிக்கை வந்தாலும் ஆச்சரியப் படுவதற்கு இடமில்லை. பொறுத்தருள்க.




சுதன் — குப்பிளான்

**கூட்டமைப்புப் போட்ட இயக்கப்பாட்டுப் பற் றிச் சொல்லுங்களேன்?**

சிவ சிவா இவர்களின் நாடகம் ஏன் இன்னும் மக்களுக்குப் புரியவில்லை என்பது தான் எனது கேள்வி. தேசியத் தலைவர் பிரபா கரனின் தாய் பார்வதி அம்மையார் கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் சுற்றம் சூழ அத்தனை சொந்தங்களையும் இழந்து மந் திகை வைத்தியசாலையில் தனிமையில் இருக்கையில் எட்டிப் பார்க்காதவர்கள் இப் போது இயக்கப்பாட்டுப் போட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஆள் சேர்க்கிறார்கள்.

எதையும் இலகுவில் மறந்துவிடும் மக்கள் இருக்கும்வரை இவர்கள் காட்டில் மழை தான். இல்லையென்றால் ஒருமுறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் அடுத்த முறை வெற்றி பெற முடியுமா என்ன.

இந்து — திருகோணமலை

**வாழ்க்கை என்றால் என்ன?**

வாழ்க்கை என்பது வடிவம் அற்றது. அதற்கு வட்டம், சதுரம், முக்கோணம் என்று வடிவ த்தை நாங்கள் தான் கொடுக்கிறோம்.

ஒருவனுக்கு வட்டமாய் இருக்கும் வாழ்க்கை சிறப் பாய் இருக்கும். அதே இன்னொருவனுக்கு கஷ்டமாய் இருக்கும். கஷ்டம் என்று வட்டத்தை விட்டு விட்டு சதுரத்துக்கு மாறிவிட முடியாது. கிடைத்த வட்டத்தை வளமாக்கி அமைதி காணுவதுதான் வாழ்க்கை.

வாழ்வை மாற்ற நாம் ஒன்றும் புதிதாய் பிறக் கத் தேவையில்லை. இருக்கும் வாழ்க்கையில் சில விட்டுக்கொடுப்புக்களையும் சில பல தியா கங்களையும் இன்னும் கொஞ்ச உழைப்பை யும் செலுத்துவோமாக இருந்தால் வாழ்க் கைத் தோட்டமும் பூத்துக்குலுங்கும் என்பதில் ஐயமேதும் இல்லை.

நிலாஜினி — சுழிபுரம்

**விக்னேஸ்வரன் ஐயாவை தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இருந்து கூட்டமைப்பால் நீக்க முடியுமா?**

ஏற்கனவே ஒருமுறை நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்து பட்ட பாடு போதும் என்று இருந்தவர்கள் அடுத்த கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் விக்னேஸ்வரன் ஐயா இல்லை என்று அறிக்கை விட ஆரம் பித்து விட்டார்கள்.

கெடு குடி சொற் கேளாது என்ற பழமொழிக்கு பலநாளாய் உதாரணம் தேடிக்கொண்டி ருந்தேன். விக்னேஸ்வரன் ஐயாவை கூட்டமை ப்பு எதிர்ப்பது தான் அதற்கு நல்ல உதாரணம்.

எவ்வளவு அரசியல் ஞானம் படைத்தவர்களுக் கும் மக்கள் மனதினைப் புரியமுடியவில்லையே. "கெடுகுடி சொற் கேளாது"

மதுரா — கொடிகாமம்

**கோடிக்கு மயங்குபவர் கொள்கையை விடுப வர், இலட்சத்திற்காக இலட்சியத்தை மறப்ப வர் இவற்றைப் பற்றிய தங்கள் கருத்து?**

மதுரா நன்றாக கண்களை மூடியபடி மனதை ஒருநிலைப்படுத்தி இந்த மூன்றையும் சொல்லிப் பாருங்கள்.

கட்டையன், நெட்டையன், கறுவல், சிவலை, மொட்டந் தலையன், சடைத்தலையன் இப்படி பல்வேறு பட்ட பாத்திரங்கள் மனதில் படமாய் தெரியும்.

இவர்களையெல்லாம் மனப்பாடம் செய்து வையுங்கள். தேர்தல் காலங்களில் தேசியம் பேசிக்கொண்டு வருவார்கள். அப்போது காட்டுங்கள் உங்கள் கச்சேரியை.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

## கூத்தாடிகள்

காலம் எல்லாம் காத்திருந்து
கண்ணாக ஒரு பெண்ணை பெத்து
கலியாணம் கட்டிவைக்கும் வரை
படுகின்ற பாடு

அப்பா, அம்மா , நல்ல பெயர் வைத்து
வாய்க்கு ருசியா சமைச்சு -நல்ல
புடைவை வாங்கியும் குடுத்து
நல்ல பிள்ளையா வளர்க்கையில்
காவாலி கூட்டம் செய்யிற வேலை

தெரு ஓரத்தில் நின்று
போற வாறவளை மேலும் கீழுமா பார்த்து
புன்னகை ஊட்டி நக்கல் செய்யிறாங்கள்
நாலு ஐந்து பேர்...

நாகரிகம் என்ற பெயரில்
கைத்தொலைபேசி
முகப்புத்தகம் என்னும் தளத்தில்
ஒரு பெண்ணை மடக்கி
காதல் என்னும் பெயர் சூட்டி
காமம் என்ற நாடகம் நடத்தி

அங்கம் எல்லாம் படம் பிடிச்சு
அந்தரங்கம் என்று பெயர் சூட்டி
இணையத்தளத்தில் இட்டு
இன்பம் காணும் வாலிபர்கள்
அம்மா, அக்கா, தங்கைகளை
நினைத்து பார்ப்பதில்லை

சிற்பம் போல் செதுக்கிய பெண்ணை
சின்னாபின்னம் ஆக்கிவிட்டு
சத்தம் இல்லாமல் திரியும்
கயவர் இருக்கும் வரை
பெண் இனம் மீட்சி பெறா...

எஸ்.ஏ. கோகுலன்
கோப்பாய்




## "சிரிப்போம் சிந்திப்போம்"

### " அன்னை மடி"

அறிவு பெற நன் நூல்களைப் "படி"
படித்தவற்றை நாளும் பற்றிப் "பிடி"
ஆசிரியர் கையில் எடுப்பார் "தடி"
தடி எடுத்தால் வாங்குவதோ "அடி"

குடியைக் கெடுக்கும் பெரும் "குடி"
குடி கெடுத்தால் தலையில் விடும் "இடி"
நிமிடமொன்றில் அறுபது "நொடி"
நினைத்ததை உடனே செய்து "முடி"

ஊர்வலத்தில் பிடிப்பார் "கொடி"
உதவாத மனமென்றால் "நெடி"
தாவரத்தில் ஒரு வகை "செடி"
தலையில் மன்னர் சூடுவார் "முடி"

போதை தரும் சாராயம் "வடி"
பொங்கலுக்குக் கொளுத்துவார் "வெடி"
அதிகம் வறுமை வந்தால் "மிடி"
ஆறுதல் தேட அன்னை "மடி"

கந்தபேரின்பம்

## உண்மை என்றும் உயர்வு தரும்

உண்மை என்றும் தோற்பதில்லை
தோற்பது போல் தோன்றினும்
இறுதியில் உண்மையே வெல்லும்

உண்மையே நம்பிக்கை
நம்பிக்கையே வாழ்க்கை
வாழ்க்கை தொலைந்தால்
நம்பிக்கையும் தொலைந்ததுவே

சூழ்ச்சி வீண் பேச்சு
விதண்டாவாதம்
அடாவடித்தனம்- என்று
வீழ்ச்சியே காணும்

நம்பி நடவாதே நம்ப நட
நம்பினார் கெடுவதில்லை- இது
நான்கு மறைத் தீர்ப்பு

உண்மைக்குப் பாண்டவர்
சூழ்ச்சிக்குத் துரியோதனன்- இறுதியில்
உண்மை உயர்ந்தது, சூழ்ச்சி வீழ்ந்தது

தர்மம் தோற்பது போல் தோன்றினும்
இறுதியில் தர்மமே வெல்லும்
குருஷேத்திரப்போர்
தருவித்த தத்துவம் இதுவே!

ம.தவமணி
திருநெல்வேலி

## வார்த்தை அம்பு

தனிமைகளைச் சுமக்கும் வாழ்வில்
கனவுகளைத் தவிர வேறேதுமில்லை
இரவுகளே துணையாகிறது
தினம் தினம்

கடலில் மிதக்கும்
பனிமலையாய் வாழ்க்கை
சிறிதுதான் வெளித்தெரிகிறது
சோகங்கள் சுமைகளெல்லாம்
அடியில் அகண்டு விரிந்து கிடக்கிறது


உரிமை கோராத வாழ்விடங்களாய்
இதயம் எங்கோ தனிமைப்பட
முடிக்கப்படுகிறது முடிந்த முடிவுகள்

வெறும் வார்த்தைகளை நம்பி நம்பி
நயவஞ்சகத்தால் நாளுக்கு நாள்
புழுவாய்த் துடிக்கிறது இதயம்

அடக்கி வைத்த நாற்றமதை
அப்படியே கொட்டுவதை போல்
தடக்கும் வார்த்தைகளை
வரிசையில் விடுகிறார்
வெறும் வார்த்தைகள் தானே

நடக்கட்டும்
எது நடக்கிறதோ- அது
நன்றாகவே நடக்கிறது

மாவை. நா.கஜேந்திரன்



# மௌனத்தின் தேடல்- 397



## உன்னைக் காக்க யார் வருவார்?

கையிலே பொம்மையுடன்
கண்களிலே ஏக்கமாய்
நிற்பது ஏனம்மா?
பூமகள் மேனியில்
உன் பிஞ்சுக் கால்களால்
துள்ளி விளையாடும் வயதில்
ஏன் இந்தத் தயக்கம்!
உயிர் குடிக்கும் பேய்கள்
தம் நீண்ட நகம்
கொண்ட கையால்
உன்னைச் சிதைக்க வருகிறதா?
பெண்ணை ஏறெடுத்து பார்த்த
காமப்பேய்கள் எத்தனையோ
மண்டியிட்டு மாண்ட பூமியில்
இன்று உன்னைப் போன்ற
பிஞ்சுக் குழந்தையை
காக்க யாருமே இல்லையே
உன்னைப் படைத்த
அந்த இறைவன்தான்
பதில் சொல்லணும்

அ.அகிலன்
கரவெட்டி கிழக்கு

## பொம்மைகள்

நீங்கள்
பொம்மைகள் பறிப்பவர்
என்று அதை
பத்திரப்படுத்தினேன்
என்னை விட்டு விட்டு...

ச.நிலாந்தி
மட்டக்களப்பு

## துணிவே துணையாகுமா?

பதறும் உள்ளத்துடன்
பதற்றமுறும் பார்வையுடன்
பரிதவிக்கும் சிறுமிக்கு
பரிதாபம் பார்த்திடவோ
பாதுகாப்புப் புரிந்திடவோ
யாருமில்லையா?

தங்கத்தமிழன்
காரைநகர்

## சிதைத்திடாதீர்

காமுக எண்ணங்கொண்டு
துள்ளித் திரியும் சிட்டாக
கையிலே பொம்மையுடன்
கதி கலங்கி நிற்கும் பிஞ்சாம்
பள்ளி செல்லும் பாலகியை
சூறையாடும் கயவர்களே
சிந்தியுங்கள் இப்போதே
சின்னஞ்சிறு சகோதரியாம் மலரை
சிதைத்திடாதீர் நிதம்

பீ.மேரிசிந்துஜா
மிருசுவில்

## நிழல்கள்

நிஜங்களைக் கண்டு
நிழல்களுக்கு அஞ்சித்
துடிக்கும் பட்டாம்பூச்சிகளை
பறக்கவிடுங்கள் சுதந்திரமாய்!
பறித்துவிடாதீர்கள்
இந்த மொட்டுக்களை
மலர விடுங்கள்

ஆ.நிருஷிகா
யா/ சுண்டுக்குளி
மகளிர் கல்லூரி

## துணிவே துணை

நிழலைக் கண்டு- நீ
பேய் என்று பயந்தது போதும்
உள்ளத்தில் தோன்றும்
அச்ச உணர்வு
உன் எதிர்காலத்தை பாழாக்கி
கோழையாய் வாழவைக்கும்
பயந்தவன் கண்ணுக்கு
பார்ப்பதெல்லாம் பேயாகும்
துணிந்து எதிர்த்தால்
துயரம் பறந்தோடும்
வாழ்வில் என்றும்
துணிவே துணையாகும்

சி.திவ்வியா
யா/ ப.மெ.ம.வி.

## இறைமை

தன்னுயிர் போல மன்னுயிரை
உணரும் மனிதன் ஒருவன்
இன்னுயிர் குழந்தைகளையும்
தன் குழந்தைகளாக
உணருவான்!
அநாதைக் குழந்தைகளின்
துன்பம் தீர்ப்பான்!
மறைந்த அன்னை தெரேசா போல்
இறை மனிதன் உலகில் யாருளர்?
இறைமை பேசும்
ஆட்சியாளர் உணர்வார்களா?

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## அச்சம் தவிர்

இளங்கன்றானது
பயமறியாதது
இக்கட்டானது
நிகழ்காலத்தில்
தோற்றும் போனாலும்
போற்றும் வகையில்
சிறுவர்களுக்கெதிரான
துஷ்பிரயோகங்கள்
வன்முறைகளை
தினம் பத்திரிகைகள்
வெளிப்படுத்தும்
பரிகாரம் காண அறநெறிகளை
திறம்பட க்கூறும்
திருவள்ளுவர் குறளை
உகைத்தவருக்கு
பாடமாக்கினால்
பாதகங்கள் காலமாகிவிடும்

க.நாகராசா
நுணாவில்

# மௌனத்தின் தேடல் -398



### அன்பு வாசகர்களே !


உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09.05..2013 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# செக்கு மாடுகள்!



## சிறுகதை

மிருசுவில் தமிழ்தாசன்,
மீசாலை கிழக்கு, மீசாலை.

நேரம் நள்ளிரவு பன்னிரெண்டு மணியைத் தாண்டிவிட்டது. ஆனால் உறக்கம் அவனை அணைத்துக் கொள்ளப் பிடிவாதமாக மறுத்து நின்றது. எட்டு ஆண்டுகளின் பின்பு தாய் மண்ணுக்குப் புறப்படப்போகும் அந்த மகிழ்ச்சியே கபிலனுடைய இயல்பான உறக்கத்திற்கு வில்லத்தனம் பண்ணி வில்லங்கம் செய்து கொண்டிருந்தது.

அம்மாவின் கைபட்ட கிராமத்துப் பாரம்பரிய அறுசுவை உணவு வகைகள், அப்பாவின் அன்பும் அரவணைப்பும், தம்பி, தங்கையுடன் போடும் செல்லச் சண்டைகள், நண்பர்களுடன் அரட்டைகளடித்து வேடிக்கையாகப் பொழுதைப் போக்குவது, அம்மன் கோயில் திருவிழா, சச்சிதானந்தம் மாஸ்ரரின் கடைக்குட்டி மகள் சொப்பனாவின் சொக்க வைக்கும் லாவண்யத்தையும் பார்த்து ரசிப்பதுடன் முடிந்தால் அப்படியே ஐ லவ் யூ சொல்லி அவளின் சம்மதத்தையும் பரிசீலித்துப் பார்ப்பது, அப்பப்பா எத்தனை வகையான திட்டங்களும் கற்பனைகளும் கபிலனின் நெஞ்சிலே முருங்கை மரத்து மயிர்க்குட்டிகளாகக் குவிந்து போய்க் கிடந்தன.

"எந்த ஊரென்றாலும் அது நம்ம ஊரைப் போல வருமா!" இளையராஜாவின் அந்தப் பாடலை உதடுகள் தன்னிச்சையாக முணுமுணுத்துக் கொள்ளும்.

லண்டன் என்னும் இச் செல்வந்த மண்ணிலே பணத்தைத் தவிர அவனுக்கு வேறெந்த மகிழ்ச்சிகளும் கிட்டியதாகத் தெரியவில்லை. குடும்ப வறுமையைப் போக்குவதற்காக பதினெட்டு வயதிலே பெற்றவர், உற்றவர், ஊர் உறவுகளைத் துறந்து வந்து முழு மூச்சாக சம்பாதித்துக் கொண்டு தானிருக்கின்றான்.

பார்க்குமிடமெல்லாம் வெள்ளைத் தோல்கள், போதாதற்கு நீக்ரோக்களின் கன்னங்கரேலென்ற முரட்டு முகங்கள், ஆசையருமையாக எம்மவரைப் பார்த்தாலும் கூட சாவகாசமாகப் பேசவோ பழகவோ முடிகின்றதா! சதா பரபரப்பு.

சுட்டெரிக்கும் வெயிலில் வீதியில் நடந்து செல்லும் ஒருவன், சற்றுக் களைப்பாறுவதற்காக மரநிழலில் ஒதுங்கிக் கொள்வது போல பிறந்து ஊருக்குப் போய் மனதில் தேக்கி வைத்திருக்கும் சின்னச் சின்ன ஆசைகளுக்கு வடிகால்களைத் தேடிக் கொண்டால் லண்டன் வாழ்க்கையில் இத்தனை காலமும் பட்ட களைப்பும் அசதியும் பறந்தோடிவிடுமென்பது கபிலனின் கணிப்பாகவிருந்தது.

காலை பத்து மணியாகியும் பனி மூட்டம் முற்றாகக் கலையவில்லை. ஓடுபாதையில் நான்கைந்து தடவைகள் சுழன்றடித்துவிட்டு ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்காவை நோக்கி அகோரப் பாய்ச்சலில் பறக்கத் தொடங்கியது அந்த நவீன போயிங் விமானம். எட்டு மணித்தியாலங்களில் கொழும்பு போய்ச் சேர்ந்துவிடும். அதேயளவு நேரத்தில் கபிலன் யாழ்ப்பாணம் போய்விடுவான். மனம் அங்கலாய்த்தது.

" எட எங்கடை ஊரிலை ஆசைக்குக்கூடி ஒரு மண்வீட்டைக் காணயில்லை. எப்பிடியிருந்த வீடுகள் இப்ப எப்பிடியெல்லாம் மாறீட்டுது. அப்ப எங்கடை வீடும் நல்ல எடுப்பமாய் தான் இருக்கப் போகுது. மாதம் மாதம் நான் அனுப்புற காசை வைச்சு விலாசமாய் வீடு திருத்தியிருப்பினம்"

தெருப்படலையில் ஆட்டோ நின்றதும் அவசரமாய் இறங்கினான் கபிலன்.

"வா மோனை! வாடா!"

அம்மா அன்னபூரணி ஓடோடி வந்தாள். தங்கை கௌரியும் வந்து விட்டாள். பிரயாணப் பைகள், பொதிகள் யாவும் கைமாறின. கபிலனின் கண்கள் அவர்களின் வீட்டின் மீதே பார்வையைப் பதித்துக் கொண்டன.

எட்டு வருடங்களுக்கு முன்பு பார்த்த அதே வீடு! எந்தவிதத் திருத்தங்களோ புனரமைப்புக் களோ இன்றி பரிதாபமாகக் காட்சியளித்தது. முதல் ஏமாற்றமிது.

" அண்ணை என்ரை கொம்பியூட்டர் பழுதாய்ப் போய்ச்சுது. புதுசு வாங்கி வந்தனியே!"

வந்த களை ஆற முன்பு பதினைந்து வயது தங்கை தொல்லை கொடுத்தாள். எங்கிருந்து வந்தானோ தம்பி அகிலனும் வந்து விட்டான். அண்ணனின் சுமசேமங்களை விசாரித்தானோ இல்லையோ! கபிலனின் பிரயாணப் பைகளைக் கிளறி ஆராய்ந்து கொண்டிருந்தான் ஒரு சுங்க அதிகாரியைப் போல். உயர்தரம் படிக்கும் தம்பியிடம் உயர்ரக சென்ட் வாசனை வீசியது. கூடவே சிகரெட் நாற்றமும் கபிலனின் நாசியைத் துளைத்தெடுத்தது.

நடக்க முடியாத நிலையில் கால்களிரண்டும் பின்னிக் கொள்ள உதட்டில் வார்த்தைகள் வராது வழுக்கிக் கொள்ள, நிறை மது போதையில் தள்ளாடியபடி வந்தமர்ந்தார் அப்பா தவராசா. இப்போதெல்லாம் அவர் மதுவுக்காக நிறையச் செலவு செய்தார்.


கபிலனின் வெளிநாட்டுப் பணம் "தண் ணி"க்காக தண்ணீராய்ச் செலவாகியது. வீட்டில் அம்மா சமைப்பதில்லை. தினமும் ஹோட்டலிலிருந்து கொத்துரொட்டி, கோழிப் பொரியல், பீசா போன்ற ஆடம்பர உணவுகள்.

தம்பி மோட்டார் சைக்கிளில் காலநேர மின்றி ஊர் சுற்றியது. தங்கைக்கும் நட்புகள் ஏராளம். சதா தொலைபேசியிலும் இணையத்திலும் பொழுதுகள் கரைந்தன. அப்பாவைச் சுயநிலையில் பார்க்க முடியவில்லை. அன்பாகப் பேச முடியவில்லை. கபிலனின் வெளிநாட்டுப் பயணம் இவர்கள் அனைவரையும் முழுமையாக மாற்றி விட்டது. இவர்கள் இனி மாறப் போவதில்லை.

குளிர் கூதல் பாராது, சுவையுணவுகள் துறந்து, பந்த பாசமிழந்து, தனிமரமாயிருந்து கபிலன் சம்பாதித்தது தன்னுடைய குடும்பத்தை முன்னேற்றிப் பிறரைப் போல் கௌரவமாக வாழ்வதற்கே! ஆனால் இங்கோ பாடுபட்டுத் தேடிய பணம் பாழ்பட்டுப் போகின்றது. மூன்று மாத விடுமுறைகளில் வந்தவன் ஒரு மாதமாக முன்பே தலைவிதியை நொந்தபடி மீண்டும் செக்கிழுக்கப் புறப்படுகிறான்.

(யாவும் கற்பனை)

## படம் பார்த்து கதை சொல்வோம்





## சர்வதேச அரசியல் பார்வை

# உலக அரங்கை பரபரப்பாக்கும் கிம் ஜாங் உன்


## அமெரிக்காவை அழிக்கும் பொத்தான் எங்கே?

சர்வதேச அரசியல் என்பது தேசிய அரசியலை போல் அன்று. சர்வதேச அரசியலில் நடைபெறுகின்ற ஒவ்வொரு விடயங்களுக்குமான பின்னணியை இலகுவாக ஊகிக்க முடியாது. ஏன், எப்படி, எவ்வாறு என்ற வினாக்களுக்கான விடையைக் கண்டு கொள்வது மிகக் கடினமாகும். ஏனெனில் சர்வதேச அரசியலில் நம்பிக்கை, விசுவாசம் என்ற பண்புகளுக்கு அப்பால் சுயநலம், நம்பிக்கைத் துரோகம், கபடம், நாசகாரம் என்ற பண்புகளே மேலோங்கிக் காணப்படும். அதிகார அரசியலை மையமாகக் கொண்ட சர்வதேச அரசியலில் கடந்த வாரம் அனைவரினதும் கவனத்தையீர்த்த வடகொரியா மற்றும் தென்கொரியா ஜனாதிபதிகளுக்கிடையிலான இராஜதந்திர சந்திப்பினை இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

இந்தியா- பாகிஸ்தான், வடசூடான்- தென்சூடான் போன்ற ஒரு உறவுக்கார முரண்பாட்டினைக் கொண்டதே வடகொரியா- தென்கொரியா முரண்பாடாகும். இரண்டாம் உலகப் போரினைத் தொடர்ந்தது கொரிய தீபகற்பமானது 38 ஆம் அட்சகக் கோட்டினை அடிப்படையாகக் கொண்டு 1948 ஆம் ஆண்டு வடகொரியா- தென்கொரியா என்ற இரண்டு நாடுகள் பிரிக்கப்பட்டன. அதன் பின்னர் 1950 ஆம் ஆண்டு தென்கொரியா மீது வடகொரியா போரினைத் தொடுத்ததோடு 1953 ஆம் ஆண்டு அப்போர் பல இலட்சம் மக்களின் உயிரிழப்புடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்து இரண்டு நாடுகளுக்குமிடையில் முரண்பாடானது உச்சநிலையினை அடைந்தது. கிட்டத்தட்ட ஒரு பனிப்போரை இரண்டு நாடுகளும் நடத்தின. சீனா, ரஷ்யா, ஈரான், சிரியா போன்ற நாடுகள் வடகொரியா சார்பாகவும் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் தென்கொரியா சார்பாகவும் அணிவகுத்ததனால் இது ஒரு பிராந்திய முரண்பாட்டிற்கு அப்பால் உலக ஆதிக்கம் பெற்ற சர்வதேச முரண்பாடாக பரிணாமம் கண்டது.

தென்கொரியாவானது ஜனநாயக சித்தாந்தங்களை பின்பற்றினாலும் வடகொரியாவானது கம்யூனிசம் சார்ந்த குடும்ப ஆதிக்கம் பெற்ற ஓர் சர்வாதிகார நாடாகவே தன்னை அடையாளப்படுத்தியது. வடகொரியாவானது உலக நாடுகளுடன் முரண்பட்டதோடு தன்னுடைய நாட்டில் ஓர் இராணுவ சர்வாதிகாரத்தை நடத்தியது. குறிப்பாக ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பதவியேற்றுக் கொண்ட தற்போதைய வடகொரிய ஜனாதிபதியான கிம் ஜாங் உன் இந்த நூற்றாண்டின் சர்வாதிகாரியாகத் தன்னை வெளிக்காட்டினார். 34 வயதாகும் கிம் ஜாங் உன் வடகொரியாவினை ஒரு சர்வாதிகார இரும்புத்திரை கொண்ட நாடாக உருவாக்கியதோடு உலக நாடுகளுக்கு மிகவும் அச்சுறுத்தலாக தன் ஆட்சியை நடத்துகின்றார்.

2017 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக சக்தி வாய்ந்த அணுகுண்டு மற்றும் ஏவுகணைச் சோதனையை நடத்தியதோடு கொரிய தீபகற்பத்தினை முழு நேர பதற்றத்திற்குள் தள்ளினார். அமெரிக்காவை கடுமையாக எதிர்த்ததோடு அமெரிக்காவிற்கு எதிராகக் கடுமையான வார்த்தைப் போரை நடத்தினார். கிம் ஜாங் உன் என்ற வார்த்தையானது உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக மாறியது. குறிப்பாக ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகள் நேரடியாக கிம் ஜாங் உன் உடன் முரண்பட்டுக்கொண்டது. குறுகிய காலத்தில் பரிபூரண சர்வாதிகாரியாக உருமாறிக் கொண்டார். மலேசியாவில் வைத்து தன்னுடைய சகோதரனைக் கொலை செய்தமை, சொந்த மாமாவை ஒரு வாரம் பட்டினி போட்டு நாய்க்கு இரையாக்கியமை, தன்னுடைய கூட்டத்தில் தூங்கிய இராணுவ அதிகாரிக்கு மரண தண்டனை கொடுத்தமை போன்றவற்றின் மூலமும் பொருளாதார தடைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் கண்டனங்களை மீறி சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டு, அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி உலக நாடுகளின் கடுமையான கோபத்திற்கும் வெறுப்பிற்கும் உள்ளாகினார். அமெரிக்காவை அழிக்கும் பொத்தான் தன் மேசை மீது காணப்படுகின்றது என்று குறிப்பிட்டதோடு எந்நேரமும் தங்கள் ஏவுகணைகள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தும் எனக் குறிப்பிட்டு அமெரிக்காவை கடுமையாகச் சீண்டினார். இதனால் வடகொரியா மீது எந்த நேரமும் அமெரிக்கா, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் தாக்குதலைத் தொடுக்கலாம் என்ற நிலையில் கொரிய தீபகற்பம் காணப்பட்ட போது திடீரென ஏவுகணைச் சோதனையையும் அணுகுண்டு சோதனையையும் நிறுத்தப் போவதாக கடந்த மாதம் அறிவித்து உலக நாடுகளை வியப்படையச் செய்தார்.



உண்மையில் வடகொரிய ஜனாதிபதியின் இத்திடீர் மனமாற்றத்தை உலக நாடுகள் வரவேற்றாலும் அறிவிப்பிற்குப் பின்னால் தங்களுடைய சந்தேகத்தையும் வெளிப்படுத்தினர். கிம் ஜாங் உன் இன் இந்த மனமாற்றம் பல்வேறு ஊகங்களை சர்வதேச பார்வையாளர்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. வடகொரிய ஜனாதிபதியின் மனமாற்றத்திற்கான திருப்பம் தென்கொரியாவில் இடம்பெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் நடந்தது. தனது சகோதரியை தென்கொரியாவிற்கு ஒலிம்பிக் குழுவுடன் அனுப்பி ஒரு நட்புறவு சமிக்ஞையை வெளிப்படுத்தினார். அதனைத் தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதியுடன் நேரடிச் சந்திப்பு, தென்கொரிய ஜனாதிபதியைச்சந்திப்பதுபோன்ற அறிவித்தல்களை விட்டதோடு தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக சீனாவிற்கு திடீரென சென்று சீன ஜனாதிபதியை சந்தித்துப் பேசியமை எல்லாம் உலக நாடுகளை வடகொரியா பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது.

அடுத்துவரும் மாதங்களில் அமெரிக்க ஜனாதிபதியுடன் சந்திப்பை மேற்கொள்வதற்கான முயற்சிகள் நடந்துவரும் நிலையில் சென்ற வாரம் தென்கொரியாவிற்குச் சென்று தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜேயை சந்தித்து உச்சி மாநாட்டில் கலந்து கொண்டதோடு 65 வருடகால பகைக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

அத்துடன் எதிர்காலத்தில் எந்தவொரு அணுகுண்டு சோதனையையும் வடகொரியா நடத்தாது என்பதோடு அணுகூடங்கள் மூடப்படும் என்றும் ஏவுகணைச் சோதனை நிறுத்தப்படும் என்றும் கொரிய தீபகற்பம் இனிமேல் அமைதிப் பூங்காவாக மாறும் என்றும் அறிவித்து மீண்டும் உலக அரங்கை பரபரப்படையச் செய்தார்.

கிம் ஜாங் உன் இன் இந்தத் திடீர் மனமாற்றத்தின் பின்னணியில் பல ஊகங்கள் பன்னாட்டு அரசியலில் முன்வைக்கப்படுகின்றன.

1.உலக அரங்கில் வடகொரியாவை அணுவாயுத நாடாக மாற்றவேண்டும் என்ற அவரின் இலக்கு நிறைவேறியதனால் கொரிய தீபகற்பத்தில் ஒரு இராணுவ வலுச் சமநிலையை உருவாக்கியதுடன் தன்னை ஒரு வல்லரசு தலைவர்களுக்கு சமமான தலைவராகக் கருதிக்கொண்டு பன்னாட்டு மேடையில் வெளிப்பட்டிருக்கலாம்.

2.சண்டித்தன அரசியலின் விளைவாக பன்னாட்டுச் சமுதாயம் விதித்த பொருளாதாரத் தடை என்ற நெருக்கடியை சமாளிக்க முடியாமல் அவர் இந்த முடிவுக்கு வந்திருக்கலாம். ஏனெனில் பொருளாதார தடையின் மூலம் மிக மோசமான ஒரு தேசிய நெருக்கடியை வடகொரியா சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

3.ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் நிகழ்ச்சி நிரலில் தன்னை இணைத்துக் கொண்டதன்மூலம் அவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம். ஏனெனில் சீனாவின் மென் அதிகார அரசியல் என்ற இராஜதந்திர வழிமுறைக்குள் சீனா இவரை கொண்டு வந்து விட்டிருக்கலாம்.

4.ரஷ்யாவிற்கு உலக அரங்கில் ஒரு இராணுவக் கூட்டமைப்பு இல்லாமையினால் அமெரிக்கக் கூட்டமைப்பினை ரஷ்யாவால் தனித்து எதிர்கொள்ள முடியவில்லை. இது சிரியா மீது அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா ஆகியன கூட்டாக தாக்குதல் நடத்தியபோது ரஷ்யாவால் அதனைத் தடுக்க முடியவில்லை. இவ்வாறான நெருக்கடி காரணமாக வடகொரியாவை வெளியுலக தொடர்புமிக்க நாடாக மாற்றுவதன்மூலம் உலக அரங்கில் ஒரு இராணுவக் கூட்டமைப்பினை எதிர்காலத்தில் ஈரான், சீனா, சிரியா, துருக்கி போன்ற நாடுகளுடன் வடகொரியாவை இணைத்து பலம்மிக்க கூட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு ரஷ்யா சீனாவின் ஆலோசனையால் இவர் இந்த முடிவை எடுத்திருக்கலாம்.

5.சீன விஞ்ஞானிகள் குறிப்பிட்டது போன்று வடகொரியாவின் அணுகுண்டு சோதனைக் கூடங்கள் தொடர்ச்சியான அணுவாயுத சோதனைகளால் சேதமடைந்துள்ளமையால் இனிமேல் வடகொரியாவால் அணுவாயுதச் சோதனையை நடத்த முடியாது என்ற ஒரு நிலையில் ஒரு மென்போக்கு வழிமுறைக்கு கிம் ஜாங் உன் தள்ளிவிடப்பட்டிருக்கலாம்.

6.அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தன் மீது எந்த நேரமும் தாக்குதல் தொடுக்கலாம் என்பதாலும் லிபியாவின் கடாபி, ஈராக்கின் சதாம் உசைன், எகிப்தின் முபாரக் ஆகிய சர்வாதிகாரிகளுக்கு ஏற்பட்ட ஒரு நிலை தனக்கும் ஏற்படலாம் என்ற ஒரு நிலையில் அவர் இந்த நிலைக்கு வந்திருக்கலாம்.

எது எவ்வாறாயினும் வடகொரிய ஜனாதிபதியின் திடீர் மனமாற்றமானது உண்மையில் கொரிய தீபகற்பத்தின் நலனை முதன்மைப்படுத்தி மேற்கொள்ளப்பட்டதா? அல்லது இவ்வாறானதொரு இராஜதந்திர வழிமுறைகள் மூலம் தன் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள தடைகளை அகற்றி தன் நாட்டை வளர்ச்சியடைய வைக்கவா? அல்லது ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தங்கள் இலக்கை அடைய இவரை ஒரு கருவியாகபயன்படுத்துகின்றதா? போன்ற கேள்விகளுக்கான பதிலை எதிர்காலம் வழங்கும்.

**எஸ்.கோகுலன்,**
**வட்டுக்கோட்டை**


# யானையைக் கூட ஒரே கடியில் கொல்லும் விஷம்

# இராஜநாகம்



"பாம்பென்றால் படையே நடுங்கும் என்பார்கள்" அதிலும் இராஜநாகம் என்றால் பார்ப்போருக்கு சற்று கிலி ஏற்படுவதாகவே இருக்கும். உலகில் கொடூர விஷம் கொண்ட பாம்புகள் என்றால் அது ஆபிரிக்காவைச் சேர்ந்த கோப்ரா இனப் பாம்புகள்தான். அதற்கு அடுத்தது ஆசியாவிலேயே அதிக விஷம் கொண்டது இராஜநாகம்தான். இந்த இராஜநாகம் மட்டும்தான் பாம்பு வகைகளில் கூடு கட்டி, முட்டையிட்டு அடைகாக்கும். இந்தப் பாம்புகள் இந்தியா, மலேசியா, தென்சீனா, வியட்நாம்•ஆகிய நாடுகளிலும், வடக்கு ஆபிரிக்காவிலும், பிலிப்பைன்ஸிலும் காணப்படுகின்றன. இராஜநாகங்கள்குளிர்ச்சியான இடங்களில் மட்டுமே வாழும். அதன்படி எடுத்துக்கொண்டால் பசுமை மாறாக் காடுகள்தான் இவற்றின் முக்கியமான வாழ்விடம். இவற்றில் மொத்தமாக 200 வகையான பிரிவுகள் உள்ளன. மற்றப் பாம்புகளை விட இராஜநாகங்களின் கண்பார்வை கூர்மையானவை. 300 அடி தூரத்தில் உள்ள ஒரு பொருளைக் கூட மிகத் தெளிவாக காணக் கூடியது. இரவிலும் இதன் பார்வை மிகத் தெளிவாக இருக்கும்.

இராஜநாகம் குறைந்தபட்சம் எட்டு முதல் 20 அடி நீளம் வரை இருக்கும். மற்ற வகை பாம்புகள் தவளை, எலி எனச் சாப்பிட்டாலும், இராஜநாகம் மட்டும் மற்றொரு பாம்பை மட்டுமே உணவாக எடுத்துக்கொள்ளும். மற்றப் பாம்புகள் கிடைக்காத நேரங்களில் அணில், ஓணான் ஆகியவற்றை உணவாகவும் எடுத்துக்கொள்ளும். இராஜநாகங்கள் இனப்பெருக்கக் காலத்தின்போது, 30 முட்டைகள் வரை இடும். இதன் விஷம் ஒரே நேரத்தில் 20 பேரைக் கொல்லும் தன்மை கொண்டது. இது தெற்கு ஆசியாவில் அதிகமாகக் காணப்படுகிறது. இதன் பற்கள் மனிதனைத் தீண்டும்போது 1.5 செ.மீற்றருக்கு ஆழமாகக் காயம் ஏற்படும். இராஜநாகம் கடித்துவிட்டால் பெரும்பாலும் மரணத்தைத்தான் தழுவ வேண்டி இருக்கும். இதன் பற்கள் மிகக் கூர்மையானதாகவும் மிகச் சிறிய துளையுடனும் அமைந்திருக்கும். இந்தப் பாம்பு மனிதனைத் தீண்டும்போது நரம்பு மண்டலத்தைத் தாக்கி கண்களைச் செயல் இழக்க வைக்கும். அதன் பின்னர் மூளை செயலிழந்து கோமா நிலையை அடைய நேரிடும். அதன் பின்னர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணத்தைத் தழுவ வேண்டியி ருக்கும். ஒரு ஆண் இராஜநாகம் மற்றொரு பெண் இராஜநாகத்துடன் இணையும்போது ஒருவித புனுகு வாசனையையும், உளுந்து வாசனையையும் வெளிப்படுத்தும். இந்த வாசனைகளை வைத்துத் தான் கிராமங்களில் இராஜநாகங்களை மக்கள் கண்டுபிடிக்கிறார்கள்.



இணையும் பெண் பாம்பு இரண்டு மாதங்கள் கழித்து முட்டைகளை இடும். அந்த முட்டைகளை அடைகாப்பதற்கு பெண் இராஜநாகம் கூடுகளைக் கட்டும். அடைகாக்கும் நேரத்தில் கூட்டின் காவலன் ஆண் இராஜநாகம்தான். 60 முதல் 100 நாட்கள் முதல் குட்டிகள் வெளிவரத் தொடங்கும். அவை 50 செ.மீ. நீளம் வரை இருக்கும். முட்டையிலிருந்து குட்டிகள் வெளிவருவதற்கு ஒரு நாளைக்கு முன்பே அடைகாக்கும் தாய் இராஜநாகம் கூட்டை விட்டு வெளியேறிவிடும். அதன் பின்னர் எப்போதுமே அதன் கூட்டுக்கு அது திரும்பாது. குட்டிகள் சுதந்திரமாக சுற்றித் திரியும். தாய் இராஜநாகம் வெளியேறுவதற்கு மற்றொரு காரணமும் சொல்லப்படுகிறது. அடைகாக்கத் தொடங்கும் நேரத்தில் இருந்து உணவை எடுத்துக் கொள்ளாது. அதனால் குட்டிகள் வெளி வந்தால் பசியில் தின்றுவிடுவோமோ என்ற எண்ணத் தால்தான் ஒரு நாளைக்கு முன்னரே கூட்டை விட்டு வெளியேறுகிறது பெண் இராஜநாகம். இராஜநாகம் நுனி வாலை மட்டும்தரையில் பதித்து ஐந்து அடிவரை மேலே எழுந்து நின்று தாக்கக் கூடியது.

சாதாரணமாக 20 வருடங்கள் வரைக்கும் இவை உயிர் வாழும். மனிதர்களைக் கண்டால் பயந்து ஒதுங்கிக்கொள்ளும் தன்மை யுடையது இந்த இராஜநாகம். தன்னைச் சீண்டுபவர்களிடம் மட்டும்தான் தனது பலத்தைக் காட்டும்.

பாம்பின் விஷமானது அதிகமான புரோட்டீன்களால் ஆனது. இது நியூக்ரோடாக்ஸிஸ் என அழைக்கப்படுகிறது. புரதம் என்ற ஒரு பொருள் மனிதன் உயிர் வாழ மிகவும் அத்தியாவசியமான ஒன்றுதானே என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆம், நாம் உண்ணக்கூடிய உணவில் புரதங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், நமது உடலுக்கு என சில விதி முறைகள் உண்டு. ஒரு புரதம், விற்ற மின் என எதுவாக இருந்தாலும், அது வாய் வழியாக உட்கொள்ளப்பட்டு வயிற்றில் செரிமானம் ஆக வேண்டும். செரிமானம் ஆன உணவிலிருந்து மெட்டாபாலிசம் செய்யப்பட்டு தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட்டு அதன் பின்னர்தான் இரத்தத்தில் புரோட்டீன் கலக்கும்.

பொதுவாகப் பாம்புகள் கடிக்கும்போது, நேரடியாக இரத்தத்தில் கலக்கும் புரோட்டீனால், மனித உடல் இயல்பானது மாறுகிறது. இதனால் தான் மரணம் ஏற்படுகிறது. பாம்புக் கடிக்கான மருந்து தயாரிப்பு தவிர, வலி நிவாரணி, மூட்டுத்தசை மற்றும் புற்று நோய் ஆகியவற்றைத் தயாரிப்பதில் பாம்பின் விஷம் பயன்படுத்தப் படுகிறது.

ஆனால், இராஜநாகம் பாம்புக்கடிக்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்கிறது அறிவியல். இராஜநாகம் ஒரு முறை கடிப்பதால் வெளியேறும் விஷம் மிகப்பெரிய யானையையே சில நிமிடங்களில் மரணத்தைத் தழுவச் செய்யும் அளவுக்கு வீரியம் மிக்கதாக இருக்கும்.

இராஜநாகம் அடைகாத்த பின்னர் அதிலிருந்து முழுவதுமாக வெளியே றும் குட்டிகள் முழு வீரியம் கொண்டதா கவே வெளியேறும். சிறிய குட்டிகளின் விஷம் கூட பெரிய இராஜநாகத்தின் விஷத்தைப் போல வீரியம் மிக்கதாக இருக்கும். அதிகமான விஷம் கொண்டதாக இருந்தாலும், அதிகமாக வேட்டையாடப்பட்ட பாம்புகளில் முக்கியமான இடம் இராஜநாகத்துக்கு உண்டு.

# சுய மரியாதையும் தொழில் மரியாதையும்



செருப்புக்கடைக்கு ஒரு பெண் சென்றார். பணியாளர் அவரை வரவேற்று அழைத்து, செருப்பை எடுத்துக் காட்டினார். அவரை அமர வைத்து அவர் காலடியில் அமர்ந்து ஒவ்வொரு செருப்பாக அணிவித்து காட்டினார். அவருக்கு சங்கடமாக இருந்தது. நானே போட்டு பார்க்கிறேன் என்றார்... பணியாளர விடவில்லை...

அவரே அவருக்கு உதவினார். அவர் பெருந்தன்மையாக சொன்னார் "ஐயா! நானும் மனிதன் நீங்களும் மனிதன். என் கால்களை நீங்கள் தொடுவது எனக்கு ஒரு மாதிரி இருக்கிறது" பணியாளர் சிரித்தபடி சொன்னார் "இந்த கடைக்கு வெளியே போய் விட்டால், ஒரு கோடி ரூபாய் கொடுத்தாலும் நான் உங்கள் கால்களைத் தொடமாட்டேன் அது என் சுய மரியாதை!

கடைக்குள் நீங்கள் ஒரு கோடி கொடுத்தாலும், உங்களுக்கு உதவுவதை நிறுத்த மாட்டேன். இது என் தொழில் மரியாதை.



# மனிதாபிமானம்



வெளிநாட்டில் பணியாற்றி வந்த ஒருவர் விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்திருந்தார். ஒரு ஹோட்டலுக்கு அகிலேஷ் குமார் டின்னருக்காகச் சென்றார். சாப்பிட தனக்கான உணவை ஓடர் செய்து விட்டுக் காத்திருந்தார்.

அப்போது ஜன்னல் ஓரம் இரு கண்கள், ஹோட்டல் அறைக்குள் எட்டிப் பார்த்தன. சாப்பாடு மேசைகளில் நிறைந்திருந்த உணவுப் பதார்த்தங்களையும் ஏக்கத்துடன் பார்த்தன. அதனை பார்த்த அவர், அந்த சிறுவனை உள்ளே வருமாறு சைகை செய்தார். அந்த சிறுவன் உள்ளே வந்தான். அவனுடைய குட்டித் தங்கையும் கூட இருந்தாள். சிறுவனிடம் என்ன வேண்டுமென்று அகிலேஷ் கேட்க, அவரது தட்டையே காட்டிக் கேட்டான் அந்த சிறுவன். உடனே, அது போல மேலும் இரு பிளேட்டை ஓடர் செய்தார். உணவைப் பார்த்ததும் அந்தச் சிறுவன் அவசரம் அவசரமாக சாப்பாட்டில் கை வைக்கத் தொடங்கினான்.

அப்போது அந்த சிறுவனின் கையை மற்றொரு பிஞ்சுக் கை தடுத்தது. தடுத்தது அவனது தங்கை. தனது தங்கை ஏன் தன்னைத் தடுக்கிறாள் என்பதை புரிந்து கொண்டான் அந்த சிறுவன். பின்னர் இருவரும் வோஷ்பேசினுக்குச் சென்று கை கழுவி விட்டு வந்துள்ளனர்.

தொடர்ந்து மிகவும் அமைதியாக அமர்ந்து உணவை ருசித்து சாப்பிட்டுள்ளனர். அப்போது இருவரும் எந்த ஒரு வார்த்தையும் பேசிக்கொள்ளவில்லை. ஏன் இருவரும் சிரித்துக் கொள்ளக்கூடவில்லை. சாப்பிட்டு முடிந்ததும், அந்த சிறுவன் அவரைப் பார்த்து கனிவுடன் சிரித்துள்ளான்.

பின்னர் எதுவும் சொல்லிக் கொள்ளவில்லை. அண்ணனும் தங்கையும் அமைதியாக ஹோட்டலை விட்டு வெளியேறியுள்ளனர். அதுவரை அவர் அந்த சிறார்கள் சாப்பிடும் அழகை பார்த்துக் கொண்டு, தனது உணவில் கையை வைக்கவில்லை. பின்னர் அவரும் சாப்பிட்டு முடித்து விட்டு, பில் கேட்டுள்ளார். பில்லும் வந்துள்ளது. அதனை பார்த்ததும் அவரின் கண்கள் குளமாகின. பில்லில் தொகை எதுவும் எழுதப்படவில்லை. அதில் எழுதப்பட்டிருந்த வாக்கியம் இதுதான்... "மனிதாபிமானத்துக்கு பில் போட எங்களிடம் இயந்திரம் இல்லை. உங்களுக்கு நல்லது நடக்கட்டும்!"

# 'கல்' சிறுவர் கதைகள் ஓர் அறிமுகக் குறிப்பு




இன்று சிறுவர்களை நெறிப்படுத்தப் பல கற்கை நெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கான நூல்களும் கற்றல் துணைக் கருவிகளும் உருவாக்கப்படுகின்றன. சிறுவர் பாடல், சிறுவர் கதை, சிறுவர் நாடகம் எனப் பல நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் அண்மையில் வெளிவந்த 'கல்' என்னும் சிறுவர் கதை நூல் பலரும் அறிய வேண்டிய, பயன்படுத்தத் தகுந்த நூலாகும். காலத்தின் தேவையை நன்குணர்ந்து இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை நெறிப்படுத்துவதற்கான ஒரு கற்கை நெறி இன்று பெரிதும் வேண்டப்படுகிறது. சிறுவர் வீடு, உறவு, நட்பு என்ற மூன்று நிலைகளிலே பயிற்றப்பட வேண்டியவர்கள். தமிழரது மரபான பண்பாடு இப்பயிற்சியைச் சிறப்பாகவே செய்து வந்துள்ளது. வீட்டில் உறவு நிலையில் குடும்பத்தவர் எல்லோருமே இப்பணியைச் செய்தனர். பள்ளியிலும் கற்பித்தல் நிலையில் இம்மூன்று நிலைகளும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாலும் பயிற்றப்பட்டன. மேலும் சமூக நடைமுறைகளும் விழாக்களும் இப்பயிற்சிக்கு ஆக்கமும் சிறப்பான ஊக்கமும் அளித்தன.

இந்நிலை இன்று பெரிதும் பேணப்படாமையால் சிறுவரின் உடல், உள வளர்ச்சியும் செயற்பாட்டுத் திறன்களும் வலுக்குன்றியுள்ளன. எனவே அவற்றை வலுவாக்கப் புதிய செயல்முறை ஒன்று வேண்டப்படுகிறது. இதனை இலக்காகக் கொண்டே 'கல்' என்னும் நூல் உருவாக்கப்பட்டுள்ளது. 68பக்கங்கள்கொண்ட இந்நூலில்நான்குகதைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றின் தலைப்புக்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1) கல்
2) நான் பிரயோசனமானவன்
3) கடவுள் ஏன் கல்லானார்
4) விளையாட்டுப் போட்டி

இக்கதைகள் நீண்ட கதைகள்,படங்கள் இணைந்துள்ளமையால் அழகிய காட்சிப்புலப்பாடு கொண்டவை. வாசிப்புப் பயிற்சிக்கான உரைநடை அமைப்புப் பெற்றவை. பேச்சுத் தமிழிலே பயன்படும் வடமொழிச் சொற்களையும் உள்ளடக்கியவை. தமிழ் மொழிப் பயிற்சி, நாடக எழுத்துரு ஆற்றல், ஓவியப் பயிற்சி என்பவற்றிற்கு வழிகாட்டத் துணைநிற்பவை. கதை கூறலும் நடிப்பும் சிறுவரைப் பெரிதும் கவரும் ஆற்றல் திறன்கள். இவையிரண்டும் ஏனைய கற்கை நெறிகளுக்கும் துணை செய்ய வல்லவை.

நீண்ட கதையமைப்பு வகுப்பறையிலே குழு நிலை வாசிப்பு நெறியிலே எல்லா மாணவர்களும் பங்கு கொள்ள வாய்ப்புத் தரும். நூலிலே உள்ள ஓவியங்களின் வண்ணம் தீட்டப்படாத நிலை சிறுவருக்கு நாமும் இப்படி ஓவியம் வரையலாம் என்ற துணிவைக் கொடுக்கும். கதைகளின் ஊடாகப் பண்பாட்டுப் பதிவும் பயிற்றலும் இழையோடுவது இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

படம் பார்த்துக் கதை எழுதும் ஆற்றலின் மறுதலையாகக் கதைக்கேற்ப படம் வரையும் புதிய ஆற்றல் சிறுவரிடையே தூண்டப் பெற வேண்டும். இப்பண்பாட்டுப் பயிற்சி பண்டைய கோயில்களிலே நடைபெற்றுள்ளன. அவற்றை மீளப் பதிவு செய்ய உள்ள சிறுவர்களின் நற்பணியையும் இந்நூல் நினைவூட்டுகிறது. நிறைவாக இந்நூல் சிறுவர்களிலே தவழப் பெற்றோரும், ஆசிரியர்களும் ஆவன செய்ய வேண்டும். இரமணாகரன் முயற்சி மேலும் பல நூல்களை ஆக்கிச் சிறுவரை நெறிப்படுத்த வேண்டும்.

**பேராசிரியர்**
**மனோன்மணி சண்முகதாஸ்**

# குரல் காக்கும் பனங்கற்கண்டு



பனைமரத்தில் இருந்து பெறப்படும் பதநீரைப் பதமாகக் காய்ச்சித் தயாரிக்கப்படுவதே பனங்கற்கண்டு. இதில், நிறைய மருத்துவக் குணங்கள் உள்ளன.

* பூண்டுப்பாலுடன் பனங்கற்கண்டு சேர்த்துக் குடித்தால் நெஞ்சுச்சளி குணமாகும். 10 பூண்டுப்பற்களை 50 மி.லி பால், 50 மி.லி தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைக்க வேண்டும். பூண்டு ஓரளவு வெந்ததும் இரண்டு சிட்டிகை மஞ்சள்தூள், இரண்டு சிட்டிகை மிளகுத்தூள், தேவையான அளவு பனங்கற்கண்டு சேர்த்து ஒரு கொதி வந்ததும் அடுப்பிலிருந்து கீழே இறக்கி நன்றாகக் கடைய வேண்டும். இதை இரவில் தூங்கப்போவதற்கு முன் குடித்தால் நெஞ்சில் கட்டியிருக்கும் சளி அகலும். வாய்வுத்தொல்லையும் நீங்கும்.

* பாலுடன் பனங்கற்கண்டு சேர்த்துக் குடிப்பதால் சின்னம்மை, பெரியம்மை மற்றும் வெப்பத்தால் வரும் நோய்கள் குணமாகும். தாகமும் தணியும்.


* முருங்கைப்பூவைப் பாலில் வேக வைத்துப் பனங்கற்கண்டு அல்லது தேன் சேர்த்தால் முருங்கைப் பூப்பால் தயார். இதை இரவு உறங்கப்போவதற்கு முன் குடித்தால் உடலில் புதுத்தெம்பு கிடைக்கும். உடல் மெலிந்த குழந்தைகள், பார்வைக் குறைபாடு உள்ளவர்கள், ஆண்மைக்குறைவு உள்ளவர்களுக்கு இந்த முருங்கைப்பூப் பால் ஒரு வரப்பிரசாதம்.

* 100 கிராம் பனங்கற்கண்டில் 0.20 கிராம் புரதம், 0.04 கிராம் கொழுப்பு, 98.76 கிராம் சர்க்கரை, 0.30 கிராம் உலோக உப்புகள், 58.70 மி.லி கிராம் கல்சியம், 5.40 மி.லி கிராம் பொஸ்பரஸ் உள்ளன.

* அதிமதுரத்துடன் வால்மிளகு, பனங்கற்கண்டு, தண்ணீர் சேர்த்துக் காய்ச்சி இதமான சூட்டில் குடித்தால் தொண்டைப்புண் சரியாகும்.

* சுக்கு, மிளகு, திப்பிலியைப் பொடியாக்கி அதோடு பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் இருமல் குணமாகும். பாடகர்கள், செய்தி வாசிப்பாளர்கள், நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள், ஆசிரியர்கள் எனக் குரலைப் பயன்படுத்திப் பணியாற்றுபவர்களுக்குத் தொண்டை தொடர்பான பிரச்சினைகள் குணமாகும்.

* கர்ப்பிணிகள் சில நேரங்களில் சிறுநீர் பிரியாமல் அவதிப்படுவார்கள். வெந்நீருடன் பனங்கற்கண்டு சேர்த் துக் குடித்தால் சீக்கிரம் சிறுநீர் வெளியேறும்.





"உங்களுக்கு எல்லா டெஸ்டும் நோர்மலா இருக்கு."
"ரொம்ப நல்லது டாக்டர்"
"அவசரப்படாதீங்க.. அடுத்த வாரம் ஒரு புது டெஸ்ட் வருது. அதை எடுத்து ஏதாவது மாட்டுதான்னு பாப்போம்.."



"கூட்டம் வரலைன்னு தெரிஞ்சதும் தலைவர் என்ன செஞ்சார்?"
" 'வேங்கை மகன் ஒத்தையில நிக்கேன்'னு பஞ்ச் பேசுறார்"



"சிஸ்டர் அந்த பேஷன்ட்கிட்டே அதிர்ச்சியான விஷயம் எதுவும் சொல்லக்கூடாது!"
"அப்படின்னா பில்லை எப்படி காட்டறது டாக்டர்?"



"அந்தப் பெரிய சிறைச்சாலை அதிகாரி, தலைவரை மரியாதை நிமித்தமா சந்திச்சதுக்கு ஏன் தலைவர் டென்ஷன் ஆயிட்டார்?"
"போறப்போ 'எங்கள் சிறைச்சாலைக் கதவு உங்களுக்காக எப்பவும் திறந்திருக்கும்'னு சொல்லிட்டாராம்!"




"மன்னர் ஏன் காட்டில் காய்கறி பறித்துக் கொண்டு வருகிறார்? "வேட்டைக்குப் போய்விட்டு வெறுங்கையுடன் வரக் கூடாதே!"



"உங்களைத் திட்டி யாரோ ஓலை அனுப்பியுள்ளார்கள் மன்னா"
"இந்தச் சின்ன விடயத்தைப் பெரிதுபடுத்தாதீர்கள், மந்திரியாரே... பிறகு நேரில் வந்து திட்டப் போகிறான்"

# லாராவைப் போல் யார் வருவார்?



ஸ்பின்னர்களை பிட்ச் ஆஃப்திபால் சென்று அடிக்க வேண்டும். பவுன்சர்கள் வந்தால் ஹூக் செய்ய வேண்டும். மெதுவாக பந்துகள் வந்தால் பின்கால்களில் சென்று விளையாட வேண்டும். ஆஃப் சைடில் வந்தால் கட் செய்ய வேண்டும். இல்லையேல் கவர் திசையில் விளையாட வேண்டும்.


பேடில் போட்டால் ஃபிளிக் செய்ய வேண்டும். சரியான நேரத்தில் நகர்ந்து இன்சைட் அவுட் விளையாட வேண்டும்.

ஒரு துடுப்பாட்ட வீரன் இப்படி அனைத்து ஷாட்களையும் சுத்தமாக, சிறப்பாக விளையாட முடியாது. சிறப்பாக ஹூக் செய்பவர், கட் செய்ய கஷ்டப்படுவார்.

ஃபிளிக் செய்யும் துடுப்பாட்ட வீரர் கவர் டிரைவில் கோட்டை விடுவார். இதெல்லாம் சிறப்பாக செய்தாலும் ஸ்பின்னர் வந்துவிட்டால் சிலருக்கு குளிர் ஜுரம் வந்துவிடும். நடுங்க ஆரம்பித்துவிடுவார்கள். அதற்கு மாறாக சுத்தமாக அனைத்து ஷாட்களையும் விளையாடும் பேட்ஸ்மென் நிச்சயம் ஜாம்பவானாகத்தான் இருக்க முடியும். அப்படிப்பட்ட ஒரு ஜாம்பவான்தான் பிரையன் சார்லஸ் லாரா.

கிரிக்கெட்டை கொண்டாட்டமாக மாற்றிய துடுப்பாட்டவீரர் பிரையன் லாராவுக்கு கடந்த புதன்கிழமை அன்று 49 ஆவது பிறந்தநாள்.

டார்கெட் அதிகமென்றால் பதறும், எதிர் முனையில் விக்கெட்டுகள் விழுந்தால் பொறுமை என்பது போன்ற ரியாக்ஷன்களைக் குறைவாக கொடுப்பவர் லாரா. பயமா... எனக்கா? என்பதுபோல்தான் இருக்கும் அவரின் அணுகுமுறை. தனது துடுப்பாட்டத் திறமை மீது அசாத்தியமான நம்பிக்கை அவருக்கு உண்டு.



ஒரு உதாரணம் சொல்கிறேன். தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் தோல்விக்கு மிகஅருகில் இருந்தது மேற்கிந்தியத் தீவுகள்.

முதல் இன்னிங்ஸில் ஃபாலோ ஆனைத் தவிர்க்கவே மேற்கிந்தியத் தீவுகளுக்கு 29 ஓட்டங்கள் தேவைப்பட்டது. ஃபாலோ ஆன் வந்தால் தோல்வி உறுதி. எதிர்முனையில் இருப்பதோ கட்டக்கடைசி துடுப்பாட்ட வீரன்.

இந்த நிலைமையில் யாராக இருந்தாலும் நிதானமாக இருப்பார்கள். தங்களின் விக்கெட் மிகமுக்கியம் என பொறுமையைக் கடைப்பிடிப்பார்கள்.

முடிந்தவரை ஸ்ட்ரைக்கில் இருந்து தடுப்பாட்டத்தில் ஈடுபடுவார்கள். ஆனால், அந்த நிலையில் லாரா என்ன செய்தார் தெரியுமா?

இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ராபின் பீட்டர்சன் ஓவர் விக்கெட்டில் வீச ஸ்டம்பை நோக்கி சின்ன டர்ன். அழகான கவர் டிரைவ். நான்கு ஓட்டங்கள்.

அடுத்த பந்தும் அதேபோல வீச, இறங்கிவந்து லாங் ஆனுக்கு மேலே ஒரு சிக்ஸ். அடுத்த பந்தும் அதேபோல, கொஞ்சம்ஸ்ட்ரெயிட்டாக இன்னுமொரு சிக்ஸ். நான்காவது பந்தில் லைனை விட்டு கொஞ்சம் ஸ்டம்பை நோக்கி வந்த பந்தை, பந்துவீச்சாளர் தலைக்கு மேலே சென்று அடிக்க ஒன் பவுன்ஸ் ஓவர் தி ரோப். ஐந்தாவது பந்தில் இன்னுமொரு ஸ்ட்ரெயிட் டிரைவ். ஆறாவது பந்தில் அழகான லேட் கட் என மேலும் இரண்டு பவுண்டரிகள். ஆகமொத்தம் இருபத்தெட்டு ஓட்டங்கள். மூன்று விக்கெட் எடுத்த பந்துவீச்சாளர் கொஞ்சம் தப்பினாலும் அணிக்குத் தோல்வி என்பதையெல்லாம் மறந்துவிட்டு இப்படி ஒரு முரட்டுத்தன துடுப்பாட்டவீரர் பெர்ஃபாமென்ஸ்... அதை வேறுயாராலும் செய்ய முடியாது.

இந்த ஓவரில் பந்தை நோக்கி இறங்கியும் வந்தார், பின் சென்று லேட்டாகவும் விளையாடினார். அந்த ஃபூட்வொர்க் இருக்கிறதே, அது தான் இவ்வளவு ஓட்டங்களுக்கும் காரணமா, லாரா?

அந்த இருபத்தெட்டு ஓட்டங்கள் எடுத்த ஓவர் இதுவரை டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் வழங்கிய ஓவராக உள்ளது. அதற்கடுத்த ஓவரில் இரண்டு ஓட்டங்களை எடுத்து ஃபாலோ ஆனைத் தவிர்த்தது மேற்கிந்தியத் தீவுகள். ஆட்டம் சமநிலையானது.

நான் கிட்டத்தட்ட அனைத்து பந்துகளையும் ஒரேமாதிரி தான் வீசினேன். ஆனால், அந்த பந்தை எவ்வாறெல்லாம் அடிக்கலாம் என லாரா எனக்கு சொல்லிக்கொடுத்தார்.



முதலில் இரண்டு பவுண்டரிகளுக்கு பின்னர் தடுப்பாட்டம் ஆடுவார் என நினைத்தேன். அவர் அடித்த திசையில் ஆட்களை நிற்கவைத்தேன்.

ஆனால், அவரின் மூளையிலிருந்ததோ வேறு எண்ணங்கள் என்பதை கடைசி பந்தில்தான் உணர்ந்தேன் என்று போட்டிக்குப் பின்னர் சொன்னார் ராபின் பீட்டர்சன்.

ஒரு குறிப்பிட்ட வகையான பந்தை வீசும்போது துடுப்பாட்ட வீரர்கள் குறிப்பிட்ட ஷாட்களைத்தான் அடிக்க முடியும் என்றில்லை. நீங்கள் சரியாக விளையாடினால் அந்தப் பந்தை எந்த திசையிலும் அடிக்கலாம் என விளையாடிக் காட்டியவர் பிரையன் லாரா.

ஒரு அணி தொடர்ந்து தோல்வியடைந்து கொண்டே இருக்கும்போது, எந்தவொரு வீரராலும் உற்சாகமாக விளையாட முடியாது. மேற்கிந்தியத் தீவுகள் தொடர்ந்து தோல்வியை மட்டுமே சந்தித்தபோது, தனி நபராக அந்த அணியை தூக்கி நிறுத்தப் போராடியவர் லாரா. இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இரண்டு இருநூறுகள் உட்பட கிட்டத்தட்ட அறுநூற்று ஐம்பது ஓட்டங்களை விளாசினார். ஆனால், அணிதான் மூன்றுக்கு பூஜ்யம் என்று தோற்றுப்போனது.

அவர் விளையாடிய 131 டெஸ்ட் போட்டிகளில் 61 போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகள் தோற்றுள்ளது என்பதே, அவர் விளையாடிய சூழ்நிலைச்சொல்லும். முதல்தர கிரிக்கெட்டில் ஐநூற்று ஒன்று நாட் அவுட், டெஸ்ட் கிரிக்கெட்டில் நானூறு ஒன்று நாட் அவுட் என மாபெரும் ஓட்டங்களை தனது அதிகபட்ச ஓட்டங்களாக தன் வசம் வைத்துள்ளார் லாரா.

எந்தவீரர் சிறப்பாக விளையாடினாலும் அதனைப் பாராட்டக்கூடிய பண்புடையவர். 2015 உலகக்கோப்பையின் போது, காலிறுதியில் பாகிஸ்தானின் வஹாப் ரியாஸ் அருமையான பந்துவீச்சில் அவுஸ்திரேலியாவை திணறடித்தார். அப்போது அவரின் நடத்தைக்கு அபராதம் விதிக்கப்பட்டபோது, அவரின் விளையாட்டை பாராட்டி அபராதத்தை தான் செலுத்துவதாகச் சொன்னார் லாரா.

நேர்த்தியான கிரிக்கெட்டின்மீது அவர் வைத்துள்ள நேசத்துக்கு இதை உதாரணமாகச் சொல்லலாம்.

பத்தாயிரத்துக்கும் அதிகமான ஓட்டங்களைக் குவித்த பிரையன் லாரா ஓய்வுபெறும் போது கடைசியாக ரசிகர்களைப் பார்த்து நான் உங்களை மகிழ்வித்தேனா? என்று கேட்டார்.

அதற்கு மைதானமே அதிரும ளவுக்கு எழுந்த ஆரவாரம் பதில்சொன்னது.

# சரணாகதி

(நிமிடக்கதை)

அன்பு நிறைந்த சங்கு நாத வாசகர்களே...

உங்கள் அனைவருக்கும் ஜிம்மிக்குட்டியின் ஞாயிறு வணக்கம் உரித்தாகட்டும். இதென்ன...மேடைப் பேச்சு ஒன்று ஆரம்பிப்பது போல நானும் ஆரம்பிக்கிறேனே என்று யோசிக்காதையுங்கோ. இது என்னுடைய ஒரு ஸ்டைல் ...பெரியவரிட்டை ஒரேயடியாப் பேச்சுப்பழக வாற பிள்ளைகள் இப்பிடித்தான் ஆரம்பிக்கிறவை. ம்...முப்பத்தைந்தைத் தாண்டி இண்டைக்கு முப்பத்தெட்டாம். விளங்குதோ? வெயில் நாளுக்கு நாள் அதிகரிக்குது. மனிசரே இந்தப் பாடென்றால் எங்கடை கதி? ஐயோ விசராக் கிடக்கு. இங்கை வழைப்பாத்தி ஈரத்துக்கை மண்சட்டி நிறையத் தண்ணி வைச்சிருக்கினம். என்னையும் தொக்குட்டி அடிக்கடி தண்ணி குடி என்று ஒரே ஆக்கினை. நல்ல குளுமையாக இருக்கும். மத்தியானம் இரண்டு மணிக்குப் பிள்ளை வரேக்கை சட்டி காலியாக் கிடக்கும். அவ பெரிய சந்தோசமா என்ரை தலையைத் தடவி இங்கிலீசிலை பாராட்டுவா. இதெல்லாம் உங்களுக்கு ஏன் சொல்லுறன் எண்டு யோசிக்கிறியள் போல... எந்த ஒரு சீவனுக்கும் பாராட்டு, தட்டிக் கொடுப்பு, சிரித்த முகத்தோடை ஒரு தலையாட்டம் இதிலை ஏதாவது ஒண்டு ஆவது தேவைப்படும். அதைப் பெரியவை நீங்கள் மனமாக் குடுங்கோ. ஒன்றும் சிலவில்லை. இலவசம்தான். பாலாண்ணை வாறார். ஏதோ முகம் குழம்பிக் கிடக்கு. பெரியவர் வரவேற்றுக் கதிரையைக் காட்டுறார். வந்தது வர முன்னம் பெரியவரோடை ஏதோ கதைக்கிறார். உள்ளுக்கிருந்து பெரியவரின்ரை மகனும் அவசரமா வெளியிலை வாறார். பாலாண்ணை அவரையும் இருக்கச் சொல்லிக் கதிரையைக் காட்டுறார்.

கந்தையாண்ணை கத்தியோடை வாறார். "பெரியவர் இளநீர் வெட்டித் தரட்டோ" ம்...சமய சந்தர்ப்பம் தெரிஞ்ச மனிசன். நிலைமை சூடாக் கிடக்குதெண்டு விளங்கிக் கதைக்கிறார். பெரியவர் தலையாட்டிக் கொண்டே பாலாவைப் பாக்கிறார். பாலா தொடர்கிறார்.

"சேர்...கடவுள் இருக்கிறாரோ..."பெரியவர் திடுக்கிட்டுத் திரும்புறார். "இதென்ன கரைச்சல்... இத்தினை வயசிலை இதென்னைய்யா கேள்வி. இருந்தா என்ன இல்லாட்டி என்ன... உன்ரை மனச்சாட்சி இருக்குத் தானே"

பெரியவர் நிதானமா நிமிர்ந்திருக்கிறார். தொடர்ந்தும் பாலாவைப் பார்த்தபடி கதைக்கிறார்...

"தம்பி பாலா கடவுள் நம்பிக்கை அவரவர் மனப்பக்குவத்தைப் பொறுத்தது. ஆனால் எங்களாலை கட்டுப்படுத்த முடியாத, எங்களையே கட்டுப்படுத்தி வைக்கிற ஒரு மாபெரும் சக்தி தான் ஐயா கடவுள். நாங்கள் விரும்பிய வடிவங்களை, உருவங்களை, ஒளியை, வாளை, மரத்தை இன்னும் எதையெதையோ காலாதி காலமாக கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். எப்ப உயிர் வாழ்வதிலை சிக்கல் வந்துதோ அப்பவே கடவுளே! எண்டு அழைக்கத் தொடங்கி கல்லைச் சிலையாக்கி சிலைக்குக் கோயில் கட்டி பல்வேறு மத வழிபாடுகளை மனிதன் பின்பற்றி அமைதி காண முயற்சிக்கிறான். பக்குவ நிலையடைந்தவர்கள் இறைவனை வெளியே தேடுவதில்லை. தமக்குள்ளேயே தெய்வத்தைக்கண்டு அதை மனச்சாட்சியாக்கி அதன் குரலையே தெய்வ வாக்காக்கி சுயம்-பிரகாரத்தை வழிபடுகிறார்கள். பல நதிகள் மலையுச்சியில தோன்றி எங்கெங்கோ சுற்றி ஈற்றில சமுத்திரத்தில சங்கமமாவது போன்றுதான் மதங்களும் அதன் பாதைகளும்.

"ஏன் பாலா...ஏன் இப்படிப் பதட்டப்படுறாய். உன்ரை பிள்ளையளுக்கு ஏதாவது ..."

"சேர்...ஓம் சேர்...மகன் கடுங்காய்ச்சலெண்டு ஐ.சி.யு...விலை வைச்சிருக்கினம். மூண்டு நாளா மூச்சுப் பேச்சில்லை. மற்றப் பிள்ளையைப் பாக்கட்டோ மனிசியைச் சமாதானப்படுத்தட்டோ. எனக்கு மட்டும் தான் எல்லாப் பிரச்சினை யும்..."

தலையிலை கைவைச்சுக் கொண்டு...பாவமாக் கிடக்கு. பெரியவர் ஆறுதல் படுத்திறார்.

பாலா...தீவிர சிகிச்சைப் பிரிவிலை எத்தினை டொக்டர்மார் கவனிப்பினம். அவையின்ரை கையிலை பிள்ளையைக் குடுத்திட்டு மனதை அமைதியாக்கி மற்றப் பிள்ளையைக் கவனி.

தம்பி பாலா...மரத்தை நட்டுப் போட்டு அடிக்கடி பிடுங்கிப் பிடுங்கி முளைச்சிட்டுதோ முளைச்சிட்டுதோ எண்டு பாக்கக்கூடாதைய்யா. பூரணமா வைத்தியத்தை நம்பு. மனிசிக்கு ஆறுதல் சொல்லு. தற்போதைக்கு உனக்குக் கண்கண்ட கடவுள் டாக்குத்தர்தான். அதோடை தெய்வத்தின் சக்தியும் சேரும். நீ பிரார்த்தனையாலை மனதை அமைதிப்படுத்து. மத்தியானம் போய்ப்பார். அவன் முழிச்சுப் பாப்பான். நம்பிக்கை வேணும் ஐயா. உச்சத்துக்குப் போன காய்ச்சல் இறங்கத்தானே வேணும். ம்... தைரியமாப் போட்டு வா. தம்பி நீயும் கூடப் போய்யா...

ஓம்...எவ்வளவு ஆறுதலாக் கிடக்கு... அதுசரி... கடவுள் இருக்கிறார்தானே... ம்.கடவுளே...அப்ப வாறன்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : நீதிக்கு தலை வணங்கு
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
இயற்றியவர் : புலமை பித்தன்
பாடகர் : கே.ஜே.யேசுதாஸ்



இந்தப் பச்சைக் கிளிக்கொரு செவ்வந்திப்பூவைத்
தொட்டிலில் கட்டிவைத்தேன் - அதில்
பட்டுத் துகிலுடன் அன்னச் சிறகினை
மெல்லென இட்டு வைத்தேன் -

நான் ஆராரோ என்று தாலாட்ட -
இன்னும் யாராரோ வந்து பாராட்ட (இந்தப்)

எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே -
பின் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்க்கையிலே (2) -

நான் ஆராரோ என்று தாலாட்ட -
இன்னும் யாராரோ வந்து பாராட்ட (இந்தப்)

தூக்கமருந்தினைப் போன்றவை
பெற்றவர் போற்றும் புகழுரைகள் -
நோய் தீர்க்கும் மருந்தினைப் போன்றவை
கற்றவர் கூறும் அறிவுரைகள் (2) -

நான் ஆராரோ என்று தாலாட்ட -
இன்னும் யாராரோ வந்து பாராட்ட (இந்தப்)

ஆறு கரை அடங்கி நடந்திடில்
காடு வளம் பெறலாம் -
தினம் நல்ல நெறிகண்டு பிள்ளை வளர்ந்திடில்
நாடும் நலம் பெறலாம் (2) -

நான் ஆராரோ என்று தாலாட்ட -
இன்னும் யாராரோ வந்து பாராட்ட (இந்தப்)

பாதை தவறிய கால்கள் விரும்பிய
ஊர் சென்று சேர்வதில்லை -
நல்ல பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவர்
பேர் சொல்லி வாழ்வதில்லை (2) -

நான் ஆராரோ என்று தாலாட்ட -
இன்னும் யாராரோ வந்து பாராட்ட (இந்தப்)

# வியாசரின் வியாக்கியானம்



மேதினம் அன்டைக்கு லீவு நான் தானே. வீட்டில சும்மா நிக்க விசராக் கிடந்தது. பின்னேரவுணுக்கு ஒருக்கா புதினம்பாத்திட்டு வருவம் எண்டும் ஊர்வலம் ஏதும் போகும் எண்டு போனன்.

சத்திரத்துச் சந்தி சிக்னலைத் தாண்டி ஆஸ்பத்திரி வீதிக்குத் திரும்பினன். ஒரு முதியவர் காலை நீட்டிக் கொண்டு படுத்திருந்தார்.

மெல்ல அவருக்கு அருகில போய் ஐயா ஏன் ஏதும் உடம்பு சரியில்லையோ எண்டு கேட்டன்.

திடுக்கிட்டு எழுப்பின அந்தாள் உடம்பு எல்லாம் சரியாத்தான் இருக்குத் தம்பி மனசு தான் சரியில்லை எண்டுது.

ஏனையா என்ன பிரச்சினை எண்டன்?

நான் ஒரு தினக் கூலி வேலையாள். யாழ்ப்பாணத்துக் கடைகளுக்கு கொழும்பில இருந்து லொறியில வாற சாமான்களை இறக்கி அதில வாற காசில கஞ்சி குடிக்குது என்ர குடும்பம். இண்டைக்கு ஏதோ மேதினமாம்...

ஓம் ஐயா தொழிலாளர் தினம் என்றேன் நான். கடுப்பான அவர் ஆ...தொழிலாளர் தினமோ?

முதலாளிகள் எல்லாம் சேர்ந்து ஒரு நாள் லீவு விட்டு தொழிலாளர் தினம் கொண்டாடினால் அது தொழிலாளர் தினமே தம்பி?

எனக்கு நெஞ்சிலை ஆணி அடிச்ச மாதிரிப் போட்டுது.

அவர் விடவில்லை. தம்பி உந்த மேதினத்தில ஆரும் தொழிலாளி நிற்கிறானோ எண்டு பாத்திட்டு வந்து சொல்லு.

முதலாளிகளும் முதலைகளும் அரசியல்வாதிகளும் கொண்டாடுறதுக்குப் பேர் தொழிலாளர் தினம் எண்டால் எங்கட வீட்டில அடுப்பு எரியேல்லை, இதுக்கு இவை என்ன செய்தவை? என்ன செய்யப் போகினம் எண்டவர் காலில இருந்த வீடித் துண்டை எடுத்து பற்ற வைத்து புகை விட்டுக் கொண்டிருந்தார். அவரின் கோபம் எனக்குப் புரிந்து விட்டது. மெதுவாக அந்த இடத்திலிருந்து விலகிக் கொண்டேன்.

என்ர பரமசிவனே! ஒரு பெரும் பகிடி. வடமராட்சியில ஒரு கட்சியின்ர மேதின ஊர்வலத்தில இயக்கப் பாட்டுப் போட்டு ஆக்களை அழைச்சவையாம்.


அடேய் உங்கட நடிப்புக்கு ஆயிரம் சிவாஜி கணேசன் வந்தாக்கூட தாக்குப்பிடிக்காது.

வன்னியில எங்கட தமிழ்ச் சனம் கொத்துக் கொத்தாய் செத்துக் கொண்டிருக்க ஒரு கதையும் பேசாமல் (சாப்பிட மட்டும் வாய் திறப்பது) இருந்துவிட்டு இப்ப இயக்கப்பாட்டுப் போட்டு ஆள் அழைக்கிறியளே வெட்கமா இல்லை?

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் எண்டு மூச்சு முட்டச் சொல்லுற நீங்கள் அவற்றை அம்மா மந்திகை ஆஸ்பத்திரியில இருக்கேக்கை யாராவது போய்ப் பார்த்தியள். இப்ப தேசியம் பேசி எங்களை நாசமறுக்கிறியளே. நினைக்க நெஞ்சு வெடிக்குது.

எங்கடை சனம் இருக்கே, எல்லாத்தையும் மறந்து போகும். அந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி வாழ்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருங்கோ. ஆனால் ஒண்டு மட்டும் உண்மை. மேலே ஒருத்தன் இருக்கிறான். அவனுக்கு கணக்குக் குடுக்க வேணும். மறவாதேங்கோ?

# என்பெயர் சூர்யா என் வீடு இந்தியா




தமிழ்ப்படங்களுக்கிடையே கடும் போட்டி நிலவும் இந்த சூழலில் தெலுங்கு படம் ஒன்று தமிழில் டப்பிங் ஆகி வெளியாகியுள்ளது. முக்கிய படங்களுக்கான வரவேற்புக்கிடையில் சில படங்கள் வழிவிட்டு ஒதுங்கி விடும் நேரம் இது.



ஒரு இராணுவ கதையை தாங்கி கம்பீரமாக இறங்கியுள்ளது என் பெயர் சூர்யா என் வீடு இந்தியா.

மனதை ஈர்த்து மக்களிடம் இடம்பெறுமா? என உள்ளே சென்று பார்ப்போம்.

அல்லு ஒரு நேர்மையான இராணுவ வீரர். அவருக்கென உடும்பு பிடி கொள்கை. எந்த ஒரு விடயத்துக்காகவும் தன்னை சமாதானப்படுத்திக்கொள்ளமாட்டார்.



ஒரு வகையில் இவருக்கு மைனஸாக அமைகிறது.

இராணுவ எல்லைக்கு எப்படியாக போக வேண்டும் என நீண்ட நாள் கனவில் இருக்கிறார். ஆனால் அவருக்கே ஒரு சிக்கல் இருக்கிறது. இதற்கிடையில் சின்ன வயதில் வீட்டை விட்டு செல்லும் அவருக்கு பெரும் சவால்.

நடிகர் அர்ஜுன் ஊரில் மட்டுமல்ல இந்தியளவில் நல்ல புகழ் பெற்ற மனநல மருத்துவர். அல்லுவுக்கு மீண்டும் வேலையில் சேர இவரின் சான்றிதழ் தேவைப்படுகிறது. இவரின் மனைவி நதியா. இருவரின் மகன் வீட்டை விட்டு சிறு வயதிலேயே போய் விடுகிறார்.

இதற்காக அல்லு இவரை தேடி வருகிறார். ஆனால் வந்த இடத்திலும் பெரும் சிக்கல். ஒரு கட்டத்தில் அர்ஜுனுக்கும் அல்லுவுக்கும் கருத்து மோதல்கள்.





அல்லுவுக்கு 21 நாட்கள் சவால் விடப்படுகிறது.

இந்த காலகட்டத்தில் அவருக்கு பல சிக்கல்கள். இதற்கிடையே ஊரில் பெரும் கட்டப் பஞ்சாயத்து பேசி நில மோசடி செய்யும் சரத்குமாருக்கும் இவருக்கும் கடும் மோதல்.



ஆக அல்லு 21 நாள் சோதனையில் ஜெயித்தாரா. மீண்டும் தன் கனவான இராணுவ எல்லையை அடைந்தாரா. அர்ஜுனின் தொலைந்த மகன் கிடைத்தாரா என்பதே மீதிக்கதை.

அல்லு அர்ஜுன் தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகர். அவருக்கு பெரும் ரசிகர்கள் கூட்டம் இருக்கிறது.

தமிழில் அவ்வளவாக படத்தில் நடிக்கவில்லை? இருப்பினும் தமிழ்நாட்டில் அவரின் படம் எப்படி என கேள்வி கேட்கலாம். தன் நடிப்பால் இப்படத்தில் ஸ்டைலிஸ்ட் ஸ்டார் என தனக்கான டைட்டிலை தக்கவைக்கிறார்.

படத்தில் ஒவ்வொரு இடங்களில் அவரின் ஹார்ட் வேர்க் தெரிகிறது. வழக்கமான தெலுங்கு படங்களை போல் இல்லாமல் இப்படம் இயல்பான படம்போலவே இருந்தது.

அர்ஜுன் ஒரு அனுபவம் வாய்ந்த நடிகர். அவருக்கான இடத்தை படம் முழுக்க நிறைவு செய்கிறார். அண்மைக்காலமாக படங்களில் ஸ்பெஷல் ரோலில் வந்து போகும் அவருக்கு சாத்தியமான ரோல் தான்.

நிபுணன் படத்திற்கு பிறகு ஒரு முக்கியத்துவமான ரோல். அவரை கடைசியாக தன் மகளை வைத்து இயக்கிய சொல்லி விடவா ரோல் பெரிதளவில் இடம் பெறாமல் போய்விட்டது.

மூத்த நடிகையான நதியா இப்படத்தில் ஒரு சில காட்சிகள் தான்.

ஆனால் பல வருடங்களாக கண்ணுக்கு தெரியாமல் எங்கேயோ இருந்த மகன் மீண்டு வந்ததும் அப்படியான ஒரு பேரானந்தம் முகத்தில்.

இன்னும் அதே இளமையுடன் அவரை பார்க்கும் போது எம் குமரன் சன் ஒப் மகாலட்சுமி ரோல் கண்முன் வந்து போகலாம்.

சரத்குமார்கல்லாவாக ஊரையே தன் கைக்குள் வைத்திருக்க நினைப்பவர். அவருக்கான ரவுடித்தனம் இப்படத்தில் பெரிதளவில் இல்லை. இயல்பாகவே அமைந்திருக்கிறது. தன்னை பார்த்து பயந்தவர்கள் மத்தியில் கடைசியில் இவருக்கே ஒரு தலை குனிவு இருக்கிறது. மனம் மாறினாரா என்பது தான் சீக்ரட்.

இயக்குநர் வம்சி இப்படத்தில் சொல்ல வந்ததை நிதானமாக சொல்லி புரியவைக்கிறார். ஒளிப் பதிவாளர் காட்சிகள் நகர்த்திய விதம் கதைக்குள் கதையாக மெதுவாக உள்ளே போகவைக்கிறார்கள்.

அல்லுவின் ஸ்டைலிஸான நடிப்பு. ரியல் இராணுவ வீரனாகவே மாறியிருக்கிறார்.

இயக்குநரின் விறுவிறுப்பான கதை நகர்வு சிம்பிளான பயணம்.

காமெடிக்கு ஸ்பெஷல் ஆர்ட்டிஸ்ட் இல்லையெனினும் ஓரிருடபுள் மீனிங் வசனம் ரசிகர்களை திருப்தி.

கதையை இன்னும் கொஞ்சம் சுருக்கியிருக்கலாம் என தோன்றியது.

சில இடங்களில் தெலுங்கு படங்களுக்கே உண்டான ஓவர் எமோஷனல் ஸ்டண்ட் படத்திற்கு பாடல் பெரியளவில் ஈர்க்கவில்லை.

மொத்தத்தில் என் பெயர் சூர்யா என் வீடு இந்தியா நேரம் போவதே தெரியவில்லை. சல்யூட் கொடுக்கலாம்.



# கர்நாடகத் தேர்தல்; பற்றவைத்த பாக். முட்டிக்கொள்ளும் காங்கிரஸ்-பா.ஜ.க.





கர்நாடகத் தேர்தல் பிரசாரம் தீவிரமடைந்துள்ள நிலையில், திப்பு சுல்தானைப் புகழ்ந்து பாகிஸ்தான் அரசு செய்துள்ள டுவிட்டால், காங்கிரஸ் கட்சியும், பா.ஜ.கவும் கடுமையாக கருத்து மோதல்களை வெளிப்படுத்தி வருகின்றன.

இதுநாள் வரை திப்பு சுல்தானைப் புகழ்ந்து டுவிட் செய்யாத திடீரென கர்நாடகத் தேர்தலை கணக்கில் கொண்டு டுவிட் செய்தது பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி இருக்கிறது.

18ஆம் நூற்றாண்டில் மைசூரை ஆண்ட மன்னன் திப்புசுல்தான். அவரின் 218ஆவது நினைவுநாள் இம்மாதம் கடைப்பிடிக்கப்படுகிறது. இதற்காக பாகிஸ்தான் அரசு திப்பு சுல்தானைப் புகழ்ந்து தனது அதிகார பூர்வ தளத்தில் டுவிட் செய்துள்ளது.

பாகிஸ்தான் அரசின் அதிகாரபூர்வ டுவிட்டர் தளத்தில் திப்பு சுல்தான் குறித்து புகழ்ந்து டுவிட் செய்யப்பட்டு இருந்தது. அதில், "இந்திய வரலாற்றில் முக்கியமான, மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய வீரர் திப்பு சுல்தான். ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்து முதன்முதலாக விடுதலைக்காகக் குரல்கொடுத்த வீரர். மைசூரின் புலி" என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேலும், திப்பு சுல்தான் குறித்த வீடியோவையும் பாகிஸ்தான் அரசு தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டது.

கர்நாடகாவில் ஆளும் காங்கிரஸ் அரசு ஏற்கனவே திப்பு சுல்தான் பிறந்தநாள், நினைவு நாளுக்கு விழா எடுத்துச் சிறப்பித்து வரும் நிலையில், இந்த டுவிட்டையும் புகழ்ந்து. ஆனால், பாகிஸ்தான் அரசு செய்த டுவிட்டுக்கு காங்கிரஸ் எப்படி வரவேற்பு தெரிவிக்கலாம் எனக்கூறி பா.ஜ.கவினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

கர்நாடக மாநிலத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி சட்டப்பேரவைத் தேர்தல் நடக்கும் நேரத்தில் பாகிஸ்தான் அரசு இதுபோன்ற சர்ச்சைக்குரிய வீடியோவையும், டுவீட்டையும் வெளியிட்டு பிரிவினையை ஏற்படுத்தப் பார்க்கிறது என்று பா.ஜ.கவினர் குற்றம்சாட்டினார்கள்.


ஆனால், காங்கிரஸ் க ட்சியினரோ தேர்தல் நேரத்தில் பாகிஸ்தானுடன் சேர்ந்து பா.ஜ.கவினர் சதி செய்து, திப்பு சுல்தான் குறித்த வீடியோவையும், டுவீட்டையும் வெளியிட வைக்கிறார்கள். இதன் மூலம் இந்துக்களைத் திரட்டி வாக்குகளைச் சேகரிக்க முயல்கிறார்கள் என்று குற்றம்சாட்டியது.

இதற்கு முன் திப்பு சுல்தான் குறித்து பா.ஜ.கவினர், இந்துக்களுக்கு எதிரானவர். இந்துக்களைக் கொன்று குவித்தவர் என்றெல்லாம் விமர்சித்து இருந்தது.

இதனால், மைசூரு மண்டலத்தில் திப்பு சுல்தானுக்கு பிறந்நாள், நினைவு நாள் கொண்டாட பா.ஜ.க வினர் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித் தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், பா.ஜ.கவினருக்கு போட்டியாக மாநிலத்தில் ஆளும் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் அரசு கடந்த ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 10ஆம் திகதியை திப்பு சுல்தான் பிறந்தநாள் அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என அறிவித்தது. இதனால், திப்பு சுல்தான் பெயரில் காங்கிரசும், பா.ஜ.கவினரும் தொடர்ந்து மோதிக்கொண்டு வந்தனர்.

அந்த மோதல் தீயில் இப்போது பாகிஸ்தான் கொஞ்சம் நெய்யை வார்த்து கொளுந்து விட்டு எரியச் செய்துள்ளது.




# அமைதி திரும்பட்டும்!



கடந்த ஏப்ரல் 27இல் வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்-உன்னும், தென் கொரிய ஜனாதிபதிமூன் ஜே இன்னும் சந்தித்தது சர்வதேச அரசியலில் மிக முக்கியமான நகர்வு. இனிமேல் போர் அபாயம் இல்லை என அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கும் தற்காலிகப் போர் நிறுத்தத்தைச் சமாதான உடன்படிக்கையாக மாற்றத் திட்டமிட்டிருக்கிறார்கள். அமெரிக்கா மற்றும் சீனாவின் உதவியுடன் இந்த ஆண்டு இறுதிக்குள் கொரிய யுத்தத்தை முறைப்படி நிறுத்த முடிவெடுத்திருக்கிறார்கள்.

கொரிய நாடுகளுக்கிடையேயான 2007ஆம் ஆண்டு கூட்டறிக்கையும் கிட்டத்தட்ட இப்போது நடந்த சந்திப்பின் சாராம்சத்தையே கொண்டிருந்தது, அணு ஆயுதப் பிரச்சினை உட்பட. எனினும், வட கொரியா தனது அணு ஆயுதத் திட்டத்தைத் தொடர்ந்தது. 2011இல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர், கிம் தனது நாட்டின் அணு ஆயுதத் திட்டத்தைத் துரிதப்படுத்தினார். ஆனால், வட கொரியாவின் அணு ஆயுத மேலாண்மையை அதிகரிப்பது கிம்மின் முதன்மையான நோக்கமாக இல்லை என்பதும், ஒரு நிரந்தமான விரோதச் சூழலில் வாழ விரும்பவில்லை என்பதும் இப்போது தெளிவாகத் தெரிகிறது.

முதலில், அணு ஆயுதமற்ற புதிய யுகத்துக்கான தனது பிரகடனத்தைத் தென் கொரிய அதிகாரிகளைச் சந்தித்து கிம் தெரிவித்திருக்கிறார். பிறகு, இதுகுறித்து மூனைச் சந்தித்துப் பேசுவதற்கு முன்பாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கைச் சந்தித்து, தனது திட்டம் குறித்து விவாதித்திருக்கிறார். அணு ஆயுதச் சோதனையை நிறுத்தி வைக்கும்படியும் அறிவித்திருக்கிறார். மேலும், வட கொரியாவின் முதன்மை சோதனைத் தளம் விரைவில் மூடப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார். தனது தீவிரத்தை உணர்த்துவதை நோக்கமாகக்கொண்டே இவையெல்லாம் நடந்திருக்கின்றன.

ட்ரம்ப் இந்தச் சந்திப்பை வரவேற்றிருக்கிறார். மேலும், நான்கு வாரத்துக்குள் கிம்மைச் சந்திக்க விரும்புதாகவும் தெரிவித்திருக்கிறார். வாக்குறுதிகள் தந்திருந்தாலும் அமெரிக்கா, சீனா மற்றும் பிற நாடுகளிலிருந்து நம்பகமான உத்தரவாதம் கிடைக்கும் வரை அணு ஆயுதங்களை கிம் கைவிடப்போவதில்லை. தவிரவும், தென் கொரியாவுக்கு அமெரிக்கா தரும் அணு ஆயுத ஆதரவைத் திரும்பப் பெறச் சொல்லியும் அவர் வலியுறுத்துவார் எனத் தெரிகிறது.

ஆனால், கிம்மும் ட்ரம்ப்பும் நேருக்கு நேர் சந்தித்து அணு ஆயுதமற்ற கொரியாவை உருவாக்குவது குறித்து விவாதிக்கவிருக்கிறார்கள் என்ற செய்தி, சமாதான விரும்பிகளுக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கிறது. அமைதியை நோக்கி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் நம் காலத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

# facebook முகநூல்



ஏய்... பவித்ரா மணி என்ன? அம்மா அதட்டலாக கேட்டாள்.

மணி 12 உங்களுக்கு மணி பார்க்கத் தெரியாதா?

அது எனக்குத்தெரியும் மணி 12 ஆகுது தூங்காம அப்படி என்னடி பேஸ்புக்ல பார்த்துட்டு இருக்க.

ஒரு ப்ராயிங் போட்டேன் ஒரு ஸ்டேட்டஸ் போட்டேன் லைக்கும், கமான்ஸ்ம் போட்டு இருக்காங்க அதான் தேங்க்ஸ்னு ரிப்ளே பண்ணிட்டு இருக்கேன்.

ஏண்டி உனக்கு அறிவு இருக்கா எப்ப பாரு பேஸ்புக் பேஸ்புக்" நீங்களும் இதுல அக்கவுண்ட் வைச்சு பாருங்க அப்றம் இப்டி சொல்லமாட்டிங்க. நான் ஒரு கருத்து சொன்னா நூறு லைக் விழும் ஐம்பது கமான்ஸ் விழும் இதெல்லாம் உங்கிட்ட சொன்னா நீங்க கண்டுக்கவே மாட்டிங்க அதனாலதான் பேஸ்புக் போறேன். இது ஒரு தனி உலகம்மா இதுல விழுந்துட்டா திரும்பி வர மனசே வராது. இதுல தான் அம்பானிக்கும் ப்ரண்ட் ரிக்ஹெஸ்ட் கொடுக்கலாம்.

ஏதோ எக்ஸாம் இருக்குன்னு அப்ளிக்கேஷன் போட்டியே ஏதாவது படிச்சியா? முதல்ல இந்த நெட்காட்டு போட்டு பார்க்கிறீயே அது உன்னோட காசு இல்ல முதல்ல நீ சொந்த கால்ள நில்லு. அதுக்கப்புறம் உன் சொந்த கருத்தைப் போடு உனக்கே சொந்த காலில் நிக்க தகுதி இல்லாதப்ப நீ மத்தவங்களுக்கு எப்படி கருத்து சொல்வ.

பேஸ்புக்ல உனக்கு ஐநூறு ப்ரண்ஸ் இருப்பாங்களா. அவங்களுக்கு மட்டும்தான் நீ சொல்ற கருத்து போய் சேரும். நீ எழுதுற கவிதை, கட்டுரை, கதை எல்லாம் பத்திரிகைக்கு அனுப்பினால் பணமும் கிடைக்கும் பாராட்டும் கிடைக்கும். அது எத்தனை பிரதி விற்பனை ஆகுதோ அத்தனை பேருக்கும் அது போய் சேரும்.

அதைவிட்டுட்டு பேஸ்புக்கே கதின்னு கிடக்கிற உன் திறமையை வளர்த்துக்க அதே நேரத்தில் ஒரு நல்ல வேலைய தேடிக்க அதுதான் உன் வாழ்க்கைக்கு நல்லது.

அம்மாவின்பேச்சில்உண்மை இருப்பதை உணர்ந்த பவித்ரா செல்போனை அணைத்து விட்டு தூங்கப்போனாள் மறுநாள் வேலைக்கு ட்ரை பண்ண வேண்டும் என்ற முடிவோடு.

# வீட்டுப்பாடம் செய்யாதபோது...



காலை வகுப்பிலே வீட்டுப் பாடம் செய்யாத பிள்ளைகள் பெஞ்சில் ஏறி நில்லுங்கோ என்று ஆசிரியர் சொல்ல, செய்யாதவர்கள் எழுந்து நின்றார்கள்.

அதிலே ஒரு குழந்தை மட்டும் கொஞ்சம் பாவமாய் அழுமாப் போல நின்றது.

ஆசிரியர் அந்த குழந்தையை இங்கே வாம்மா என்று அழைத்தார். வீட்டுப் பாடம் செய்தியா?

இல்ல சார், எனக்கு அது விளங்க இல்ல வீட்டில அம்மாவிடம்கேட்டிருக்கலாமே குழந்தை தயங்கிய படியே சொன்னது.

எனக்கு அம்மா இல்ல ஆசிரியர்துணுக்குற்று போனார். அடடா அவசரப்பட்டு பெஞ்சில் ஏற்றிவிட்டோமோ என்று வருந்தினார்.

அம்மா இல்லாட்டி அப்பாவிடமாவது கேட்டிருக்கலாமே கண்ணா எனக்கு அப்பாவும் இல்லை சேர்.

குழந்தை பயந்த படியே சொல்ல ஆசிரியருக்கு தூக்கி வாரிப்போட்டது.

அம்மாவும் இல்லாமல் அப்பாவும் இல்லாமல் இந்த குழந்தை என்ன பாடுபட்டிருக்கும்? ச்சே எப்படிப்பட்ட கொடுமையை செய்துவிட்டோம் என்று வருந்தினார். குழந்தையை பார்க்க பார்க்க ஆசிரியரின் கண்கள் கலங்கி விட்டது.


கண்ணம்மா... இங்க பாரு... அம்மாவும் அப்பாவும் இல்லையா? பரவாயில்ல நாங்க எல்லாம் இருக்கிறம் தானே கவலைப்படாதே. அது சரி, வீட்டில நீ யாரோட இருக்கிறாய்?

குழந்தை அதே உணர்ச்சியோடு சொன்னது. மம்மி டாடி யோட.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1404

Search for people, places and things  Nagendram  Home

### அஜந்தன்





### குகதர்சன்




### தர்சிகன்




### கஜரூபன்




### விஜியந்தன்




### விதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 130

# சுற்றாடல் பாதுகாப்பு ஆரோக்கிய மேம்பாட்டினதும் ஆன்மீக மேம்பாட்டினதும் அடிக்கல்



எமது இயற்கை சுற்றாடலை இறைவனாக உருவகித்து போற்றும் மரபு மிகப் பழமையானது. ஆயகலைகள் 64 இல் ஒன்றான மருத்துவக்கலை தோற்றம் பெற்றது.

இயற்கை என்ற இறைவனிடமிருந்து தான் என்று சொல்லப்படுகிறது. இந்த இயற்கை வளங்களை பாதுகாப்பதும் தூய்மைப்படுத்துவதும் ஒரு இறைபணியாகவே கருதப்படுகிறது.

எமது சுற்றாடல் செழிப்படையும்பொழுது எமது மனம் புத்தூக்கம் பெறுவதுடன் சிந்தனை ஓட்டம் மகிழ்வானதாகவும் அமைதியானதாகவும் மாற்றம் பெறுகிறது.

மனிதனின் சிந்தனை ஓட்டத்தில் ஏற்படும் குழப்பமான நிலையே பல உடல் சம்பந்தமான அறிகுறிகளுக்கும் நோய்களுக்கும் அடிப்படை காரணங்களாக அமைகின்றன என்பதை பல ஆய்வுகள் உறுதிசெய்கின்றன.

அனைத்து மதங்களுமே மனிதனின் சிந்தனை ஓட்டத்தை நெறிப்படுத்தி சுகப்படுத்தும்



அற்புதமான மருத்துவக் கலையை கற்பித்து நிற்கின்றன. இயற்கையுடன் ஒன்றிய எமது வாழ்க்கை முறை எமக்கு சுகத்தை அள்ளித் தருகிறது.

அதிகாலையில் எழுந்து குளித்து தோய்த்து உலர்ந்த ஆடை தரித்து கோயிலுக்கு சென்று கோயிலை 3 தடவை வலம் வந்து ஆசனங்கள், அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்து இறைவணக்கம் செய்ய வேண்டும் என்று இந்துமதம் சொல்லுகிறது.

இங்கே உடைச்சுத்தம், உடல் சுத்தம், உடற்பயிற்சி, மன அமைதி என்ற நான்கு சுகாதார அறிவுரைகள் அடங்கி இருக்கின்றன.

இயற்கைக்கு விரோதமான பஞ்சமாபாதங்களை தவிர்க்குமாறு மதங்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றன. இந்த பஞ்சமா பாதங்களில் அடங்கியிருக்கும் கள், காமம் எனப்படுகின்ற மது அருந்துதல் தகாத பாலியல் தொடர்புகள் என்பவற்றைத் தவிர்த்து விடுவதன் மூலம் AIDS போன்ற பல கொடிய தொற்றுநோய்களிலிருந்தும் ஈரல், நரம்புகள் சம்



பந்தமான நோய்களிலிருந்தும் எம்மை தற்காத்துக்கொள்ள முடியும்.

எமக்கு சுவாசக்காற்றை வழங்கிக் கொண்டிருக்கும் மரங்கள் எமக்கு சுகத்தை அருளிக்கொண்டிருக்கின்றன. இயற்கையை கட்டுப்படுத்தும் சக்தியாக இருந்து கொண்டிருப்பது சூரியன் என்பது எமக்குத் தெரியும். சூரிய நமஸ்காரம் எமது வழிபாட்டு முறைகளில் முக்கியமானது. இது காலையில் சூரிய ஒளியிலிருந்து சூரியனை நோக்கி நமஸ்காரம் செய்யும் ஒருமுறையாகும். இதனையே மேலைத் தேச நாடுகளிலே மருத்துவத் தேவைகளுக்காக சன்பாத் என்று செய்து வருகின்றார்கள். இதன் மூலம் பல எலும்பு, பல் சம்பந்தமான நோய்களை தடுக்க முடியும்.

இயற்கை வளங்களை பாதுகாத்து இயற்கையுடன் ஒன்றிய அமைதியான வாழ்வுக்கு பழக்கப்படுவது எமது ஆரோக்கியத்தை மேம்படுத்த உறுதுணையாக அமையும்.

**Dr. சி.சிவன்சுதன்**
**வைத்திய நிபுணர்**

# பிறப்பு - இறப்பு பதிவுகளுக்கு விண்ணப்பிக்கும் பொழுது...

ஒரு மனிதனின் பிறப்புக்கும் வாழ்வுக்கும் அவனின் மரணத்திற்கும் இந்தப் பத்திரங்கள் மிக மிக முக்கியமானவை, இன்றியமையாதவை. அவனின் (வாழ்வுக்கும்) வாழ்க்கைத் தேவைகளுக்கும் மரணத்தின் பின் அவனின் உறவுகளின் வாழ்க்கைத் தேவைகளுக்கும் பிறப்பு - இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மிகவும் அவசியமானவை. இவற்றில் பதியப்படும் பதிவுகளில் ஏதாவதொரு தவறு நிகழும் போது அது அவனின், அவளின் அன்றாட அனைத்துத் தேவைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

அதாவது படிப்பு, பதவி, உதவி, மருத்துவம், குடும்ப விபரம், அரச உதவிகள், ஊக்குவிப்புக்கள் இப்படி இன்னோரன்ன செயற்பாடுகளில் தடங்கல்கள், தாமதங்கள், வீண்விரயங்கள், மீண்டும் மீண்டும் உறுதி செய்துகொள்ளும் சாத்தியக்கூற்றுக்கள், இவைகளை பெற்றுக் கொள்வதற்கான ஆள்தேடல்கள், அலைக்கழிவுகள், இழுபறிகள், வாய்ப்புக்கள் கைநழுவுதல், மனச்சுமைகள் இதனால் உடல் - உளப்பாதிப்புக்கள் என்று தொடர் தொந்தரவுக்கே இடம் தேடிக்கொள்ளும். எனவே இவைகளைக் கருத்திற்கொண்டு உண்மைகளைக் கூறி உரிய முறையில் பதிவுகளை மேற்கொள்ளும்போது மேற்கூறிய அனைத்துச் சிக்கல்களிலும் இருந்து விடுபட்டுக் கொள்ளலாம்.



- பெயர்களைக் கூறிப் பதிவுகளை மேற்கொள்ளும் போது பிறப்பு - இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ளபடி எழுத்துப் பிழைகள் இன்றிப் பதிந்து கொள்வதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
- ஆண்டு, மாதம், திகதிகள் சரியான முறையில் வடிவான முறையான எழுத்துக்களில் எழுதிக்கொள்ள வேண்டும்.
- புதிய பெயர்களைச்சூட்டும் போது பெயர்கள் உரிய முறையிலும், உச்சரிக்கக்கூடிய வகையிலும் தனித்தனியான எழுத்துக்களிலும் மற்றவர்களால் மாற்றி வாசித்துத் தவறாகப் புரிந்து கொள்ளமுடியாத வகையிலும் எழுதிக் கொள்ள வேண்டும்.
- தாய், தந்தை விபரங்களும் இவ்வாறே அவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ளபடி எழுத்துப் பிழைகள் அற்றதாக எழுதிக்கொள்ள வேண்டும். (திருமண அத்தாட்சிப்பத் திரத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும்)
- முகவரியும் முக்கியமானதொன்றாகையால் இதில் பிரிவுகள் உரிய முறையில் பதிந்து கொள்ள வேண்டும்.

பிரதேச செயலரின் பிரிவு, பதிவு சரியான ஒழுங்கில் இருக்கும் போது பிறப்பு, இறப்பு பிரதிகள் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படாது.

எனவே இவைகளைக் கருத்திற்கொண்டு உரிய முறையிற் பதிவுகளை மேற்கொண்டு பிறப்பு - இறப்புப் பத்திரங்களை வழுக்களற்றதாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஜெ.ஜெயந்தன்**
**பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்**
**யாழ். போதனா வைத்தியசாலை.**

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்